# கலைமன்றம்

திராவிடர் முற்போக்கு வார இதழ் ... ஆசிரியர்: யாழ்வண்ணன்

மலர் 1 | 1954 மே 8 | விலை அணா நான்கு | இதழ் 19


# பரசுராமன் பந்தலிலே பல்லாயிரவர் கூடினர்!

## உளம் பறித்த சொற் பெருக்குகள்


MAY 1954

199107


## நலம் பயக்கும் தீர்மானங்கள்!

மே முதல் நாள் காலை சேலம் தெருக்களில் செயல்வீரர்கள் அணி அணியாக சென்றனர். ஆம்! போர் களம்புகும் காளைகளைப்போல புறப் பட்டனர் மாநாட்டு பந்தலைநோக்கி! பெரியபந்தல் ஏறக்குறைய ஐம்பதி! னாயிரம் மக்கள் சாதாரணமாக உட் காரலாம். ஆனால் பந்தலில் மக்கள் நெருக்கமாகவே உட்கார்ந்தனர். காலை 9-மணிக்கு இசைமுரசு நாகூர் அனிபா அவர்கள் இசை முழங்கினார். மாநாட்டு பந்தலில் அமர்ந்திருந்த வர்களின் உள்ளங்களில் வீரமும், நயமும், மாறிமாறி உண்டாக்கினார் தனக்கே உரிய சங்கநாத சிங்கக் குரல் மூலம்.

### திறப்புரை:

சரியாக பத்துமணிக்கு சமூக சீர் திருத்த மாநாட்டை வழக்கறிஞர் திரு பி. ஆர். கோகுல கிருஷ்ணன் B.A., B.L. திறந்துவைத்தார். அவர்பேசும் போது, சமுதாயம் மக்களை எப்படி எப்படி எல்லாம் சகதியில் ஆழ்த்தி வைத்திருக்கிறது. மதமும், மதகுரு மார்களும் மக்கள் சமுதாயத்தை எத்தகைய இழிவான- கீழான நிலைக்கு அழைத்து சென்று அவர் களை மீளவொட்டாமல் செய்துவிட் டனர் என்பதனைச் சுட்டிக்காட்டி னார்.

மேலும் அவர் பேசியதாவது:-

சமுதாயத்தை மாற்றி அமைக்க- புதியதொரு சமுதாயத்தை தோற் றுவிக்க அண்ணாவின் தலைமையில் பணியாற்றும் திராவிட முன்னேற் றக்கழகம் எப்படியெல்லாம் பணி யாற்றி வருகிறது என்றும், யார் ஆஸ்திகர்கள்? யார் நாஸ்திகர்கள்? நல்லவை செப்பவன் நாஸ்திகனா? மக்களை மூடநம்பிக்கையால்ஆழ்த்த செய்பவன் ஆஸ்திகனா? என்ற பல கேள்விகளை கேட்டு நல்ல விளக்கங் கள் தந்தார்.

கடைசியாக:

தி. மு. கழகம் சமுதாயத்தை எப் படியெல்லாம் சீர்திருத்தி வருகி றது. இதிலே மாணவர்கள் எப்படி பங்கு கொண்டு உழைத்தனர். இத் தகைய நல்லதொரு பணியை-அஞ் சாமல்-அயராமல் நாம்செய்யவேண் டும் என்று மக்களைக்கேட்டு மாநாட் டைத் திறந்து வைத்தார்.


ஊடுருவி எழுதியவை

| | | |
|---|---|---|
| 1. | உலகைத் திருத்திய உத்தமர்கள் | 1 0 |
| 2. | ஒளி விளக்குகள் | 1 0 |
| 3. | நாநா | 1 0 |
| 4. | மாஜி கடவுள்கள் | 1 0 |
| 5. | அரசாங்கம் | 1 0 |
| 6. | கலிங்கப்போர் | 1 0 |
| 7. | சீனத்துச்சிங்கம் | 1 0 |
| 8. | தொழிலாளர்கள் | 1 0 |
| 9. | நெப்போலியன் | 1 0 |

விபரங்களுக்கு:
கலைமன்றம் - சென்னை-1


★ திராவிட நாடு திராவிடருக்கே ★

# இந்நாட்டில் முதல் முதலில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தது நாம்தான்

## சமூக சீர்திருத்த மாநாட்டில் தோழர் ஜே. பி. சோமசுந்தரம் வரவேற்புரை

சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக சமூக சீர்திருத்த மாநாடுகளின் பிரதிநிதிகளே, பார்வையாளர்களாய் இங்கே அமர்ந்து இருக்கும் பெரியோர்களே, தாய்மார்களே உங்கள் அனைவரையும் இம்மாநாட்டு வரவேற்பு குழுவினரின் சார்பில் உளங்கனிந்த நன்றியுடன் வரவேற்கின்றேன்.

திராவிட முன்னேன்ற கழகத்தினர் நடத்தும் இந்த சமூக சீர்திருத்த பணியினை பல ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கி வைத்து நமக்கெல்லாம் வழிகாட்டிகளாய் விளங்கினோர் பலர். காலம் சென்ற மூதறிஞர் தியாகராயர் அவர்கள் காலமுதல், இந்த நாட்டு மக்கள் சமுதாயத்தினிடையே காணப்படும் பேதங்களை அகற்றி திராவிட நாட்டில் ஓர் உன்னத ஒப்பற்ற சமுதாயத்தை அமைப்பதில் நாம் பெரும் பங்கு கொண்டுள்ளோம். அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்ற கழகத்தினராகிய நாம் இந்த நாட்டில் பன்னெடுங் காலமாய் வேரூன்றிப் போயுள்ள ஜாதிமுறையையும், சமய பேதங்களையும், மத மாச்சரியங்களையும் போக்குவதில் மற்று எவரையும்விட, நாம் நமதுமுழுவன்மையையும் செலுத்துகிறோம்என்றுமகிழ்ச்சியுடன் சொல்லிக்கொள்கிறேன். இந்தத்திராவிடநாட்டில், ஏன்இந்தியஉபகண்டத்திலும் சமுதாய முன்னேற்றத்திற்காக பணிபுரியும் இயக்கம் ஒன்று உள்ளது என்றால் அது திராவிட. முன்னேற்றக் கழகம்தான் என்று கூறுவது மிகையாகாது. பிறப்பிலே பேதமும், வாழ்வில் வளம் காண முடியாத சமூக அநீதிகளிடையே, உயர்வு தாழ்வு கூடாது. பிறப்பிலே பேதம் இல்லை உலகிலே பிறக்கும் மனிதன் சம உரிமையுடன் ஆண்டான் அடிமை உயர் வகுப்பான், தாழ்ந்த குலத்தான் என்ற வேறுபாடுயின்றி தன்தகுதியால் திறமையால் உயர்ந்த வாழ்வு பெற்று தான் பிறந்த நாட்டின் நாகரிகத்தையும், பண்பாடுகளையும் காக்க வேண்டும் என்று இந்நாட்டில் முதல் முதல் பகுத்தறிவு பிரச்சாரம் செய்தது நாம் தான்.

நாம் வாழும் இத்திரு நாட்டில் சமுதாய மறுமலர்ச்சிக்காக தங்கள் வாழ்வினை ஒப்படைத்த சமுதாய சிற்பிகளுக்கு நான் இந்த சந்தர்ப்பத்தில் நன்றி செலுத்துகிறேன். இன்று நடைபெறும் இந்த மாநாட்டில் நமது மக்களை மடமையில் மூழ்கடித்த புராணங்களையும் அவைகளில் நிரம்பிக் கிடக்கும் மூடக்கருத்துக்கள் நம் நாட்டில் உண்டாக்கிய சீர்கேடுகளையும், கேட்கப் போகிறீர்கள். அதேநேரத்தில் புதுமைக்கருத்துக்களை உலகில் எடுத்துச் சொல்லிய உத்தமர்களையும் அவர்தம் கோட்பாடுகளையும், சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும், அந்த மாறுதல்களை உண்டாக்கிய சமுதாய வீரர்களின் வாழ்க்கையின் சரித்திரத்தையும், இங்கே வந்துள்ள சொல் ஓவியர்கள் உங்களுக்கு எடுத்துச் சொல்வார்கள்.

தோழர்களே! சமுதாய மறுமலர்ச்சி வேண்டும் என்று கூறும் நாம், நாட்டின் மற்றைய ஆரசியல் பொருளாதார பிரச்சனைகளையும் ஒதுக்கி தள்ளி விடுவதில்லை. எந்த நாட்டு சமுதாயம், உன்னத சமுதாயமாக உயர்ந்த கோட்பாடுகளை தன்னிடம் கொண்டுள்ளதோ அந்த சமுதாயம்தான் புதியஅரசியல்கருத்துக்களை ஏற்றுக்கொண்டு நாட்டுமக்களை நல்ல பாதைக்கு அழைத்துச் செல்ல தகுதி பெற்றதாகவும் சமுதாய மறுமலர்ச்சி அரசியல் விடுதலையின் விடிவெள்ளியாகும். திராவிட நாட்டின் விடுதலைப் போரை நடத்தும் நாம் நாட்டின் ஆணிவேர் போன்ற சமுதாயத்தினை திருத்தியமைக்க விரும்புகிறோம்.

இம் மாநாட்டில் கலந்து கொள்ளும் உங்களுக்கு மிகப் பெரிய பொறுப்புக்களும், கடமையும் உண்டு. வருங்கால சமுதாயத்தை அமைக்கும் பொறுப்பு உங்களிடம் தான் உளது. நாம் செய்யும் பணி சாதாரணமானது அல்ல. ஏற்கனவே உள்ள சமூக அமைப்பினையும் அதில் காணப்படும் கோணல் கருத்துக்களையும், களைந்து விட்டு மறுமலர்ச்சிப் பாதையில் திராவிட நாட்டு சமுதாயத்தை நாம் அழைத்து செல்ல வேண்டும். அப்பணியினை செய்ய அறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு வழிகாட்டியாய் உள்ளார்கள். கிடைத்தற்கரிய அப்பேரறிஞரின் பாதையில் செல்ல வேண்டியது நமது கடமையாகும். அக்கடமையினை செய்ய வாரீர் வாரீர் என்று உங்களை அழைக்கிறேன்.

இன்று நடைபெறும் இந்த சமூக சீர்திருத்த மாநாட்டினையும், நாளை நடக்க விருக்கும் அரசியல் மாநாட்டினையும் சிறந்த முறையில் நடத்திதரவேணும் என்று கேட்டுக்கொள்கிறேன். இம் மாநாட்டில் எங்கள் வேண்டுகோளுக் கிணங்கி சொற்பொழிவாற்ற வந்திருக்கும் திராவிட முன்னேற்ற தலைவர்களையும், சட்டசபை உறுப்பினர்களையும், கலைஞர்களையும், உங்கள் அனைவரையும் இம் மாநாட்டு வரவேற்புக் குழுவினர் சார்பில் வரவேற்கிறேன். வணக்கம்.


ஊடுருவி — எழுதியவை

1. வீரமங்கை ஜோன் 10
2. ரோமியோ-ஜூலியத் 10
3 லைலா—மஜ்னு 10

விபரங்களுக்கு:
கலைமன்றம்—சென்னை-1

# மற்றவர்கள் கற்காலத்தில் வாழ்ந்தபோது பொற்காலத்தில் வாழ்ந்தோம், அன்று!

## இன்று மற்றவர்கள் பொற்காலத்தில் வாழ்கிறார்கள் நாம் கற்காலத்தில் வாழ்கிறோம்!

### சேலம் சமூக சீர்திருத்த மாநாட்டில் ப. உ. சண்முகம் அவர்கள் தலைமையுரை!

அறிஞர் அண்ணா அவர்களே, தோழர்களே, தாய்மார்களே! வணக்கம்!

இன்றைய சமூக சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை வகிக்கிறேன். என்னை வழிமொழியுமுகத்தான், தோழர்கள் சில சில சொன்னார்கள்; தோழர் நெடுஞ்செழியன் பலப்பல கூறினார்.

நான் நகர சபைத் தலைவனாக இருந்தபோது அரசியல் நாகரிகம் தவறாதவனாக நடந்தேன் என்று குறிப்பிட்டார்.

நான் அரசியல் நாகரிகம் தவறி நடக்கவில்லை என்றால், அதற்கு காரணம் அண்ணாவின் தலைமையில் பணியாற்றுவதுதான். நான் மட்டுமல்ல, அண்ணாவின் தலைமையின்கீழுள்ள எவருமே அரசியல் நாகரீகம் தவற மாட்டார்கள். காரணம், அண்ணா அரசியல் நாகரீகத்தை அலட்சியப் படுத்தாதவர். தலைவரைப் போல்தான், தோழர்களும் இருப்பார்கள்.

சமூக சீர்திருத்த மாநாட்டை திராவிட முன்னேற்றக் கழகம், அரசியல் மாநாட்டிற்கு முன்பு கூட்டுகிறது. அரசியலோடு சமுதாயத்தை நாம் சீர்திருத்துகிறோம். சமுதாயத்தில் உள்ள கேடுகளைக் கண்டு—அவை எவ்விதம் உண்டானதென்று கண்டு அவற்றைக் களைகிறோம். ஆனால் நம்மை 'நாத்திகர்கள்-வகுப்புவாதிகள்' என்று மாற்றார் கூறுகிறார் என்று திறப்புரையில் கூறினார், தோழர் கோகுல கிருஷ்ணன்.

அப்படித்தான் தூற்றுவார்கள் நம்மை! மரத்தில் கனிகள் பழுத்துத் தொங்குகின்றன என்றால், மற்றவர் கல்லை விட்டெறியத்தானே செய்வார்கள். வளர்ந்திருக்கும் நமது கழகத்தைக் கண்டு பொறாமை கொண்டவர்கள் சொல்லால் அடிக்கிறார்கள். நாம் பயப்படக் கூடாது. பயமின்றி பணியாற்ற வேண்டும்.

நாம் பயப்படுமினத்தைச் சார்ந்தவர்களல்ல! 'கல்தோன்றி மண் தோன்றா காலத்தில் வாளொடு முன் தோன்றிய 'மூத்த குடி' என்று இலக்கியம் கூறுகிறது. வையத்தின் பிற்பாகத்தில் வாழ்ந்தவர்கள் நெருப்பையறியாத காலத்தில், உலைக் கூடத்தில் வில்லும், வேலும் உருவாக்கிய இனத்தவர் நாம். மற்றவர்கள் மிருகங்களைப் போல மலைக் குகைகளில் வாழ்ந்த நேரத்தில், கோட்டை கொத்தளம், மாட, மாளிகைகள் கட்டி வாழ்ந்தவர்கள் நாம்.

பிரிட்டனிலிருந்தவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்ததிற்கு, வெகுகாலத்திற்கு முன்பே, கடலில் கலம் செலுத்தி, கடலின் மடியில் கிடந்த முத்துக்களை மூழ்கி எடுத்தவர்கள் நாம். ரோம், எகிப்து முதலிய நாடுகளுக்கு, அகில், தேக்கு முத்து ஆகியவற்றை ஏற்றுமதி செய்தவர்கள் நாம். மற்றவர்கள், மானத்தைக்காக்க—உடலை மறைக்க, மரப்பட்டைகளையும், இலைகளையும் அணிந்த நேரத்தில், பட்டாடைகளையும், எலி உரோம ஆடைகளையும் அணிந்தவர்கள் நாம்.


ஆசைத்தம்பி—எழுதியவை

| | | |
|---|---|---|
| 1. முள் | 1 | 0 |
| 4. மனைவி | 0 | 12 |
| 2. தனியரசு ஏன்? | 1 | 0 |
| 3. கொலைகாரி | 0 | 12 |
| 5. அவள் வாழ்வு | 0 | 8 |
| 6. சிலந்திக்கூடு | 1 | 0 |

விபரங்களுக்கு:
கலைமன்றம் - சென்னை-1


ஆரியர்கள் மத்தியாசியாவிலிருந்து ஆடு மாடுகள் மேய்த்துக் கொண்டு வந்த நேரத்தில் நாடாண்டவர்கள் நாம்.

வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் முதல் பக்கத்தில் கற்காலம் என்றிருக்கும். மற்றவர்கள் கற்காலத்தில் வாழ்ந்தபோது, நாம்—திராவிடர்கள்—தென்னாட்டவர்கள் பொற்காலத்தில் வாழ்ந்தவர்கள்.

மற்றவர் கற்காலத்தில் வாழ்ந்தபோது நாம் பொற்காலத்தில் வாழ்ந்தோம். ஆனால், இன்று, மற்றவர்கள் பொற்காலத்தில் வாழ்க்கையிலே, நாம் கற்காலத்தில் கிடக்கிறோம். பரிதாபமான நிலை! ஏன் வாழ்ந்த நாம் தாழ்ந்தோம்? எவரால் விளைந்தது இந்தக்கேடு?

அன்று—நாம் பொற்காலத்தில் வாழ்ந்தநேரத்திலே புலவர் 'ஒன்றே குலம்' என்று பாடினார். ஆனால் இன்றைய பாரதியார் 'ஆயிரம் உண்டிங்கு ஜாதி, எனில் அன்னியர் வந்து புகலென்ன நீதி?" என்று பாடினார்.

அன்றைய புலவர் 'ஒருவனே தேவன்' என்று எழுதினார். இன்றைய பாரதி "ஆயிரம் தெய்வங்கள்

# சமுதாயம் சீர்திருந்துவதற்குமுன் ஏற்படும் பொருளாதார சமத்துவம் நீடிக்காது!

உண்டெனத்தேடி அலையும் அறிவிலி காள்'' என்று பாடினார்.

"இறந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக இவ்வுலக இயற்றியான்'' என்று பாடினார், அன்றைய வள்ளுவர். ஆனால் பிறகு வந்த பட்டினத்தார் "வாயற்படி கடந்து வாராத பிச்சைக்கு ஆசைப்படுவதில்லை', என்று பாடினார்.

அன்றைய ஔவையார் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றுஎழுதினார். இன்றைய ஜெமினி ஔவையார் "விநாயகனைத் தொழுதால் விக்கினங்கள் விலகும்'' என்றுரைக்கிறார்.

இப்படி வாழ்வு சரிந்து, தேய்ந்தது! வாழ்ந்தவர் தாழ்ந்தோம். டார்வின் தியரிப்படி பண்டிதரின் இனத்தினர் குரங்குகளாக வாழ்ந்தபோது, நாம் மனிதர்களாக வாழ்ந்தோம்.

நம்மை இன்று பண்டிதர் நேரு 'பைத்தியக்காரர்கள்—முட்டாள்கள். காட்டுமிராண்டிகள்' என்று கூறுகிறார்! வாழ்விழந்த நம்மை வைகிறார்!

நாம் ஏன் வாழ்விழந்தோம்? மற்றவர்கள் கூறுகிறார்கள், 'மதப்பற்றில்லை—மகேசனிடம் பக்தியில்லை' என்று. பக்தி குறைவா, காரணம் நம் தாழ்வுக்கு?

உண்மையில் இங்கு பக்தியா குறைந்து விட்டது? இல்லை! இல்லை! நிச்சயமாக இல்லை!

நம்மிடமிருந்த பக்தி, வேறு எவரிடமுமிருந்ததில்லை.

வேறு நாட்டவர்கள், செலுத்தாத அளவில் நாம் ஆண்டவனிடம் அன்பு செலுத்துகிறோம். ஆண்டவனுக்காக யாருமே எழுப்பாத அளவுக்கு ஆலயங்கள் எழுப்பினர், இங்கிருந்தவர். அதற்காக புராணங்கள்-பாகவதங்கள் ஏற்படுத்தினர்.

பக்தி குறைவா இந்நாட்டில்?

இந்த நாட்டில் இருந்ததைப் போல பக்தர்கள் வேறெந்த நாட்டிலும் இல்லை. இந்த நாட்டிலே பக்தர்கள் செய்த தியாகத்தைப் போல வேறெந்த நாட்டிலும் எவரும் செய்திருக்க மாட்டார்கள்.

பிள்ளைக்கறி கேட்டான் பரமன். இல்லை எனத் தடை சொல்லாமல், படைத்தான்,

கண்ணைக் கேட்டார் கடவுள்-கண்ணைக் கொடுத்தான், கண்ணப்பன்.

இதைப் போன்றவைகளை, ஒரு வேளை பிறநாட்டுப் பக்தர்கள் கூட செய்திருக்கலாம். ஆனால்' வேறெவரும் செய்யாத—செய்யத் துணியாத அளவு 'தியாகத்தை' இந்த நாட்டுப் பக்தர்கள் செய்திருக்கிறார்கள்' மனைவியை மாற்றானுக்குக் கொடுத்ததாக வேறு நாட்டில் கேள்வி பட்டதுண்டா?

இங்கே வள்ளாள மகாராஜா செய்திருக்கிறான். இதை அண்ணா அவர்கள் அருமையாக எடுத்துக் கூறியுள்ளார்.


ஆண்டவன் துறவி கோலத்தில் வந்தான். 'பசி' என்று கேட்டான். மன்னன் 'புசி' என்று உணவு கொடுத்தான். வயிற்றுப் பசியல்ல எனக்கு. காமப்பசி 'என்றுரைத்தான். மன்னன் உடனே காமப்பசித் தீர்க்க ஒரு தாசியை அழைத்து வரும்படி கூறினான். ஆண்டவனின் ஏற்பாட்டின்படி, அன்று எல்லோருக்கும் 'கிராக்கி'

மன்னனுக்கு உல்லாசி—சல்லாபி என்று மனைவியர் இருவர். கொடுத்த வாக்கைக் காக்க இருவரில் ஒருவரைத் துறவியின் காமப்பசித் தீர்க்க அனுப்பினான். இப்படிப்பட்ட 'பக்தர்கள்' இருந்திருக்கிறார்கள்.

முஸ்லீம்களிலும் இப்படி ஒரு பக்தர் உண்டு. முகமதியர்கள் கோபம் கொள்ளக் கூடாது! புராணத்தில் இருப்பதை எடுத்து வைக்கிறேன்.

கபீர்தாஸ் என்று ஒரு இராம பக்தர். அவர் வருட முழுவதும் சேர்த்த பணத்தைக் கொண்டு, இராம நவமியில் பக்தர்களுக்குச் சோறிடுவார்.

ஒரு வருடம், கபீர்தாஸிடம் பணமில்லை, என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்தார். அப்போது நீருக்குச் சென்ற அவர் மனைவி குடத்துடன் வந்தாள். கண



# நல்லதொரு சமுதாயமாக மாற்ற வாரீர்

வனிடம் 'மூலக்கடை சேட் என்னைப் பார்த்துக் கண்ணடித்தான்' என்று சொன்னாள்.

கபீர் கேட்டார் "உன்னைப் பார்த்தா? சேட்டா கண்ணடித்தான்!" கவலையோடு அல்ல, களிப்போடு பக்தர்களுக்கு அமுது படைக்க தேவையான பணத்திற்குவழி கண்டு பிடித்து விட்டார்.

உடனே-மனைவிக்குப் புத்தாடை அணிவித்தார். பூக்கள் சூட்டினார். சேட் வீட்டிற்கு அவளை அழைத்துச் சென்றார். அன்று மழை. அதனால் வீதியிலே சேறிருந்தது. சேறு பாதங்களில் பட்டால், 'அசிங்கமாக இருக்கிறாள்' என்று ஒருவேளை சேட் 'வேண்டாம் போ' என்று சொல்லி விடுவாரே என்று பயந்து, தன் துணைவியைத் தோள்மேல் தூக்கிக் கொண்டு சேட் வீட்டிற்குச் சென்றான். அவன் முன் அழகு மனைவியை நிற்கவைத்தான். அவளுக்காகப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, சேட்டின் 'பசி'க்காக அவளை விட்டு விட்டு வீடு வந்தான். மறுநாள் இராமநவமியில், பக்தர்களுக்குச் சோறு போட்டான்.

இன்னொரு வருடமும் நாட்டிலே பஞ்சம். கபீருக்குக் கையிலே காசியில்லை, அன்னதானம் செய்ய! என்ன செய்வதென்று யோசித்தான். இந்த முறை ஆண்டவன் கொஞ்சம் கடுமையாகவே சோதித்தான். கபீரும், அவன் மகனும் செட்டியார் கடையில் புகுந்து திருடினர். போதிய சாமான்களுடன் வெளியே வந்தனர். மகன் கொஞ்சம் புத்திசாலி! அவன் "அப்பா! நாம் இராமநவமிக்காகத் திருடினோம். அதனால் பாவமில்லை. ஆனால் நாம் கன்னக்கோலால் உண்டுபண்ணிய வழியில் வேறு யாராவது புகுந்து திருடினால், செட்டியாருக்கு நஷ்டமல்லவா?" என்று சொன்னான்.

"ஆமாம் மகனே! நீ உள்ளேபோய் செட்டியாரை எழுப்பி விட்டு ஓடி வந்துவிடு" என்று கபீர் சொன்னான்.

மகன் உள்ளே சென்றான். செட்டியாரை எழுப்பினான். ஓடி வந்தான். ஆனால் எழுந்த செட்டியார் துரத்திக்கொண்டு வந்தார். மகன் வந்த வழியில் தலையை நீட்டினான். அதைக் கபீர் பிடித்துக் கொண்டார். ஓடி வந்த செட்டியார், அவன் காலைப் பிடித்துக் கொண்டார்.

இந்த நிலையில் மகன் "அப்பா! விஷயம் வெளியில் தெரிந்தால் மானம் போய் விடும். என் தலையை அறுத்துக் கொண்டு வீட்டுக்கு போங்கள்" என்றான். உடனே கபீர் மகன் தலையைக் கொய்து கொண்டு வீடு சென்றார். அதை மறைத்து வைத்துவிட்டு பக்தர்களுக்கு சோறு படைத்தான்.

இப்படிப்பட்ட பக்தர்கள் இந்த நாட்டிலே இருந்திருக்கிறார்களென்று புராணமும், மற்றவைகளும் கூறுகின்றன.

ஆரியர்கள் இந்த நாட்டில் நுழைந்த போதே அவர்கள் கலாச்சாரத்தை—நாகரிகத்தை இந்த நாட்டார் கேலி செய்திருக்கிறார்கள். புறநானூற்றிலே வரும் ஒரு பாடல் இதை விளக்குகிறது.

ஒரு பெண் சன்னல் வழியாக வெளியே பார்க்கிறாள். வீதியிலே ஒருவன் குதிரை மீது செல்கிறான். அதைக் கண்டதும் அவள் சிரிக்கிறாள். குமரி சிரிப்பதைக் கண்டதும் அவள் தாய் 'என்னடி அங்கே சிரிப்பு?' என்று கேட்கிறாள். "வீதியிலே ஒருவன் குதிரை மீது போகிறானம்மா?" என்றாள் மகள். "அவனைப் பார்த்து ஏன் சிரித்தாய்" என்று கேட்டாள். "அவனைப் பார்த்து சிரிக்கவில்லையம்மா! குதிரையைப் பார்த்துச் சிரித்தேன்" என்றாள் அவள். "குதிரையைப் பார்த்தா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் தாய். "ஆமாம்! அதுவும் குதிரை ஓடிப்போகும்போது பிடரி மயிர் ஆடுகிறதே அதைப் பார்த்துச் சிரித்தேன்" என்றாள். "அதில் என்னடி சிரிப்பு" என்று கேட்டாள். "இல்லையம்மா! அது ஆடுவது ஆரியனின் தலையிலே இருக்கும் குடுமி





யாடுவதைப் போல இருந்தது. அதற்காகச் சிரித்தேன்" என்று கூறிவிட்டுச் சிரித்தாள். இப்படி பழந் தமிழர்கள் ஆரியரின் பழக்க வழக்கங்களைக் கிண்டல் செய்துள்ளனர்.

இந்த நாட்டிற்கு ஆடுமாடு மேய்த்துக்கொண்டு வந்த ஆரியர்கள், நாட்டையும்—நாடாள்வோனையும் பார்த்தார்கள். காவலர்கள் கவிகளுக்கு மதிப்பளிப்பதைக் கவனித்தார்கள். புறவலர்கள் புலவர்களுக்குத் தந்ததைப் போல பொன்னோ பொருளோ, மதிப்போ, மரியாதையோ வேறு யாருக்கும் தந்ததில்லை. இதைப் பார்த்துத் தான், ஆரியர்கள் தமிழைக் கற்று புலவரானார்கள். அப்படி மாறினவர்கள் தான், கபிலர், சம்பந்தர் முதலியவர்கள்.

அதன் பின் அரசியலமைச்சர்கள் மெதுவாக ஆரியத்தைப் பின்பற்றினர். அதன் விளைவு தான் தாயுமானவரும், மாணிக்க வாசகரும் சைவ சிகாமணிகளாக மாறினர். படைத் தலைவர்கள் கூட ஆரியத்திற்கு அடிபணிந்தனர். அப்படிப் பணிந்தவர்கள் சிறுதொண்டராக மாறிய பரஞ்சோதி போன்றவர்கள்.

இப்படி எல்லோரும் ஆரியத்தைப் பின்பற்றி பக்தர்களாக மாறினர். இந்த நாட்டிலே பக்தி குறைவு என்று எப்படிச் சொல்ல முடியும். பக்தி குறைவுதான் நாட்டின் அழிவுக்கு காரணம் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?

நாடு நல்ல நிலை பெறவேண்டுமானால், கிராமத்தை சீர்திருத்த வேண்டும், கிராம புனருத்தாரணம் வேண்டும் என்று காந்தியாரின் சீடகோடிகள் சொல்கிறார்கள். கிராமத்தைச் சீர்திருத்தி விட்டால் மட்டும் போதுமா? சாதி மத வேறுபாடுகள் நீங்குமா? நிச்சயம் நீங்காது.

புலியைக் காட்டிலிருந்து பிடித்து கூட்டிலே போட்டால், அது குறிப்பிட்ட இடத்திலே உலவுமே தவிர அதன் கொடிய குணம் குறைந்துவிடுமா? கிராம புனருத்தாரணத்தால், சில சேரிகள் வேண்டுமானால் சீர்திருந்தலாம்! வரண்ட தலைக்குச் சிறிது எண்ணெய் கிடைக்கலாம். அசுத்தமான இடம் சிறிது சுத்தம் செய்யப் படலாம். ஆனால் அதனால் பேதம் நீங்குமா? மூட நம்பிக்கைப் போகுமா? விஞ்ஞானம் வளருமா?

கிராமத்திலே ட்ராக்டர் வரவழைக்கிறார்கள். விஞ்ஞானம் கண்டுபிடித்த சாதனம் அது. ஆனால் அதை எப்படி உபயோகிக்கிறார்கள்? நல்ல நாள் பார்த்து, பூமாலை போட்டு, பொட்டிட்டு, சூடம் கொளுத்தி, தேங்காய் உடைத்து, அதன் பின் அதை உபயோகிக்கிறார்கள்.

கிராமத்திலே பல ரேடியோ திறப்பு விழாவுக்கு என்னை அழைத்திருக்கிறார்கள். நான் அங்கே போவேன். அறிவியல் கண்ட அந்த சாதனத்திற்கு பூமாலை போட்டு பொட்டிட்டு ஆரம்பம் செய்வார்கள்.

மேலே பறக்கிற விமானத்தை ஒருவன் காட்டினால், மற்றவன், "இது என்ன புதியதா? பழைய காலத்தில் இல்லையா?" என்று கேட்பான். இல்லை என்றால், அவனுக்குக் கோபம் வரும் 'சீதையைத் தூக்கிக் கொண்டுபோக இராவணன் ஏறி வந்த அந்த புஷ்பக விமானம தெரியாதா? அதைப் போலத்தான் இந்த ஏரோப்பிளேன் பண்ணினர். ஒலிபெருக்கில் பேசினால், அதைக் கண்டுபிடித்தது யார் என அறிய கவலைப்படமாட்டான். மின்சாரம் எங்கிருந்து கிடைக்கிறது? யாரும் அறிய ஆசைப்படமாட்டார்கள்?

இந்த நிலையை காந்தியின் சீடகோடிகள் கிராம புனருத்தாரணத்தின்மூலம் மாற்றியமைத்து விடுவார்களா என்று கேட்கிறேன்.

அடுத்து பொருளாதாரத்தில் சமத்துவம் ஏற்பட்டால்போதும், எல்லாம் மாறும் என்கிறார்கள் சில தோழர்கள். சமுதாயம் சீர் திருந்துவதற்குமுன் ஏற்படும் பொருளாதார சமத்துவம் நீடிக்காது! உருப்படாது! முதலில் சமுதாயம் திருந்த வேண்டும்.

இன்று சமுதாயத்தில் படிக்காத பாமரர்கள்தான் மூட நம்பிக்கையில் உழல்கிறார்கள் என்று கூறுவதற்கில்லை. படித்தவர்களும் அப்படித்தான் இருக்கிறார்கள். படிக்காதவன் பட்டை நாமம் போட்டால், படித்தவன் சிறிய—மெல்லிய கோடுபோல நாமம் போட்டுக் கொள்கிறான். இரண்டும் கண்டிக்கப்படவேண்டியவைதான்.

சென்னையிலே சென்ற ஆண்டிலே புதிய சைக்கிள் கம்பெனி ஆரம்பித்தார் ஆற்காட்டு முதலியார். அதில் தயாரித்த முதல் சைக்கிலை எடுத்துக்கொண்டு திருப்பதிக்குச் சென்றார். புதியதாக மலையில் போடப்பட்டிருக்கும் பாதையில் ஏறி இறங்க திருப்பதி பெருமாளுக்குப் பரிசாகக் கொடுத்தார் அதை.

எப்படியிருக்கிறது இந்த நாட்டின் நிலை?

மேல் நாட்டிலே ஒருவன்—நியூடன் மரத்திலிருந்து ஒரு பழம் அறுந்து கீழே விழுந்ததைப் பார்த்தான். "அது ஏன் அறுந்ததும் கீழே விழுந்தது? ஏன் மேலே போகவில்லை" என்று யோசித்தான். அதன் முடிவாக பூமிக்கு இழுக்கும் சக்தி உண்டெனக் கண்டான்.

அதைப்போல இங்கேயும் பழம் அறுந்த கதை ஒன்றிருக்கிறது. பாரதத்திலே அப்போது அருச்சுனன் அம்பாலடித்து வீழ்த்திய மாங்கனி, மரத்தின் அடியிலிருக்

[8-ம் பக்கம் பார்க்க]

பம்பாய்

**திராவிட முன்னேற்றக்கழக**

**மாபெரும் பொதுக்கூட்டங்கள்**

மே **8, 9,** சனி ஞாயிறுகளில்

*தாராவி தட்டிவாடி மைதானத்தில்*

மாலை **6-30** மணிக்கு

முதல் நாள் தலைவர்:

சு. வள்ளிநாயகம்

கொடியேற்றுபவர்:

கே. கே. இராமநாதன்

வரவேற்பாளர்:

உ. அ. செல்லையா

இரண்டாம் நாள் தலைவர்:

எஸ். தியாகராசன்

இரு நாட்களிலும்

*சிந்தனைச் சிற்பி*

**சி. பி. சிற்றரசு**

பேசுவார்

*அனைவரும் திரண்டு வருக*

செயலாளர்கள்.

# சமூக சீர்திருத்த மாநாட்டில் இயக்கத் தோழர்களின் வீர முழக்கம்

அ. பொன்னம்பலனர்

மதம் மக்களுக்கு நன்மை செய்ய வில்லை. மதத் தலைவர் உயர்ந்தனர். மதத்தால் பாவம், கொலை, பொய் — எது ஒழிந்தது? புராணக்கதை களால் என்னப் பயன்? நல்லவை களா போதிக்கிறது? இல்லை. தவறு செய்தால் மன்னிக்கப்படும். எவ் வளவு பெரிய பாபம் செய்தாலும், 'ராம' 'கோவிந்தா' என்று சொன் னல் போய்விடும் என்று மதம் கூறுகிறது. இயற்பகைநாயனர், இறைவன் கேட்டபடி மனைவியைக் கொடுத்தார். இன்று இப்படிச் செய்ய எத்தனைச் சிவனடியார் தயார்? சிறுதொண்டர் கதைப்படி நடக்க எத்தனை பேர் சித்த மாக இருக்கிறார்கள். புராணக் கதைப்படி நடந்தவைகளுக்கும் அன்று பரிசாக மோட்சம் கிடைத் ததாம். இன்று அவ்விதம் நடந் தால்—மகனைக் கொன்ருல்-சட்டம் தண்டிக்கும்.

புராணங்கள், மக்களின் அறி வைச் சுருக்குவதாக உள்ளனவே தவிர, அறிவைப் பெருக்குவதாக இல்லை. அதனல், மதம் மக்களுக்கு நன்மை செய்வதாக இல்லை என்று நாம் கூறுகிறோம்.

மதம் அறிவுக்கு விருந்தாக இல்லை, மாருக, கேடு செய்வதாக உள்ளது. இதை நாம் உணர வேண்டும்.

அரங்கண்ணல்

இன்றைய தினம், பிரிட்டனில் சர்ச்சில் அனுமதித்திருந்தால், அங் குள்ள தொழிலாளர்கள், மே தினம் கொண்டாடிக் கொண்டிருப்பார் கள். அமெரிக்காவிலே ஐசன்ஹோ வர் அனுமதித்திருந்தால், தொழி லாளர்கள் தங்கள் குறைகளைக் கூடிப் பேசிக்கொண்டிருப்பார்கள்.

இன்றையதினம் நாம் இங்கு, மாநாட்டில் கூடியிருக்கிறோம். வழக் கமாக மே தினத்தில் நம் தோழர் கள் பலப்பல ஊர்களில் பேசி யிருப்பார்கள். ஆனல் முதல் தடவையாக மேதினத்தில் எல்லோ ரும் ஒன்ருக ஒரே மேடையில் இருக்கிறோம். நாம் வழக்கமாகக் கொண்டாடும் மேதினத்தை மறந்து விடவில்லை. அதனல்தான் நான் இன்றையதினம் என்பதைப்பற்றி பேசுகிறேன்.

உலகத்தின் முன்னே யிருக்கிற பிரச்சினைகளையும், நாம் சாதிக்க வேண்டியவைகளையும் இன்று எண் ணிப் பார்க்கவேண்டும். எத்த னையோ நாள்களைப் போலில்லாமல், மே தினம் முக்கியத்துவம் வாய்ந்த தாக இருக்கிறது.

ஐசுவரிய பூமியான அமெரிக்கா விலேதான் தொழிலாளர்கள் எட்டு மணி நேரம் உழைப்பைக்கொடு என்று கேட்டார்கள். அவர்கள் வாயால் கேட்டார்கள். அரசாங்கம் துப்பாக்கியால் பதில் சொல்லியது. அன்று அவர்கள் எழுப்பிய குர லொலிதான் இன்று உலகெங்கும் ஒலிக்கிறது.

இன்றைய தினம் உலகத் தொழி லாளர்களுக் கிருக்கின்ற பிரச்சனை சுலபமானது. நம் முன்னிருக்கிற 'திராவிட நாடு திராவிடர்க்கே'-என் னும் பிரச்சனை அவ்வளவு சுலப மானது. அதற்காக பணிபுரிந்து புதிய நாட்டை — பொதுவுடமை நிறைந்த நாட்டை பெறுவோம்.

N. S. இளங்கோ

இருபதாம் நூற்ருண்டில்தான் சமுதாய சீர்திருத்த வாதிகள் உல கெங்கும் தோன்றினர்கள். சீனத் திலே சன்யாட்சன், ஐரோப்பா விலே லூதர், அதற்குக் கீழே ரூஸோ, மாஜினி, வடஇந்தியாவில் மோகன்ராய், தென்னிந்தியாவில் தெலுங்கு நாட்டில் யோகிவே மன்ன, மலையாள நாட்டிலே நாரா யணகுரு, இந்தத் தமிழ் நாட்டிலே, பெரியார் இராமசாமி — இவர்கள் இருபதாம் நூற்ருண்டில் தோன் றிய சீர்திருத்த வாதிகள்.

கோவிந்தசாமி M.L.A.

திருப்பதிக்கு மயிரைக் கொடுக்க ஏராளமான தொழிலாளர்கள் செல் கின்றனர். மயிருக்குப் பதில் தன் சுண்டு விரலைத் தரவேண்டுமென் ருல் எத்தனைத் தொழிலாளர்கள் சம்மதிப்பார். 'நான் உழைக்கும் கையின் சுண்டு விரலையா கேட் கிருய்! ஆண்டவனே, வா, உன்னை ஒரு கை பார்க்கிறேன்' என்று கிளம்புவார்கள். அப்போதுதான் அவர்களுக்குக் கோபம் வரும்.

பிராமணர்களையும் சீர்திருத்து வதற்காகத்தான் நாம் உழைக்கி ருேம். இங்கிருப்பவர்களை மட்டும் சீர்திருத்துவதற்காக அல்ல. இறு மாப்பு கொண்டவர்களைத்தான் முதலில் திருத்தவேண்டும்.

தோழர் இரா. நெடுஞ்செழியன்

மதம் மக்களுடைய நலத்திற்குப் பாடுபடுவதாக இல்லை. நாம் எங்கிரு


உலக அறிஞர்கள் சிந்திய அமுதத் துளிகள்

| | | |
|---|---|---|
| 1. | தாகூர் முத்துக்குவியல் | 0 8 |
| 2. | விவேகானந்தர்வீரவுரைகள் | 0 8 |
| 3. | இராமகிருஷ்ணர் அருள் வாக்குகள் | 0 8 |
| 4. | மாஜினி மணிமொழிகள் | 0 8 |
| 5. | இங்கர்சால் அறிவுரைகள் | 0 8 |
| 6. | ஷேக்ஸ்பியர் வர்ணனைகள் | 0 8 |
| 7. | ஏசுநாதர் உபதேச மொழிகள் | 0 8 |
| 8. | அண்ணுவின் உவமைகள் | 0 8 |
| 9. | கீதை உபதேச மொழிகள் | 0 8 |
| 10. | லெனின்பொன்மொழிகள் | 0 8 |
| 11. 12. | ஸ்டாலின் புரட்சி மொழிகள் | 0 8 |
| 13. 14. | வள்ளலார் வாய் மொழிகள் | 0 8 |
| 15. | கம்பர் கற்பனைகள் | 0 8 |
| | கருணநிதி கருத்துரைகள் | 0 8 |
| | திருக்குறள் மூலம் | 0 8 |

விபரங்களுக்கு :
கலைமன்றம் - சென்னை-1

ந்து வந்தோம்? ஏன் வந்தோம்? எதற்காக இருக்கிறோம்? என்று கேட்டுப் பார்த்தார்கள். இக் கேள்விக்குறிக்கான பதில்கூட ஒவ்வொரு மதமும் முயற்சிக்கின்றன. அவைகளின் பதில்கள் பகுத்தறிவுக் கொவ்வாதனவாக இருக்கின்றன.

மதம் என்றால் என்ன? என்று பார்த்தால், ஆண்டவன் ஒன்றே. பலவோ இருப்பதாக நம்புவது. அந்த ஆண்டவன் எல்லாம் வல்லவன், எதையும் சாதிக்கும் சக்தி வாய்ந்தவன் என்று கூறுவது. ஆனல், பழையகால தமிழர்கள் மதம் என்று ஒன்றை வைத்துக் கொண்டிருக்கவில்லை. 'நெறி' என்ற ஒன்றைத்தான் தமிழர்கள் வைத்திருந்தார்கள். மதம் என்ற ஒன்றை வைத்திருக்க வில்லை. "யாதும் ஊரே யாவரும் கேளீர். தீதும் நன்றும் பிறர்தரவாரா?" என்று நம்பியவர்கள்

பகுத்தறிவியக்கம் ஒழுக்கத்தை ஒத்துக்கொள்கிறது. அறிவை ஒத்துக்கொள்கிறது. ஆனல் மதங்கள் கூறும் மற்றவைகளை ஒத்துக் கொள்வதில்லை.ஏனென்றால்அவை பகுத்தறிவுக்கு ஒவ்வாதன.

ஆண்டவனுக்கு உலகம் தட்டையா? உருண்டையா? என்பதே தெரியவில்லை. எல்லாக் கடவுள்களும் உலகம் தட்டை என்றே கூறின. ஆனல், மனிதனுடைய பகுத்தறிவு ஒன்றுதான் உலகம் தட்டையல்ல உருண்டை என்பதைக் கண்டுபிடித்தது.

உலகத்திலே மனிதன் தோன்ற இரண்டு கோடியாண்டுகள் ஆயின என்று அறிவியல் கூறுகிறது. ஆனலும் மதம் கூறுகிறது ஆண்டவன் இந்த அகிலத்தை ஆறே நாட்களில் உண்டாக்கினன் என்று.

மதம் வளர்ந்து வரும் சமுதாயத்தைத் தடுத்திருக்கிறது.

மதம் நம்பச் சொல்லுகிறது. ஆனல் பகுத்தறிவு நெறியோ மனிதனை ஆராயச் சொல்லுகிறது. அறிவே ஆண்டவன்; அன்பே நெறி! இதற்குப் பகுத்தறிவு நெறி மாறுபட்டதல்ல. இந்த நாட்டில் அறிவு வளரவேண்டுமானல், சரஸ்வதி பூசையல்ல தேவையானது. கல்வி வளர வேண்டும்.

மேல்நாட்டு அறிஞன் ஒருவன் சொன்னன் The future belongs not to Religion but to Science; not Gods but men." என்று எதிர்காலம் மதத்திற்கல்ல; விஞ்ஞானத்திற்கு. கடவுளுக்கல்ல; மனிதர்களுக்கு என்று அவர் கூறிய வார்த்தைகளை உங்கள்முன் கூறுகிறேன்.

○

## தலையுரை

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கும் முனிவருக்குச் சேரவேண்டியது. அதனல் தீமை விளையும் என்பதை அறிந்தான் அது மீண்டும் மரத்தில் ஒட்டிக்கொள்ளவேண்டும். இதற்குக் கண்ணன் ஒரு வழி சொல்கிறன். அதன் மூலம் ஒரு உண்மையை வெளிப்படுத்துகிறன். எல்லோரும் தங்கள் தங்கள் மனதிலிருக்கும் உண்மையைச் சொன்னல், பழம் மேலே சென்று மரத்தில் ஒட்டிக் கொள்ளும் என்று கூறுகிறர். தருமர் அருச்சுனன் முதலிய யாவரும் உண்மைகளைக் கூறுகின்றனர். பழம் உயர்ந்து மரத்தின் கிளைக்குச் சென்று விட்டது. ஆனல் ஒட்டிக் கொள்ளவில்லை. திரௌபதியின் முறை வந்தது. திரௌபதி "நான் பத்தினி என்பது உண்மையினல் பழம் மரத்தில் ஒட்டிக்கொள்ளட்டும்" என்றள். உடனே பழம் மரத்தில் ஒட்டிக்கொள்ளவில்லை. பிறகு "நான் ஐவரோடு திருப்பதி அடையாமல் ஆறுவதாக கர்ணன் மேலும் ஆசைப்பட்டேன் என்பது உண்மையானல் பழம் மரத்தில் ஒட்டிக் கொள்ளட்டும்" என்றள். உடனே பழம் மரத்தில் ஒட்டிக்கொண்டது! எப்படியிருக்கிறது, கதை?

மேல் நாட்டிலே பழம் அறுந்து வீழ்ந்ததைக் கண்டான் நியூடன். பூமிக்கு இழுக்கும் சக்தி உண்டு என்ற உண்மையை வெளிப்படுத்தினன். பாரதத்திலே பழம் அறுந்ததைக் கண்டான் கண்ணன். பாஞ்சாலி, ஐந்து பேருடன் திருப்தியடையாமல் ஆறுவதாகக் கர்ணனைக் காதலித்தாள் என்ற உண்மையை வெளிப்படுத்தினன். மேல் நாட்டிக்கும், நமது நாட்டிக்கும் உள்ள வேற்றுமையை இதிலிருந்து அறிந்து கொள்ளுங்கள்.

சமுதாயம் அழிந்து—பாழ்பட்டுக்கிடக்கிறது. இந்தச் சமுதாயத்தைச் சீர்திருத்தியாக வேண்டும். பழமையில் மூழ்கிக்கிடப்போரை விடுவிக்கவேண்டும்.

இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் நம்மை 'நாத்திகர்கள்' என்று ஏசுகிறர்கள் என்று கூறினர் நண்பர் கோகுலகிருஷ்ணர். நம்மை நாத்திகர்கள் என்போர் யாரென்று நமக்கு நன்கு தெரியும். விபூதி வீரமுத்துக்கள் ஏசுகின்றனர். அவர் கொடுக்கும் விபூதியிலே எல்லா நோய் நீங்கும் என்றதும், புற்றுநோய்க்காரர்களாக திருவண்ணுமலையில் வந்து சேர்ந்தார்கள். நோயாளிகள் டாக்டரிடம் போகாமல் விபூதியில்போகும் என்று நம்பி ஓடிவந்தனர். இந்த இழிநிலை மாறத்தான் வேண்டும்.

இவர்களைச் சீர்திருத்த—பாடுபடுகிறோம் நாம். பழமையின் பிடியிலிருக்கும் சமுதாயத்தைச் சீர்திருத்தி, நல்லதொரு சமுதாயமாக மாற்ற வாரீர், என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

○

### நன்றி செலுத்துகிறேன்

இன்று நான் தேர்தலில் வெற்றி பெற்றுச் சட்டசபையில் வீற்றிருக்கிறேன் என்றால், அதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை மறக்க முடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்துடன் செய்த ஒப்பந்தத்தினல் — அதன் ஒத்துழைப்பினல் வெற்றி பெற்றேன். அதற்காக நான் நன்றி செலுத்துகின்றேன்.

—சேலம் அரசியல் மாநாட்டில்

தோழர் கிருஷ்ணமூர்த்தி M. L. A.

# சிந்தனைப் பகுத்தறிவுக்கு வழிகாட்டுகிறது - பகுத்தறிவு பழமையை அழிக்கிறது

## சமூக சீர்திருத்த மாநாட்டில் தோழியர் பூங்கோதை

தலைவரவர்களே, தோழர்களே, தாய்மார்களே வணக்கம்!

'சமுதாயப் புரட்சி' என்னும் தலைப்பில் பேச வேண்டும் என்று வரவேற்புக் குழுவினர் பணித்துள்ளனர்.

தனிப்பட்டவர்களின் கூட்டு அமைப்புத்தான் இந்தச் சமுதாயம். தனிப்பட்டவர்களின் இன்னலை ஒழிக்கக் கூட சமுதாயப் புரட்சிகள் நடந்துள்ளன, மேல் நாடுகளிலே!

புரட்சிகள், வாழ்வை மாற்றியமைப்பதற்காக ஏற்படுகின்றன. பலப்பல புரட்சிப் பாதைகள் உள்ளன. அதில் நாம் அற முறைப் புரட்சி செய்கிறோம்.

புரட்சியின் அடிப்படையை நினைத்துப் பார்ப்போம். அது பெரும்பாலோரின் தேவையாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. தனிப் பட்டவனுக்காகக் கூட சமுதாயப் புரட்சி நடத்தலாம். இதைத்தான் 'தனி யொருவனுக் குணவில்லை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதி சொன்னான். ஒரே ஒரு மனிதனுக்காக இந்த ஜகத்தை அழிக்கலாம் என்கிறான் பாரதி.

சமுதாயப் புரட்சி தனிப்பட்டவர்களின் தேவைக்காக—வசதிக்காகவும் ஏற்படுகிறது.

பதவி ஏறுபவர்கள் சமுதாயத்தின் நிலையை உணர்ந்து—அறிந்து திட்டம் தீட்டுகிறார்கள், சட்டம் செய்கிறார்கள்.

இங்கிலாந்திலே பதவி யேற்ற முதல் விக்டோரியா மகாராணி கூறினாள், "நான் முதலாவதாக இந்த நாட்டு மக்களுக்கு மத சுதந்திரம் வழங்கிறேன்" என்று.

முதன் முதலில் ஏன் மத உரிமை வழங்கினாள், அந்த மகாராணி! காரணம் அந்த நாட்டு மக்களின் அன்றைய மனநிலை—சூழ்நிலை தான்.



அந்தக் காலத்திலே ஸ்காட்லாந்திலே மேரி அம்மையாரென்று ஒருவரிருந்தார். மேரி கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவள். அவள் மக்கள் எல்லோரும் கத்தோலிகர்களாக வேண்டும், கத்தோலிக்க ஆலயங்களுக்குச் சென்று தொழ வேண்டும் என்றாள்.

இந்த நாட்டிலே பதவியேற்றதும் ஆச்சாரியார் கூறவில்லையா 'எல்லோரும் பஜகோவிந்தம் பாடுச்கள்' என்று சொல் வில்லையா,? அதைப் போல அவள் சொன்னாள்.

ஆச்சாரியார் சொன்னதும் மக்கள் சும்மா யிருந்தார்களா? "ஆச்சாரியாரே பஜகோவிந்தம் பாடச் சொல்கிறீர்களே! இந்த நாட்டில் இருப்பவர்கள் எல்லோரும் வைணவர்களா? இந்த நாட்டிலே சைவர்கள் இருக்கிறார்கள். இந்தநாட்டிலே கிருத்தவர்கள் இருக்கிறார்கள். இந்தநாட்டிலே முகமதியர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் எப்படி பஜகோவிந்தம் பாட முடியும்?" என்று இந்த நாட்டு மக்கள் ஆச்சாரியாரைக் கேட்டதைப் போல, அன்று அந்த நாட்டு மக்கள் மேரியைக் கேட்டனர்.

"இந்த நாட்டிலே எல்லோருமா கத்தோலிக்கர்கள்? இல்லையே! வேறு! மதத்தினர்கள் உள்ளனர். ப்யூரிடன்கள் உள்ளனர். சின்ன வழிபாடு கூடாதே அவர்களுக்கு அவர்கள்எப்படி கத்தோலிக்க ஆலயங்களுக்குச் செல்வார்கள்?" என்று கேட்டார் மக்கள்.

கேட்ட மக்கள்முன் ஆச்சாரியாரைப்போலவே, 'மேரிதுப்பாக்கியை நீட்டினாள். தன் கட்டளையை ஏற்காதவர்களைக் கொன்று குவித்தாள். 'இரத்தவெறிப் பிடித்தவள்! மத வெறிப் பிடித்தவள் என்று வர்ணிக்கப் பட்டாள்.

இந்த சூழ்நிலையிலேதான் விக்டோரியா பட்டத்திற்கு வந்தாள். சூழ்நிலையை உணர்ந்தாள். மக்கள் மனப்போக்கை எதிர்க்கக் கூடாது என்பதற்காகத்தான் "நான் முதல் முதலில் உங்களுக்கு மத சுதந்திரம் வழங்குகிறேன்". என்று கூறினாள்.

தனிப்பட்ட நபரின் தேவைக்காகப் புரட்சி நடைபெறுகிறதுஎன்று முதலில் குறிப்பிட்டேன். 'ஜோன் ஆப் ஆர்க்' என்று புகழப்படும் பெண் செய்த புரட்சியைப் பார்ப்போம். அவளும் தனிப்பட்டவளின் வேலைத் தடைப்படுகிறதே என்ற அடிப்படை மீதுதான் புரட்சியைத் துவக்கினாள்.

ஜோன் ஆடுமாடுகளை மேய்த்துத் திரிந்தாள். போர் வந்தது! அதன் காரணமாக இராணுவ வீரர்கள்

# சமுதாய விழிப்பே அரசியல் உணர்ச்சியை ஏற்படுத்தும்

எங்கும் திரிந்தனர். ஜோனின் ஆடு மேய்க்கும் வேலைக்குத் தடை ஏற்பட்டது. அதை ஒழிக்கப் புறப்பட்டாள். மன்னனைக் கண்டாள்; படைக்குத் தலைமை வகிக்க அனுமதிப் பெற்ருள். போரிலே வெற்றிக்கண்டாள் அந்த வீரமங்கை. பின்பு சூன்யக்காரி என்று சுட்டெரிக்கப்பட்டாள்.

அவள் தன் நாட்டிலே செய்த புரட்சி - போர் தனிப்பட்டவரின் தேவைக்கா ஏற்பட்டதுதான்!

ஜோனின் எண்ணத்திலேஎழுந்த புரட்சி, போராக - சமுதாயத்தைக் காக்கும் புரட்சியாக மாறியது. எண்ணப் புரட்சியே, மக்கள் புரட்சிக்கு -சமுதாயப் புரட்சிக்கு அடிப்படைக் காரணம். எண்ணப்புரட்சியை உருவாக்குவது பகுத்தறிவு!

சிந்தனைப் பகுத்தறிவுக்கு வழி காட்டுகிறது-பகுத்தறிவு பழமையை அழிக்கிறது. புதுமையைஉருவாக்குகிறது. புதுமை உரிமைகாண வழி வகுக்கிறது. புதுமை விரும்பிகள் நாட்டை சீர்திருத்த - நம் நாட்டை நமதாக்க புரட்சி செய்கிறார்கள்.

கிரேக்க நாட்டிலே, மக்கள் மதத்திலே மூழ்கிக் கிடந்தனர். அவர்களிடம் நிலவிய கடவுள்களை தன் எண்ணப் புரட்சியால் தூள் தூள் ஆக்கினன் சாக்ரடீஸ். அதன்மூலம் சமுதாயத்திலேயே பெரும் புரட்சி செய்தான்.

உழைக்கும் தொழிலாளிகளால் உயர்கிருன் முதலாளி. ஏதோ கொஞ்சம் முதலீடு போட்டுவிட்ட ஒரே காரணத்திற்கே, இலாபத்தைக் கொள்ளையடிக்கிருன். அவர்கள் பீடத்தை ஆட்டிப் படைக்க தொழிலாளர்களுக் குள்ளே — மக்களுக்குள்ளே ஓர் ஒப்பந்தம் வேண்டும் என்று கூறி 'சமுதாய ஒப்பந்தம்' இயற்றினன் ரூசோ. அதன்மூலம் சமுதாயத்திலே புரட்சியை உண்டாக்கினன்.

மக்கள் மதத்திற்கு அடிமைப் பட்டனர். "நோயா, அதற்குக் காரணம், சாமி! கால் வலிக்கிறதா, தலை வலிக்கிறதா, கஷ்டப்படுகிருயா — அதற்குக் காரணம் உன் தலைவிதி. மயக்கம் வருகிறதா? பேய் அறைந்திருக்கும். வயிற்று நோயா? முனி ஏதாவது செய்திருக்கும்!" இப்படி மக்கள் நம்பி நாசமாகிக் கொண்டிருந்தனர் பூசாரி வருவான்; ஏதோ சொல்வான் அதனலே எல்லாம் நீங்கும் — இப்படி எண்ணி ஏமாந்தனர்.

மதத்தால் மக்கள் மதியிழப்பதைக் கண்ட லூதர் புரட்சி செய்தான். திருடி, பொய் பேசி, பிறரை ஏமாற்றி எல்லாத் தீமைகளையும் செய்து, பின் ஏசு முன்பாக மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டால்—நான் கணை கொடுத்து மன்னிப்புச் சீட்டு வாங்கினல் செய்த பாவம் போகும் என்ற நிலையை மாற்றியமைத்தான்.

'மக்களுக்காக சட்டமே தவிர சட்டத்திற்காக மக்களல்ல' என்னும தத்துவத்தின் அடிப்படையிலே, 'சட்ட நுணுக்கங்கள்' என்னும் நூலை எழுதி சமுதாயத்திலே புரட்சியுண்டாக்கினன் பொங்தாங்தே!

சமுதாயத்திலிருந்த இழிநிலைகளை மாற்றி அமைத்தனர் சீர்திருத்தவாதிகள். மன்னன் கடவுளின் பிரதிநிதியா என்று எண்ணிப் பார்த்தனர் மக்கள். மன்னன் ஆண்டவனின் பிரநிதியும் அல்ல, மக்களுக்காக மன்னனே தவிர, மன்னனுக்காக மக்களல்ல என்று உணர்ந்து கொண்டார்கள்.

மன்னன் — அவன் மக்களின் உழைப்பால் வாழ்பவன். அவன் கையிலே ஏந்தியிருக்கும் மதுக்கிண்ணம், மக்களின் உழைப்பால் செதுக்கப்பட்டது. அந்தக் கிண்ணத்திலே நிறைந்திருக்கும் மது, மக்களின் குருதியினல், கொட்டிய வியர்வையால் உண்டாக்கப் பட்டது—இவற்றை உணர்ந்த மக்கள், சமுதாயத்திலே புரட்சி செய்தனர். மன்னன் மக்களின் நன்மைக்காக அமர்த்தப்பட்டவனே, தவிர ஆண்டவனின் பிரதிநிதியல்ல. மன்னன் மக்களைக் கண் காணித்துக் காக்கும் காவலனே தவிர, கடவுளின் பிரதிநிதியல்ல என்று உணர்ந்து கொண்டனர்.

ராஜாஜி வந்தார்; வரிகள் பல போட்டார். அந்த ஆச்சாரியார் போனர். இப்போது காமராஜர் வந்திருக்கிருர். 'காமராஜர் வந்ததும் கஷ்டங்கள் ஒழியும். ராஜாஜி சர்க்கார் போட்ட வரிகளை எடுத்து விடுவார்' என்று மக்கள் எதிர்பார்த்தனர். ஆனல் 'பழைய கருப்பன் கருப்பனே' என்பதை காட்டிவிட்டார் காமராஜர். அவர் ஆச்சாரியார் அரசாங்கம் போட்ட வரிகளை எடுப்பதாகத் தெரியவில்லை.

புரட்சி அவ்வப்போது நடந்து கொண்டுதான் வருகிறது. டல்ஹௌசி காலத்தில் நடந்தது. ஜான்ஸிராணி புரட்சி செய்து காட்டினள். இன்று நாம் சமுதாயப் புரட்சி செய்கிறேம். ஆனல் நம்மைப் பார்த்து, நேரு கூறுகிருர் இவர்கள் 'பைத்தியக்காரர்கள்' என்று.

சமுதாயப் புரட்சி செய்தவர்களை வெள்ளைக் காரர்கள்கூட பைத்தியக் காரர்கள் என்று சொன்னதில்லை.

வெள்ளையன் காலத்திலே சிப்பாய் கலகம் ஏற்பட்டது. எல்லோருக்கும் ஒரே உடை அணிவித்ததை, மக்கள் எல்லோரையும் கிருத்தவர்களாக்குகிருன் வெள்ளைக் காரன் என்று கருதினர். தங்களுக்குத்தரப்பட்டத் துப்பாக்கி குண்டுகளில் பசுக்கொழுப்பு, பன்றிக் கொழுப்பு பூசப்பட் டிருக்கின்றன. பசு நமது தெய்வம். அதன் கொழுப்பையாதடவுவது. அதையா நாம் தாங்குவது என்று படைவீரர்கள் ஆர்ப

(13-ம் பக்கம் பார்க்க)


**வாழ்க்கை வரலாறுகள்**

| | | |
|---|---|---|
| அறிஞர் அண்ணதுரை | 0 | 8 |
| தலைவர் பெரியார் | 0 | 8 |
| புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் | 0 | 8 |
| கடமை வீரர் கருணநிதி | 0 | 8 |
| அஞ்சாநெஞ்சன் அழகர்சாமி | 0 | 8 |
| பன்னீர்செல்வம், பாண்டியனர், வேலாயுதம், | 0 | 8 |
| நெடுஞ்செழியன், நடராசன் மதியழகன் | 0 | 8 |
| சம்பத், நீலமேகம் | 0 | 8 |
| ஆசைத்தம்பி, சிற்றரசு | 0 | 8 |
| இராமமிர்தத்தம்மையார், அருண்மொழி, பூங்கோதை | 0 | 8 |

விபரங்களுக்கு :
கலைமன்றம் — சென்னை-1

# நாடகமும் சினிமாவும் நமக்கு உறவல்ல! தொடர்பே!

## சமூக சீர்திருத்த மாநாட்டில் தாமரைச்செல்வன் ஆய்வுரை!

இன்றைய சேலம் சமூக சீர்திருத்த மாநாட்டில் 'நாடகமும் சினிமாவும்' என்னும் தலைப்பை எடுத்துக் கொண்டது, பலருக்கு ஆச்சர்யமாக இருக்கலாம்.

சினிமா நாடகத்தோடு நம் தொடர்பு வளர்வதைக் கண்டு சிலர், இதைத்தான் நீங்கள் வளர்க்கப் போகிறீர்களா என்று கேட்கிறார்கள் கத்தியை எடுத்ததும், குத்தத்தான் வருகின்றான் என்று ஏன் எண்ணவேண்டும். பழம் அறுக்க—பென்சில் சீவ கத்தி எடுக்கக் கூடாதா?

நாடகத்திடமும், சினிமாவிடமும் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுள்ள தொடர்பை பெரும்பாலோர் உறவு எனக் கருதி விடுகின்றனர். **நாடகமும் சினிமாவும் நமக்குத் தொடர்புதானே தவிர உறவு அல்ல!**

இன்று அரசியலிலிருந்து கலைத்துறையில் காலெடுத்து வைப்பவர்களைக் கண்டு, 'அரசியல் வாதிகள் கலையுலகில் புகலாமா?' என்று கேட்கின்றனர். கலையுலகிலிருந்து இங்கு வருபவரைக்கண்டு, 'கலைஞர்கள் அரசியலில் அடிவைக்கலாமா?' என்று கேட்கின்றனர். கேட்கிறவர்கள் யார் என்று பார்க்கும்போது தான் சிரிப்புவருகிறது! கேட்பவர்களே அப்படி செய்திருக்கிறார்கள்!

அரசியலிலிருந்த கல்கி அந்தக் காலத்திலே 'தியாகபூமி' படத்திற்குக் கதை வசனம் எழுதினாரே! கலையுலகில் அவர் மட்டும் கால் வைக்கலாமா? எவராவது கேட்டார்களா? தினசரி சொக்கலிங்கம் சினிமாவில் நடித்தாரே! அதைக் கண்டித்தார்களா?

அரசியலிலிருந்து கலைக்குப்போனவர்களைக் கண்டோம். கலையிலிருந்து



அரசியலுக்குத் தாவினவர்களையும் பார்ப்போம், விஸ்வநாததாஸ் மேடையிலே வெள்ளையனை எதிர்த்துப் பாடினாரே! கொடுமுடிகோகிலம் "காந்தி லண்டன் சேர்ந்தார்" என்று பாடினாரே!

இவற்றை எவரும் கண்டிக்கவில்லை. இன்று நாம் கலையுலகில் பிரவேசிக்கிறோம்! நாம் தொட்டால் மண் பொன்னாகிறது, நமது செல்வாக்கு அதிகமாகிறது. உடனே, மற்றவர்கள் கதறுகிறார்கள், 'கலையுலகில் பிரவேசிக்கலாமா? என்று.

தி. மு. க. மற்ற கட்சிகளைப் போல வெறும் அரசியல் கட்சியல்ல! இழந்த நாட்டை மீண்டும் பெற பாடுபடும் விடுதலை இயக்கம்!

நாம் கூட்டங்களிலே ஒரு லட்சம் பேர்களைச் சந்திக்கிறோமென்றால், அந்த ஒரு லட்சம்தான் மொத்த ஜனத் தொகையா? நம் ஏடுகளைப் படிக்காதவர்கள், நம் பேச்சுக்களைக் கேட்காதவர்கள் மிகப் பலர். அவர்களை நாம் சினிமாவிலும், நாடகத்திலும் சந்திக்க முடிகிறது. அதனால்தான் இரண்டிலும் நாம் தொடர்பு கொண்டுள்ளோம். நம் பேச்சுக்களைக் கேட்காத மக்களிடத்திலே—நம் ஏடுகளை எட்டிப் பார்க்காதவர்களின் இதயத்திலே நாடகம்—சினிமாமூலம் நம் கருத்தைப் புகுத்துகிறோம்.

ஏழைகள் சினிமா பார்த்துத் தங்கள் காசைக் கரியாக்குகின்றனரே என்று சிலர் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். ஏழை சினிமாவுக்கு ஏன் செல்கிறான்? தான் கையிலேயிருக்கிற காசை செலவழிக்கவா? இல்லை! சினிமா ஒன்றுதான், உழைத்தலுக்கும் ஏழைக்குக் கிடைக்கும் மலிவான பொழுது போக்கு! அதனால் தான் ஏழை சினிமாவுக்குச் செல்கிறான். வேறு பொழுது போக்குகளை அவனால் அனுபவிக்க முடியாது. இயற்கையைக் கண்டு மயங்கும் மனநிலை அவனுக்கில்லை. கொடுமுடி கோகிலத்தின் இசை விருந்தை அருந்த பணமில்லை! ஆகவே அவன் சினிமாவிற்குச் செல்கிறான்!

சினிமாவிலே, ஒவ்வொரு காலத்திலே ஒவ்வொன்றை ரசித்தனர், மக்கள். ஒரு காலத்திலே **M. K.** தியாகராஜ பாகவதர் படம் என்றால், கொட்டகையிலே கூட்டம் தாங்காது! அதன்பின் இளங்கோவனின் வசனங்கள் ஏழைகளின் இதயத்தைத் தொட்டன. பின்பு கலைவாணர் **N. S.** கிருஷ்ணன் நடித்தால் போதும், மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். இன்று நண்பர் கருணாநிதியின் காலம்! அவர் படங்கள் என்றால், மக்கள் 'க்யூ' வரிசையில் நிற்கின்றனர். பணம் உள்ளவர்

[13-ம் பக்கம் பார்க்க]

# கலைமன்றம்

திராவிடர் முற்போக்கு வார இதழ் ... ஆசிரியர்: பால்வண்ணன்

சென்னை — 8—5—54 — சனி


# செயலாற்றிய சேலம்

இம்மாதம் முதல் இரண்டாம் நாட்களில் சேலத்தில் நமது கழக சமூக, அரசியல் மாநாடுகள் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றன.

வெள்ளிக்கிழமை இரவு கொட்டிய மழை-இடித்த இடி—மின்னிய மின்னல்—வீசிய காற்று இவைகள் சனிக்கிழமை நடைபெற இருக்கும் மாநாட்டை நடைபெறுமல் தடுத்துவிடுமோ என்று அஞ்சும் வண்ணம் செய்தன. மாநாட்டு வரவேற்புக் குழுவினர், செயல் வீரர்கள் செயலற்று நின்றனர். ஆம்! மழை நின்றது. காலை 4-மணிக்கு மறுபடியும் செயல் வீரர்கள் தம் வேலையை தொடர்ந்தனர்......செய்து முடித்து விட்டனர். பந்தல் அலங்காரம், முகப்பு அலங்காரம் இவ்வளவையும் 7-மணிக்குள் செய்து முடித்துவிட்டனர். இயற்கை சிதைத்த இடங்களை யெல்லாம் சரி செய்து விட்டனர், சென்ற மாநாட்டைப் போலவே!

ஆணவக்காரர்கள் — அரசியல் சூதாட்டக்காரர்கள் நம இயக்கத்தை ஒழித்து விடுவதாக—கணக்கைத் தீர்த்துக் கட்டிவிடுவதாக வாய் கிழியக் கத்திக் கத்தி இறுதியில் தோற்று ஓடியது போல், மாநாடு நடைபெறுமல் தடுக்க எண்ணி பெய்த பெரு மழை-பேரிடி, பெருங்காற்று இவைகள் தோற்று எங்கோ ஓடி மறைந்தன.

சனிக்கிழமை காலை கதிரவன் தோன்றினன். வரவேற்புக் குழுவினர் உள்ளக் கமலங்களும், முக மலர்களும்மலர்ந்தன. எங்கும் சுறுசுறுப்பு. தொண்டர் படைத் தலைவர்கள் தொண்டர்களுக்கு இடும் வேலைகளை ஒழுங்காகவும், விரைவாகவும் செய்தனர். எல்லாம் நல்ல முறையில் நடைபெற்றன.

நிகழ்ச்சி நிரலில் குறிக்கப்பட்டபடி நிகழ்ச்சிகளை குறித்த நேரத்தில் வெற்றிகரமாக செய்து காட்டிய ஒரு சிறப்பான பெருமை சேலத்திற்கு கிடைத்துவிட்டது. மாநாட்டு நிகழ்ச்சிகள் ஒழுங்காகவும், நல்ல முறையிலும் அமைதியாகவும் நடைபெற்றன.

சமூக சீர்திருத்த மாநாட்டில் கலந்துகொண்டு சொற்பொழி வாற்றிய நமது இயக்க வீரர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைப்பில் பேசி மக்களை மகிழ வைத்தனர். சொற்பொழிவுகள் அனைத்தும் பயனுடையவை—நல்ல பண்பையும் பயக்கக் கூடியவை என்பதில் எவரும் ஐயம் கொள்ள முடியாது.

அரசியல் மாநாட்டில் பேசிய அனைவரும் இன்றுள்ள நிலைமைகளை மிகமிக நன்ருக பாமரர்களும் அரசியலைப் பற்றிப் புரிந்து கொள்ளும்படியாகப் பேசினர். ஈரோடு தந்த இணையற்றச் சிங்கம் E. V. K. சம்பத் அவர்கள் பேசிய 'ஏகாதிபத்தியங்கள்' என்னும் சொற்பொழிவின் பெருமையும்—அருமையும் நம்மால் விரித்துக் கூறமுடியவில்லை. அவ்விதமாகப் பேசும் ஆற்றல் அவர் ஒருவருக்கே உண்டு என்று கூறுவது மிகையாகாது. நடுப்பகல் — பசி நேரம்—இருந்தும் ஒருவரும் ஆடாமல் அசையாமல் தோழர் சம்பத் அவர்களுடைய பேருரையை கேட்டுக் கொண்டிருந்தனர். அந்த அளவுக்கு மாநாட்டு மேடையிலே நின்றுக்கொண்டு,கூடியிருந்த மக்களை உலகின் பல நாடுகளுக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த ஏகாதிபத்தியர்களைக் சுட்டிக் காட்டினர் தன் சொல் வன்மையால். அரசியல் மாநாட்டில் தோழர் சம்பத் அவர்களின் பேச்சு மிக முக்கியமானதாகும். அவருக்குப் பின்னர் பேசிய பலரும் நன்கு பேசியே இருக்கின்றனர். அனைவருடைய சொற்பொழிவுகளும் சேர்ந்து ஒரு பெரும் கலைக் களஞ்சிய விரிவுரைக் கூடமாக விளங்கியது.

தேவையான பல நல்ல தீர்மானங்களை இம்மாநாடு தீர்மானித்திருக்கிறது. ஒவ்வொரு தீர்மானமும் நாட்டுக்கு நலம் பயக்கும் ஆற்றல் நிறைந்தது.

இறுதியாகப் பேசிய நமது அருமை அண்ணு அவர்கள் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதனையும், இன்னும் நல்ல பல அறிவுரைகளையும் கூறினர். மணி இரவு 9 ஆயிற்று மறுபடியும் மழை ஆரம்பமாகியது.

இரவு மழை பொழிந்துகொண் டிருக்கும்போதே நாடகமும் நடைபெற்றுக் கொண்டே இருந்தது. ஆண்களும் பெண்களும் அமைதியாக இருந்து நாடகம் பார்த்தனர்.

சேலம் மாநாடு சிறப்பான மாநாடு. நல்ல முறையில் வெற்றிகரமாக இந்த மாநாட்டினை முடித்து வைத்த வரவேற்புக் குழுவினரை நாம் பாராட்டுகின்றேம். எல்லா ஏற்பாடுகளும் நன்ருய்ச் செய்திருந்தனர். எத்தனையோ இடைஞ்சல்களுக்கு இடையில் வெற்றிகரமாக முடித்து காட்டியது சேலம்! அந்த செயலாற்றிய சேலம் வாழ்க! வளர்க!!

# கலைக்குப் பொருத்தமான ஜோடி நாம்தான்

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் ஒரு வாரத்திற்கு முன்பே 'புக்' செய்துகொள்கின்றனர்.

சினிமா ஏழைகளின் வேதனையை மறக்கச் செய்யும் சாதனம். இன்பத்தைத் தரும் கருவி. வறுமையை மறைக்கும் போதை!

சினிமாவிலே, நாடகங்களிலே நாம் ஏராளமானவர்களைக் காண வாய்ப்பு இருக்கிறது. ஆகையால் அதனோடு நாம் தொடர்பு கொண்டுள்ளோம். உடனே, மற்றவர்கள் அவையே நம் குறிக்கோள் என்று கூறிவிடுகின்றனர்.

ரயிலில் ஒருவன் ஏறுகிறான் என்றால், ரயிலா அவன் குறிக்கோள்! அல்லவே! அது சேலமாக இருக்கலாம்! சேலத்திலே கூடும் தி. மு. க. மாநாடாக இருக்கலாம். சேலத்திற்குச் செல்ல ரயிலை ஒரு கருவியாகப் பயன் படுத்திக் கொள்கிறான். அப்படித் தான் நாடகமும், சினிமாவும் நம் குறிக்கோள்கள் அல்ல, ஆனால் நம் கருத்தைப் பரப்பப் பயன்படும் சாதனம்.

நாம் தமிழுக்குச் சேவை செய்பவர்கள். தமிழிலே ஒரு புதுமுறையை வகுத்துக் காட்டியவர்கள். இயற்றமிழுக்கு நாம் சேவை செய்திருக்கிறோம். இசைத் தமிழுக்கும் நாம் சேவை செய்யத் தவறவில்லை. புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடல்கள் இசைத் தமிழை வளர்த்தன. அத்துடன் நாம் நின்று விடுவதா?

நாடகத் தமிழுக்குச் சேவை செய்ய வேண்டாமா? மூன்று தமிழில் ஒன்றை விட்டு, மூளியாகவா சேவை முடிவது. ஔவையார் கூட 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று தானே கேட்டதாகப் படிக்கிறோம். ஔவையார் நாடகக் காரியல்லவே! என்றாலும் மூன்று தமிழையும் கேட்டார். நாமும் முத்தமிழுக்கும் சேவை செய்ய விரும்புகிறோம். அதனால் சினிமா—நாடகங்களுடன் தொடர்பு கொள்கிறோம்.

கலையுலகில் இன்று அரசியலுக்கு வந்துள்ள நண்பர்கள், இப்போது தான் இயக்கப் பற்றுக் கொண்டவர்களா? அவர்கள் முன்பே இயக்கக் கருத்துக் கொண்ட காளைகள். நம் நடிப்புப் புலவர் **K. R.** ராமசாமியும், **D. V.** நாராயணசாமியும், **S. S.** ராஜேந்திரனும் வெகுநாளாக நம் இயக்கத்திலுள்ளனர். **T. K. S.** சகோதரர்களின் நாடகங்களில் நடித்தபோதும் அவர்கள் இயக்கத் தோழர்கள்தான்.

**K. R.** ராமசாமி அன்று—அவர்கள் நாடகங்களில் ராமர் வேஷம் போடுவார்; ஆனால் உள்ளத்திலே சீர்திருத்த கொள்கை இருக்கும். ராமர் வேஷத்திலே கல்லை மிதிப்பார் ராமசாமி! கல்லிலிருந்து அகல்யா தோன்றுவாள்! ஆனால் ராமசாமிக்கு கல்லை மிதிக்கும் போதே தெரியும் கல்லை மிதித்தால் காரிகை வரமாட்டாள்; வேண்டுமானால் கல்லின் அடியிலே பதுங்கிக் கிடக்கும் புழு வெளியே வரலாம்; பூச்சி வெளியே வரலாம். ஒருவேளை கல்லினுள்ளிருக்கும் தேரை வர வழியிருந்தால், வெளியே வருமே தவிர, பெண் எப்படி வருவாள், என்பது அவருள்ளத்திலே பக்தி உணர்ச்சியில்லை. நம் கொள்கைகள் தான் குவிந்து கிடந்தன.

காலம் மாறியது! மக்கள் நம் கருத்துக்களை விரும்பிக் கேட்கின்றனர். அதனால் சீர்திருத்த நாடகங்கள் புதிது புதிதாகக் கிளம்புகின்றன.

சினிமாவிலே முதலாவதாக அண்ணா நுழைந்தார். அவரைத் தொடர்ந்து தோழர்கள் கருணாநிதி, அரங்கண்ணல், ஏ. கே. வேலன், செழியன் ஆகியோர் நுழைந்திருக்கின்றனர்.

சம்பூர்ண இராமாயணங்கள் குறைந்தன; டம்பாச்சாரிகள்—தாரா சங்கம் சதாரங்கள—மறைந்தன. வேலைக்காரி, ஓர் இரவு, மந்திரி குமாரி, பராசக்தி முதலியவைகள் வெற்றி பெற்றன.

நல்ல கருத்துக்களை மக்களுக்குப் புரியும்படி நாம் தான் எழுதினோம்- நாட்டிலே நடமாடும் உருவங்களைப் படம் பிடித்துக் காட்டினோம்.

வேதாசலத்தின் பணத்திமிரை அண்ணா 'வேலைக்காரி'யில் அழகாகச் சித்தரித்தார். பணத்திமிர் பிடித்த வேதாசலத்தை, அவதிக்குள்ளான ஆனந்தன் சமயம் வாய்த்த போது பழிக்குப் பழி வாங்கிவிட்டான். இதைக் கண்ட சில தோழர்கள் சீமானை இப்படியா அவமானப் படுத்துவது என்று கேட்டனர். சீமான் செய்த தவறுக்கு அவள் மகளையுமா தண்டிப்பது என்று கேட்கின்றனர்.

இப்படி எங்கேயாவது தாளம் தவறுகிறதா என்று கண்ணிலே விளக் கெண்ணெய் போட்டுக் கொண்டு பார்ப்பவர்கள் குறை கூறி

## பணியாற்றுவேன்

இன்றைய தினம் ஒரு கட்சி அரசியல் நாணயக் குறைவாக நடந்து விட்டது. அந்தக் கட்சியில் நின்றுதான் நானும் வெற்றி பெற்றேன். ஆனால் அது காங்கிரசை நோக்கி நகருகின்றது என்பதைத் தலைவர்களுக்கு நான் ஒன்றரை ஆண்டுக்கு முன்பே அறிவித்தேன். நான் அந்த வழியைப் பின்பற்றுபவன் அல்ல நான் திராவிட பார்லிமெண்டரி கட்சியில் சேர்ந்து பணியாற்ற தீர்மானித்து விட்டேன். அண்ணா அவர்கள் இன்று தான் அனுமதி தந்தார்! போய் திராவிட பார்லி மெண்டரி கட்சியில் சேர்ந்து பணியாற்று! என்று. நான் இனி திராவிட பார்லிமெண்டரி கட்சியில் சேர்ந்து பணியாற்றுவேன்!

—சேலம் அரசியல் மாநாட்டில்
ஏ. கோவிந்தசாமி M. L. A.

# முத்தமிழுக்கும் சேவை செய்வோம் மூளியாக விடமாட்டோம்

னர். ஆனால் இப்படிக் கூறுபவர்கள் எப்படி படம் எடுத்தார்கள்? ஒழுங்கான படங்களை எடுத்திருக்கிறார்களா? வாட்டிவதைக்கப்படுபவர்கள், வாய்ப்புக் கிடைத்தால் எப்படி பழி வாங்குவார்கள் என்பதை அண்ணா காட்டினார். ஆனால் மற்றவர்களின் படங்கள் எதைக் காட்டுகின்றன?

எஸ். எஸ். வாசன் ஔவையார் படத்தை உருவாக்கினார். 'தமிழ் உலகுக்கு வாசனார் செய்த அருந்தொண்டு, என்று தமிழறிந்தவர்கள் பேசினர். சேதுப் பிள்ளை, சிவஞானம், டி. கே. சண்முகம் அத்தனைப் பேரும் அதைப் புகழ்ந்தனர். வாசன் யார் யாரை விலைக்கு வாங்க முடியுமோ, அவர்களை யெல்லாம் பிடித்தார். புகழச் செய்தார். எழுதி கொடுக்கச் செய்தார். அதைப் பிரசுரித்து விளம்பரம் செய்தார். ஆனால் அதன் பிறகு 'கல்கி' ஔவையார் ஆஸ்திகத்திற்குச் சேவை செய்த படம் என்று எழுதியது. எங்கே தமிழுக்குச் செய்த சேவை.

**'Flim India'** வில் ஒருவர் 'ஔவையாரைப் பற்றி உங்கள் கருத்தென்ன?' என்று கேட்டதற்கு, 'ஔவையார் தென்னாட்டின் மீரா **(Meera of South)** என்று பதிலளித்தார் அதன் ஆசிரியர். சங்கப் புலவர் ஔவையார் மீராவாக மாற்றப்பட்டார்.

'சான்ங்க் ஆப் பெர்டினாட்' என்று ஒரு படம் வந்தது. அதில் லூட்ஸ் என்ற இடத்திலே ஒரு கன்னி விறகு பொறுக்க வருகிறாள். இருண்ட குகையில் மேரியைப் பார்க்கிறாள் அற்புதங்கள் நிகழ்கின்றன. இந்தப் படத்தை வெளியிட்டவர்கள், "இதை யார் நமபுகிறார்களோ, அவர்களுக்கு விளக்கம் தேவையில்லை. யார் நம்ப வில்லையோ, அவர்களுக்கு விளக்கம்தர முடியாது', என்று விளம்பரத்துடன் வெளியிட்டார்கள்.

நம் தமிழ் நாட்டு ஔவையார் திருமணம் வேண்டாம் என்று முடிவு செய்து, விநாயகரிடம் சென்றாராம். விநாயகரும் பிரமச்சாரி! ஔவையாரும் பிரமச்சாரி! திருமணம் வேண்டாம்—இளமை வேண்டாம் என்று முறையிடுகிறார். உடனே முதுமையடைகிறார். இதைக்காட்டுகிறார்கள்- எப்படி நாம் நம்புவது, இதுவா 'தமிழுக்குச் சேவை?' குறை கூறினால் ஆத்திரம் வருகிறது!

**'Mother India'** என்று ஒரு படம் இந்தியாவில் தயாரித்தனர். அதிலே மகனால் அவதிக்குள்ளான ஒரு தாய், மனம் வெறுத்து உயிர் விடுவதற்காக தண்டவாளத்தில் படுக்கிறாள். வண்டிவருகிறது! அது அவள் மீது ஏறி கொன்றிருக்கும்! ஆனால், அதற்குள், அருகிலிருந்த வீட்டின் கதவை 'பாயிண்ட்ஸ் மேன் ஒருவன் 'அம்மா! அம்மா!' என்று தட்டுகிறான். அதைக் கேட்டதும், தாய்மை உணர்ச்சி மேலோங்கி எழுகிறது. தண்டவாளத்திலிருந்து எழுந்து ஓடுகிறான். தாய் உள்ளத்தைக் காட்டுகிறது இந்தப் படம்.

## உறுதி கூறுகிறேன்

திராவிட முன்னேற்றக் கழக போராட்டங்களில் பங்கு கொள்கிறோம் என்று அண்ணாவிடம் நாங்கள் கூறினோம். அண்ணா, 'இப்போது தேவை யில்லை, ஆயிரமாயிரம் தம்பிமார்கள் போராட்டத்தில் பங்கு கொள்ள உள்ளனர்; அவசியம் நேரும்போது அழைக்கிறேன்' என்றார். அண்ணா அழைக்கும் போது, திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தும் போராட்டங்களிலே கலந்து பணியாற்ற நான் தயாராக இருக்கிறேன் என்று உறுதி கூறுகிறேன்.

—சேலம் அரசியல் மாநாட்டில்
M. P. சுப்ரமணியம் M. L. A.

அதைப்பார்த்து —அதைப்போல தமிழிலே ஒரு படம் எடுத்தார்கள். 'தமிழ்த்தாய்' என்று அதற்குப் பெயர். அதிலும் இப்படி ஒருதாய் தண்டவாளத்திலே படுக்கிறாள். அதில் 'பாயிண்ட்ஸ் மேனை' படத் தயாரிப்பாளர் மறந்து விட்டார். அதற்குப் பதில் ஆபத்து பாந்தவன் பாயிண்ட்ஸ் மேனாக வந்து 'அம்மா! அம்மா!' என்று கதவைத்தட்டுகிறார்! தாய் தண்டவாளத்திலிருந்து எழுந்து ஓடுகிறாள்! எப்படியிருக்கிறது, தமிழ்ப்படம்? ஆண்டவன் எங்கே வரவேண்டும், எங்கே வரக் கூடாது என்ற ஒரு நியதியே இல்லாமல் படம் பிடிக்கின்றனர்.

'நவஜீவனம்' என்று ஒருபடம் வந்தது. அதிலே தொழிலாளர்கள் முதலாளியின் வீட்டுமுன் கூடி வேலை நிறுத்தம் செய்கிறார்கள். உடனே உள்ளேயிருந்து முதலாளியின் தம்பி வெளியே வருகிறார். கூடியிருக்கும், கொதித்திடும் தொழிலாளரிடம் ஞாயந்தானா தோழர்களே' என்று, பாடுகிறார்கள். உடனே ஆத்திரம் அடங்கி தொழிலாளர்கள் சென்று விடுகின்றனர். இது ஏற்கக் கூடியதா? இதற்குச் சர்க்கார் வேறு பரிசு தருகிறார்கள்.

இந்தச் சாக்கார், ஒரு பாட்டாளி தொழிலாளரின் மனத்தை மாற்றி விடலாம் என்பதை நம்புகிறதா? அப்படியென்றால், பொன்மலையில் வேலைநிறுத்தம் என்றால் உடனே பாகவதரை அனுப்பிப் பாடச் செய்வது தானே! கோயமுத்தூரிலே வேலைநிறுததம், கொடுமுடி கோகிலத்தை அனுப்புவதுதானே! ஏன் செய்யவில்லை இந்தச் சர்க்கார்?

'பராசக்தி' வந்தபோது 'தினமணிக்கதிர்' வசைமாரி பொழிந்தது. 'மனோகரா' வந்தபோது பாராட்டுகிறது. இதற்குக் காரணம், அவர்கள் நம் திறமையைப் பாராட்டுகிறார்கள் ஆனால், நம் கொள்கை பிடிக்கவில்லை!

# நல்லவாய்ப்பு கிடைத்துள்ளது! நழுவவிட மாட்டோம்!

திருச்சியிலே 'ஓர் இரவு' நாடகம் நடந்தபோது, அதைக் காண கல்கியார் தனதுசகபாடிகளுடன் வந்தார். நாடகம் முடிவில் 'கல்கி' புகழ்ந்து பேசினார். அதன்பின் கல்கியின் சகபாடி ஒருவர் "அண்ணா மட்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் தவராக இருந்தால், நானும் கல்கியும் கண்ணை மூடிக்கொண்டு அவர் காட்டிய வழியிலே செல்வோம்" என்றார். யார் தெரியுமா அப்படிப் பேசியது. சொன்னால் மூர்ச்சையாகி விடுவீர்கள். சின்ன அண்ணாமலைதான் அப்படிப் பேசினார்!

நாம் நாடகம்—சினிமாக்களிலேயாவது கருத்துக்களை மிதக்க விடுகிறோம். செல்வாக்கு பெறுகிறோம். இது பொறுக்காத சிலர் ஆத்திரமடைகின்றனர். சினிமா ஒழிக என்று கூச்சல் போடுகின்றனர். ஆச்சாரியார் 'சினிமா ஒழிக' என்றதும், 'கல்கி'யார் கூட்டம், 'நம்மவர்கள் அங்கேதானே இருக்கிறார்கள். ஆச்சாரியார் இப்படி கூறுகிறார்' என்று குறைபாட, ஆச்சாரியார் தன் குரலை மாற்றி 'நான் அப்படிச் சொல்லவில்லை. நல்ல படங்கள் எடுக்க வேண்டும். இராமாயணம், பாரதம் ஆகியக் கதைகளை டெக்னிக் கலரில் எடுத்து மேல்நாடுகளில் காட்ட வேண்டும்" என்று கூறுகிறார்.

டெக்னிக் கலரில் எடுக்க வேண்டுமாம். தன் மனைவியை மாற்றான் சேலையுரிவைக் கண்டு பேடிகளைப் போல கணவர்கள் இருக்க, எவனோ ஒருவனின் உதவியைக் கோரும் திரௌபதியை 'டெக்னிக் கலரி'ல் எடுக்க வேண்டுமாம்! ஆச்சாரியார் கூறுகிறார்! ஒரு நாட்டைக் காக்கத் தெரியாமல் சூதாட்டத்தில் நாட்டை இழக்கும் சோம்பேறிகளை 'டெக்கினிக் கல'ரில் காட்ட வேண்டுமாம்! ஆச்சாரியார் கூறுகிறார்! மனைவிக்குத் தம்பியைத் துணையாக நிறுத்தி மானைத் துரத்தி அண்ணன் செல்ல, அந்தத் தம்பி அவளை துணையில்லாமல் விட்டு விட்டுச் சென்ற புத்தியற்றக் கதையை 'டெக்கினிக்கல'ரில் காட்டவேண்டுமாம்! ஆச்சாரியார் கூறுகிறார்! இவற்றை மேல் நாட்டார் பார்த்தால் பாரத புத்திரர்களைப் பாராட்டுவார்களா? இப்படி புத்தியற்ற கதைகள் கூடவா இருக்கின்றன என்று எள்ளி நகையாடுவார்கள்.

நல்ல வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. அதை நாம் மற்றவர்கள் தூற்றுகிறார்கள் என்பதற்காக நழுவ விடப்போவதில்லை.

கலையுலகம் இதுவரையில் யார் யாரிடமோ சிக்கியது. இன்று அது நம் கையிலிருக்கிறது. மற்ற எல்லோரையும் விட நாம்தான் அதற்குத் தகுந்த—பொருத்தமான ஜோடி! பரிகசிக்கிறார்கள், சிலர் என்பதற்காக நாம் அதை விட்டுவிடப் போவதில்லை. அதில் வெற்றியும் பெற்றுத்தான் தீருவோம்.

கலையுலகில் இன்று புதிதாக வேலன், செழியன், அரங்கண்ணல் முதலியோர் புகுந்திருக்கிறார்கள். அவர்களும் நாம் ஸ்தாபித்த 'ரிகார்டை' கட்டிக் காப்பார்கள் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு! முடிவாக நாடகமும், சினிமாவும் நமக்குத் தொடர்பே தவிர உறவல்ல என்பதைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

## வளர்திருக்கிறோம்

நாம் வளர்ந்திருக்கிறோம். தலைவர்கள் ஆற்றிய தொண்டால் - உழைப்பால் வளர்ந் திருக்கிறோம். 'வட நாட்டானே; இந்நாட்டை விட்டு வெளியேறு, வெளியேறு' என்று கூறுமளவுக்குவளர்ந்திருக்கிறோம் இன்னும் வளர வேண்டும்! நிச்சயம் வளரும்! வளர்ந்து 1960-ல் நாம் ஆள்கிறோம், ஆள்கிறோம்! என்னும்படி பணியாற்ற வேண்டும்.

-சேலம் மாநாட்டில் N. V. நடராசன்


## இலக்கிய நூல்கள்

| | | |
|---|---|---|
| திருக்குறள் மூலம் | 0 | 8 |
| திருக்குறள் சிறப்புரை | 1 | 4 |
| திருக்குறள்விளக்கவுரை | 3 | 8 |
| திருக்குறள் பரிமேலழகருரை | 5 | 0 |
| நீதிநூல் தொகை I | 1 | 8 |
| " II | 2 | 8 |

ஸ்ரீமகள் கம்பெனி - சென்னை-1


## தோழியர் பூங்கோதை

[10-ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரித்தனர். அதன் விளைவு சிப்பாய்க் கலகம் நடந்தது.

இதைக்கூட வெள்ளையன் பைத்தியக்காரத்தனம் என்று கூறவில்லை. கலகம் செய்தவர்களை வெள்ளையன் பைத்தியக்காரர்கள் என்று கூறவில்லை. ஆனால் நேரு கூறுகிறார் நம்மை பைத்தியக்காரர்கள் என்று.

கொடுமை புரிந்த ஜாரைக்கூட நான் பைத்தியக்காரன் என்று சொல்லமாட்டேன். யுத்த வெறிப் பிடித்த இட்லரைக்கூட பைத்தியக்காரன் என்று சொல்லமாட்டேன். ஆனால் ஜவஹர்லால் நேருவைப் பைத்தியக்காரர், முழுப் பைத்தியக்காரர் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

சமுதாயப் புரட்சி உலகம் பூராவும் தோன்றி வளர்ந்து வருகிறது. வடநாட்டிலே ராஜா ராம் மோகன் ராய் சமுதாயப் புரட்சி செய்தார். தென்னாட்டிலே—மூவாலூரிலே பிறந்த எங்கள் இராமாமிர்தத்தம்மையார் சிறந்த புரட்சி செய்து வெற்றி கண்டார். தான் பிறந்த சமுதாயத்திலே வாழும் வனிதைகளின் நிலை கண்டு வருந்தி, 'பொட்டறுப்பு இயக்கம்' ஆரம்பித்தார். அதன் விளைவால்தான் இன்று சட்டம் மூலம் தாசிக் குலத்தையே ஒழிக்க முடிகிறது.

சமுதாய விழிப்புத்தான் அரசியல் உணர்ச்சியை ஏற்படுத்தும். பொருளாதார பேதத்தைக் கண்டிக்கும். ஆகையால் சமுதாயத்தை விழிப்புறச் செய்து, பேதங்களை ஒழிக்க ஒரு சமுதாயப் புரட்சிக்கு நாம் அடிகோலியாக வேண்டும் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

வணக்கம்!

# தி. மு. க. வின் அரசியல் கொள்கை ஒன்றுதான் நிலையானது! நேர்மையானது!

## அரசியல் மாநாட்டில் தோழர் எஸ். முத்துவின் திறப்புரை

அண்ணா அவர்களே, தோழர்களே, தாய்மார்களே, வணக்கம்!

அன்று ஒரு பக்கம் ஏழைகளின் முகாம் மற்றொரு பக்கத்தில் பணக்காரர்கள் முகாம் என்று பிரிந்திருந்தது. இந்தச் சேலத்திலேதான் பணக்காரர் முகாம் குழி தோண்டி புதைக்கப்பட்டது. அதுவும் அண்ணாவால்-அண்ணாவின் காலத்திலே நடந்தது.

சுயமரியாதைக்காரர்களை எதிரிகள் கிண்டல் செய்தனர். வேதனையை வெளிப்படுத்த முடியாத நிலையில் இருந்தனர். அந்த நேரத்திலேதான் நமக்கு அண்ணா கிடைத்தார்.

இந்த நாட்டிலே உள்ள தி. மு. க. வின் அரசியல் கொள்கை ஒன்றுதான் நிலையானது; நேர்மையானது.

இன்று ஏழைகள் வாடுகிறார்கள். பிறநாட்டில் மக்கள் வருந்துகிறார்கள். அவர்கள் இந்த நாட்டு மக்கள். இலங்கையிலே கொத்தலாவால் விரட்டியடிக்கப்படும் 10-லட்சம் மக்கள் இந்த மாகாணத்தைச் சார்ந்தவர்கள். வேறு மாகாணத்தவர்கள் அல்ல. அவர்களுக்கு ஏன் துன்பம் நேருகிறது.

அவர்கள் எல்லோரும் திராவிடர்கள். மற்றவர்கள் சுகமாக வாழ்கையிலே, ஏன் திராவிடர்கள் மட்டும் வாடவேண்டும் என்று கேட்டால், குறுகிய நோக்கமா?

இலங்கை வேண்டாம், இந்த நாட்டையே எடுத்துக் கொள்வோம். இந்த நாட்டில் வந்துள்ள பிறர் கூலிகளாக இருக்கிறார்களா? வண்டியிழுக்கிறார்களா? ஆனால் இங்குள்ள திராவிடர்கள் அந்த வேலைகளைச் செய்கிறார்கள். வேலையின்றி வாடுகிறார்கள். வடநாட்டவர் வாழ, திராவிடர்கள் வறுமையில் வாடுவதா? இதைச் சொன்னால் குறுகிய மனப்பான்மை!

இலங்கையில் விரட்டப்பட்டவர்கள் வடநாட்டவர்களாக இருந்தால், நேரு இலங்கைவாழ் மக்களுக்கு ஊறுசெய்யும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவாரா? நேற்று வரையில் நேருவைப் போற்றிப் புகழ்ந்த இலங்கை இந்தியகாங்கிரஸ் தலைவர் தொண்டைமான், 'நேருவே இப்படித் தமிழர்களுக்குத் துரோகம் செய்துவிட்டீர்களே' என்று அலறுகிறார்.

திராவிடர்களுக்கு வாழ்வுஎங்கே? வாழ வசதி எங்கே? வடநாட்டு அகதிகளுக்குப் பணம் தருகின்றனர்; உதவிபுரிகின்றனர். அதே நேரத்தில் இங்கே சேலம் நெசவாளிகள் பிச்சை எடுக்கிறார்கள். மதுரையிலே மங்கம்மா சத்திரத்தருகிலே மக்கள் பிச்சை எடுக்கின்றனர்.

இங்கே பிச்சை எடுப்பவர்களை கவனியாமல், வடநாட்டவர்களுக்கு வசதி செய்துதரும் சர்க்காரோடு நாம் எப்படி ஒத்துவாழ முடியும்? பிரிவினை வேண்டாமா?

இப்படிக் கேட்டால் உடனே நேரு 'பைத்தியக்காரர்கள் - காட்டுமிராண்டிகள்' என்று கருத்தின்றி பேசுகிறார்.

நம்மைப் பைத்தியக்காரர்கள் என்கிறாரே, நேரு, அவர் பைத்தியக்காரர் இல்லையா? இலங்கையிலே பத்துலட்சம் மக்கள் வாடுகிறநேரத்திலே நேருவே, உன் தங்கை, தங்கையின் மக்கள் நாட்டியமாடினார்களே அவர்கள் பைத்தியக்காரர்களா, வாழ்க்கைக்காகப் போராடுகிற நாங்கள் பைத்தியக்காரர்களா?

கும்பமேளாவில் ஆண்களும், பெண்களும் நிர்வாணமாக வர, அதைப் பார்த்து ரசிக்கும் நீங்கள் பைத்தியக்காரரா? வாழ்க்கைக்காகப் போராடும் நாங்கள் பைத்தியக்காரர்களா?

பைத்தியக்காரத் தனத்திலே முழுகிவிட்ட நேருவே நீங்களே கூறுங்கள்.

இப்படிப்பட்ட நாட்டோடு ஒட்டி வாழமுடியாமல்தான் நாம் திராவிட நாடு கேட்கிறோம்.

சென்ற ஆண்டிலே நாம் மும்முனைப் போராட்டம் நடத்தினோம். ஆச்சாரியர் போய் காமராஜர் வந்திருக்கிறார். அவர் கல்விதிட்டத்தை வாபஸ் வாங்க வேண்டும். இல்லையென்றால் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோம்.

ஆச்சாரியார் ஆட்சியில் மூடப்பட்ட ட்ராம் கம்பெனியை, காமராஜர் ஆட்சியில் திறப்பார்களா, இல்லையா என்று எதிர்பார்க்கிறார்கள் மக்கள்.

புதிதாக வந்திருக்கும் மந்திரிகள் என்ன செய்வாரோ தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

நமது நாட்டைப்பெற நாம் உறுதி பூணுவோம் என்று கூறி இந்த அரசியல் மாநாட்டைத் திறந்துவைக்கிறேன்.


### இங்கர்சாலின் நூல்கள்

| | |
|---|---|
| வால்டையர் | 1—0 |
| மூடநம்பிக்கை | 1—0 |
| மதங்கள் | 1—0 |
| அறியாமை | 1—0 |
| உண்மை | 1—0 |
| கோயில்கள் | 1—0 |
| கடவுள் | 1—0 |
| மக்கள் உரிமை | 1—0 |
| இங்கர்சால் அறிவுரைகள் | 0—8 |

கலைமன்றம், சென்னை-1.

# நம் நாட்டை நாம் பெற தி.மு.க. பாடுபடுகிறது

# துரோகிகளுக்கு இனியும் நாம் இடம் கொடுக்கக் கூடாது

## அரசியல் மாநாட்டுத் தலைவர் இளம்வழுதி அவர்கள் வீரவுரை

அன்புள்ள அறிஞர் அண்ணா அவர்களே, வரவேற்புக் குழுவினரே, தாய்மார்களே, தோழர்களே! வணக்கம்!

இன்று அகில உலக அரசுகள் ஜெனிவாவிலே கூடிப் பேசுகின்றன. சீனாவைச் சேர்த்துக் கொள்ளலாமா, கூடாதா என்று ஆய்கின்றன. கொழும்பிலே ஆசிய பிரதமர்கள் கூடிப் பேசுகின்றனர். கயானாவிலே போராட்டம் நடக்கிறது. செட்டிஜகன் போன்றோர் ஆதிக்க வெறியர்களை முறியடிக்கின்றனர். பிரஞ்சிந்தியாவிலே, ஏகாதிபத்தியத்தை விரட்டியடிக்கின்றனர். இந்த நிலையிலே நாம் இங்கு சேலத்தில் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு கூட்டியுள்ளோம்.

இன்று நாட்டு மக்களுக்காகப் போராடுகிறவர்கள் நாம்! டெல்லியின் பிடியிலிருந்து இந்த நாட்டை விடுவிக்க வேண்டிய பொறுப்பு நம்மைச் சார்ந்தது. இன்று இந்த நாட்டிலே இருக்கும் ஒரே ஒரு விடுதலை இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

குறைகளை நீக்க, நம் நாட்டை நாம் பெற தி. மு. க. பாடுபடுகிறது. நமது திராவிட நாட்டைத் தனி நாடாக்கு என்று கேட்கிறோம்! திராவிட நாட்டிலே என்ன இல்லை! காட்டிலே தேக்கு! கடலிலே முத்து! நாட்டிலே நஞ்சை, புஞ்சைகள்! கனிப் பொருள் உண்டு! சுரங்கங்கள் உள்ளன! இயற்கை வாரி யளித்த வளம் பிறவும் உள்ளன! இந்த எழில் நாட்டைத்தான் — இன்பத் திராவிடத்தைத்தான் நாம் கேட்கிறோம்.

ஆனால் இதைச் சிலர் எதிர்க்கிறார்கள். ஆசாரியார் கூடாதென்கிறார்! விபீஷணர்கள் வீம்பு பேசுகின்றனர்! சொந்த நாட்டைக் கேட்கும் நம்மை 'வகுப்புவாதிகள்' என்று சுருக்கமாகக் கூறிவிடுகின்றனர். யார் வகுப்புவாதிகள்? யார் அப்படிக் கூறுவது? ராஜகோபால் ஆச்சாரியார் கூறுகிறார், நாம் வகுப்பு வாதிகளென்று! காமராஜரல்ல, காமராஜ நாடார் கூறுகிறார், நாம் வகுப்புவாதிகள் என்று. சிவஞான கிராமணியார் கூறுகிறார் நாம் வகுப்புவாதிகள் என்று!



அரசியல் மாநாட்டுத் தலைவர்

நாமா வகுப்புவாதிகள்! நம்மிலே எவர், அவர்களைப் போல பட்டப் பெயர்களை ஒட்ட வைத்துக்கொண்டுள்ளனர்? நெடுஞ்செழியன் தான் பெயர்! நெடுஞ்செழியன் முதலியாரல்ல! சம்பத்துதான் பெயர்! சம்பத் நாயக்கர் அல்ல! இருந்தும் நம்மை வகுப்புவாதிகள் என்கின்றனர்— ஆனால் நீதிபதிகள் கூறிவிட்டனர் நாம் வகுப்புவாதிகளல்ல என்பதை! திராவிட நாட்டிற்கு வாங்கிய ஜாமீனை அரசாங்கமே திருப்பிக்கொடு! அது வகுப்புவாதத்தைத் தூண்டவில்லை என்று கட்டளையிட்டது!

இந்த நாட்டிலே நடக்கும் ஒவ்வொன்றையும் கவனிக்கிறோம். தேவையானவற்றிற்கு உதவி செய்கிறோம். புயலால் தாக்குண்டவர்களுக்கு உதவி நிதியளித்திருக்கிறோம். ஆனால் காங்கிரஸ்காரர்கள் என்ன செய்தார்கள்?

பீஹாரிலே நடந்த பூகம்பத்திற்குப் பொருளனுப்பினர்; குவெட்டாவிற்கு நிதி திரட்டித் தந்தனர். ஆனால் தஞ்சையிலே புயலால் தாக்குண்டவர்களுக்காக காங்கிரஸ் தன் சுட்டு விரலைக்கூட அசைக்கவில்லை.

நெசவாளர்கள் கைத்தறி ஆடைகள் விற்பனையாகவில்லை; அதனால்

# திராவிட நாட்டிலே என்ன இல்லை?

வேலையில்லை என்று வேதனைபட்டனர். தலைவர்களிலிருந்து, தொண்டர்கள் வரையிலே கைத்தறி ஆடைகள் தோளிலே சுமந்து வீதிகளிலே விற்றனர். அதனால் ஓரளவு அவர்கள் குறைகள் குறைந்தன. ஆனால் சர்க்கார் என்ன செய்தது.

பம்பாய், ஆமதாபாத், புனா போன்ற இடங்களிலிருந்துவரும் மில் துணியைக்கூட தடுக்கவில்லை.

வட நாட்டுத் தலைவர் நேரு தென்னாட்டாரை—தமிழர்களை 'நான்சென்ஸ்' என்றார். நம்மைமட்டும் தனியாகக் குறிப்பிட்டுக் கூறவில்லை. ஆனாலும் காங்கிரஸ் கவலைபடவில்லை. தி. மு. க. தான் அதை எதிர்த்து ஒரு நாள் தன் சக்தியைக் காட்டியது. அன்று ரயில் நிற்காத இடமே இல்லை! துப்பாக்கி அன்று துரைத்தனம் செய்தது. தென்னாற்காடு மாவட்டத்திலே டி. எஸ். பி. என்னிடம் கூறினார், சிறு தவறுகள் செய்தால்கூட—குற்றங்களைத் தொடர்ந்து செய்தால் சுடும்படி உத்தரவு வந்திருக்கிறது என்று!

அதை மறு நாள் தூத்துக்குடியிலேயே நிறைவேற்றியிருப்பதைக் கண்டோம்.

ஐக்கிய மாகாணத்தில், மாணவர்கள் கோரிக்கையை நிறைவேற்றாத காரணத்தால், 2000 பேர்கள் தண்டவாளத்தில் உட்கார்ந்து ரயிலை நிறுத்தினார்கள். அங்கே துப்பாக்கிச் சத்தம் கேட்கவில்லை. அடிதடி கூட தரவில்லை. ஆனால் கல்லக்குடியிலே—தூத்துக்குடியிலே நம் தோழர்களைச் சுட்டுத் தள்ளினர்; பிணங்கள் அங்கே விழுந்தன.

'டால்மியாபுரம்' என்னும் வடநாட்டினின் பெயரை எடு என்று கேட்டோம். செய்யவில்லை. ஆனால் மாவூர் சர்மா தன் பெயரால் பெயரிடுமாறு எழுதினார். உடனே 'மாவூர் ரோடு' ஏற்படுத்தியது சர்க்கார். நாம், சொன்னோம். அலட்சியப்படுத்தியது!

நமது நியாயமான கோரிக்கைகளைக் கூறுகிறோம். சர்க்கார் செவிசாய்க்க மறுக்கிறது. நம்மைத் தெரிந்து கொள்ள வில்லை. நேருவுக்கு நம் கொள்கைகளைப் புரிந்து கொள்ள முடிய வில்லையா? அல்லது புரிந்து கொள்ள நேரமில்லையா? நேருவுக்கு நம் கோரிக்கையைத் தெரிந்து கொள்ள நேரமில்லை என்றால், அது அவருடைய அகங்காரத்தைக் காட்டுகிறது. புரிந்து கொள்ள முடியவில்லை யென்றால் நேருவுக்கு மூளையில்லை என்றுதான் அர்த்தம்

இந்த நாட்டிலே உள்ள தலைவர்களைக் கூப்பிட்டு ஒரு வட்ட மேஜை மாநாடு நடத்தட்டும், நேரு! பெரியாரை அழைக்கட்டும்! அண்ணாவைக் கூப்பிடட்டும்! வேண்டுமானால் காமராஜரையும் சேர்த்துக் கொள்ளட்டும்! உங்கள் கோரிக்கைகள் என்ன என்று கேட்டு தெளிவு பெறட்டும். அதைவிட்டு கண்டபடி ஏன் உளற வேண்டும். திராவிட நாட்டுப் பிரிவினை நேருவுக்குக் கசக்கிறது! மட்டரகமாக 'சில்லி, நான்சென்ஸ்' விடுதலை இயக்கத்தை-இயக்கத்தின் தலைவரை—கேவலமாக—ஆண்டிப் பண்டாரங்கள்—கூலிக்காரர்கள் பேசுவதைப் போல ஏசியிருக்கிறார்.

யாரோ சோபியா—வாடியா அம்மையார் கூட்டும் மாநாடுக்குவந்தார். டெல்லியிலிருந்து பறந்து வந்து சென்னையிலே இறங்கினார். சென்னையிலே காபி சாப்பிட்டார். உடனே காரிலேறி போயிருக்கலாம். அதைவிட்டு உளுந்தூர் பேட்டைக்கு விமானத்திலே சென்றார்.

உளுந்தூர்பேட்டை யுத்த காலத்திலே விமான நிலையமாக இருந்தது. பின்பு பழுதுபட்டு விட்டது. நேரு வருகிறார் என்பதற்காக அதை மீண்டும் சீர்படுத்தினர். அதற்காக 22 ஆயிரம் ரூபாய் செலவழித்தனர். நேரு உளுந்தூர் பேட்டைக்கு விமானத்திலே வந்திறங்கினார். அங்கிருந்து, 38 மைல்



தலைவர் கொடி ஏற்றுகிறார்




மாவட்ட கிளைகளை காட்டும் படம்

# காட்டிலே தேக்கு! கடலிலே முத்து!

தூரத்திலுள்ள சிதம்பரத்திற்குக் காரிலே சென்ருர்.

சென்னையி லிருந்தே சிதம்பரத்திற்குக் காரிலே போயிருக்கக் கூடாதா? 138 மைல் தூரம்காரிலே போனல் குறைந்தா போவார்! அநாவசியமாக மக்களின் வரிப் பணத்தைப் பாழ்படுத்தி யிருக்கிருர் நேரு!

நேரு பெரிய மனிதரல்லவா? 138 மைல் எப்படி காரிலே போவார் என்று கேட்கலாம். அண்மையில் திருவாங்கூர்—கொச்சியில் நடந்த தேர்தல் பிரச்சாரத்திற்காக நேரு சென்ருர். அப்போது நாளொன்றுக்கு 300, 400 மைல் தூரம் காரிலே சுற்றுப் பயணம் செய்தார். காங்கிரஸ் பணம் காரிலே! கவர்மெண்ட் பணம் என்ருல் விமானத்திலே!


சமீபத்திலே கிழக்கு வங்காளத்திலே நடந்தது, இந்த நாட்டுக்கு ஒரு நல்ல பாடமாக இருக்கும் என்று நம்புகிறேன். அங்கேதான் 50°/。க்குமேற்பட்டமுஸ்லீம்கள்வாழ்கிருர்கள். இருந்தும் முஸ்லீம் லீக் ஆட்சியி லிருந்து தள்ளப்பட்டது! ஜின்னுவின் கட்சி ஆட்சி பீடத்தி லிருந்து தூக்கி யெறியப்பட்டது! ஏன்?

அவர்களுடைய தாய் மொழியான வங்காள மொழிக்குப் பதில் உருது கட்டாயமாக்கப் படுவதை வரவேற்று வாழ்த்தியது லீக்! அதன் பயன் தேர்தலிலே படு தோல்வி!

பாகிஸ்தானிலே பிறக்காத — வாழாத, பம்பாய்க்காரர் ஜின்னு பாகிஸ்தான் கேட்டார்! ஐக்கிய மாகாணத்தில் பிறந்த லியாகத் கேட்டார்! ஆனல் பாகிஸ்தானிலிருந்த எல்லைக் காந்தியும், சையதும் எதிர்த்தார்கள். இருந்தும் ஜின்னு வெற்றி பெற்ருர்.

நாம் திராவிடம் கேட்கிருேம். திராவிடத்தி லிருப்போரே சிலர் இதை எதிர்க்கிருர்கள்! ஆந்திரர்கள் தனியாகப் போய் விட்டனர். கேரளத்தார் தனிநாடு கேட்கின்றனர். கன்னடியர் பிரிந்து செல்ல விரும்புகின்றனர். பிறகு எங்கே யிருக்கிறது திராவிட நாடு என்று சிலர் கூறுகின்றனர்.

1935-க்கு முன்பு பர்மா இந்த நாட்டோடு இருந்த போதும் இதற்குப் பெயர் இந்தியா! அது பிரிந்து சென்ற பிறகும் இதற்குப் பெயர் இந்தியாதான்! அதன்பின் இலங்கை பிரிந்து சென்றது! அப்போதும் இந்த நாட்டுக்குப் பெயர் இந்தியாதான். பிறகு பாகிஸ்தான் இந்த நாட்டிலிருந்து பிரிந்து தனி நாடானது! அதற்குப் பிறகும் இந்த நாட்டுக்கு பெயர் இந்தியா தான்!



இலட்சியக் கொடி

அப்படித்தான் திராவிட நாடும்! விரும்புகிற நாடுகள் பிரிந்துதான் செல்லட்டுமே! அதன்பின் இருக்கிற தமிழ் நாடு ஏன் தனி நாடாக—திராவிட நாடாக இருக்கக் கூடாது என்று கேட்கிறேன்.

இந்த நாட்டிலே சிலர் தேர்தலின் போது உதவி செய்யுமாறு நம்மைப் பிச்சைக் கேட்கின்றனர். வெற்றி பெற்ற பின் எந்த அரசியல் கட்சியுடனும் ஒப்பந்தம் செய்துகொள்ளவில்லை என்று கூறுகிறார்கள். தோழர் இராமசாமி படையாச்சி அப்படித்தான் கூறுகிறார். அவர் கையெழுத்துப் போட்ட ஒப்பந்தப் பத்திரம் தலைமை நிலையத்திலே இருக்கிறது. வேண்டுமென்றால் அதையே படம் பிடித்து பத்திரிகையில் போட்டுக் காட்டுகிறோம்.

ராமசாமி, கள்ளக்குறிச்சியிலே ஒருவரை நிறுத்தினார். அங்கு தி. மு. க. அவரை ஆதரிக்கவில்லை. என்ன ஆயிற்று முடிவு? ராமசாமி உதவி செய்த நண்பர் 'டெபாசிட்' இழந்தார்!

இப்படிப்பட்ட துரோகிகளுக்கெல்லாம் இனியும் நாம் அரசியலில் இடங்கொடுக்கக் கூடாது! கடலூரிலே ராமசாமிக்காக தேர்தல் போது உழைத்ததினால், எத்தனை தோழர்கள் துன்பத்திற்குள்ளானார்கள்? சிலருடைய வீடுகள்கூட எதிரிகளால் கொளுத்தப்பட்டன. அயராமல் உழைத்த அத்தனை தோழர்களுக்கும் துணிந்து துரோகம் செய்துவிட்டார் ராமசாமி.

இனியும் தி. மு. கழகம் இவரைப் போன்ற துரோகிகளுக்குத் துணை போகக்கூடாது. வரும்தேர்தலிலே, திராவிட முன்னேற்றக் கழகம் கலந்து கொண்டு போட்டியிட வேண்டும் என்று விரும்புகிறேன். ஏமாந்த சோணகிரிகள் நம்மைக் குறை கூறலாம். என்றாலும் நாம் அரசியலைக் கைப்பற்றித்தான் தீர வேண்டும். சென்ற தேர்தலிலே பிறரை ஆதரித்து நம் சக்தியைப் பார்த்தோம். வரும் தேர்தலிலே நிச்சயம் நாம் கலந்தாக வேண்டும்!

தூத்துக்குடியிலே நம் தோழர்கள் சதி வழக்கில் சம்பந்தப்படுத்தப் பட்டுச் சிறையிலிருக்கிறார்கள். கே.வி.கே. சாமியும், தங்கப்பழமும் கையிலே விலங்குமாட்டி கோர்ட்டுக்கு அழைத்துவரப்படுகின்றனர். நீதிமன்றத்திலேகீழே ஒரு கொலை கேஸ் நடந்துகொண்டிருந்தது! நான்பார்த்தேன், கொலைக் குற்றம் சாட்டப் பட்டவன் விலங்கில்லாமல் நின்றான்! எதிர் கட்சிக் காரர்களை இழிவாக நடத்தும் இந்த அரசியல் அநாகரீகத்தைவேறெந்தநாட்டிலே நாம் பார்க்க முடியும் ?

எவரோ புதுக்கிராமத்தில் செய்த செயல்களுக்கு, நம் தோழர்களைச் சிறையில் வைப்பது என்ன நியாயம்! இப்போது காமராஜர் பதவிக்கு வந்திருக்கிறார். அவரை ஒருமுறை விருதுநகரிலே போலீஸ் சதி வழக்கில் அநாவசியமாக சம்பந்தப் படுத்தினர். காமராஜர் அப்போது எவ்வளவு கஷ்டப்பட்டார் என்பதை மறந்திருக்க மாட்டார். முடிவில் அவர் நிரபராதி என்று விடுவிக்கப் பட்டார். அப்படிப் பட்டவர் தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்க வேண்டும்! கல்வி திட்டத்தையும் நீக்க வேண்டும்! இல்லை யென்றால் கூடப் போகும் பொதுக் குழுவிலே போராட்டம் நடத்த தீர்மானிக்கப் படும்.

கடைசியாக சென்ஸார் போர்டைப் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். 'சென்ஸே' (Sense) இல்லாதவர்கள் சென்ஸார் போர்டிலே இருக்கிறார்கள். ஆரியர்கள் அந்த இடத்திலே அமர்ந்து கொண்டு, ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். சீர்திருத்த படங்களைப் பார்த்தால் மக்கள் கெட்டு விடுவார்களாம்! இந்த நிலை மாறி நேர்மையோடு—கொஞ்சம் 'சென்ஸோடு' தணிக்கை செய்ய வேண்டும். கண்டபடி படங்களை தாறுமாறு வெட்டி யெறிந்து கொண்டே யிருந்தால், அதை எதிர்த்து ஒரு கிளர்ச்சி நடைபெறும் என்று கூறி என் உரையை இத்துடன் முடிக்கிறேன்.


## உலக அறிஞர்கள் சிந்திய அமுதத் துளிகள்

| | | |
|---|---|---|
| 1. | தாகூர் முத்துக்குவியல் | 0 8 |
| 2. | விவேகானந்தர்வீரவுரைகள் | 0 8 |
| 3. | இராமகிருஷ்ணர் அருள் வாக்குகள் | 0 8 |
| 4. | மாஜினி மணிமொழிகள் | 0 8 |
| 5. | இங்கர்சால் அறிவுரைகள் | 0 8 |
| 6. | ஷேக்ஸ்பியர் வர்ணனைகள் | 0 8 |
| 7. | ஏசுநாதர் உபதேச மொழிகள் | 0 8 |
| 8. | அண்ணாவின் உவமைகள் | 0 8 |
| 9. | கீதை உபதேச மொழிகள் | 0 8 |
| 10. | லெனின் பொன்மொழிகள் | 0 8 |
| 11. | ஸ்டாலின் புரட்சி மொழிகள் | 0 8 |
| 12. | வள்ளலார் வாய் மொழிகள் | 0 8 |
| 13. | கம்பர் கற்பனைகள் | 0 8 |
| 14. | கருணாநிதி கருத்துரைகள் | 0 8 |
| 15. | திருக்குறள் மூலம் | 0 8 |




மாநாட்டின் முகப்பு

# விழித்துக்கொண்டவன் விடுதலை பெற்றபின் இளிச்சவாயர்கள் ஏமாந்திருப்பதற்குப் பெயர் இந்தியா!

## 'ஏகாதிபத்தியம்' இன்று ஓர் இழிசொல்!

### அரசியல் மாநாட்டில் தோழர் சம்பத் முழக்கம்

தலைவரவர்களே, தோழர்களே, தாய்மார்களே! வணக்கம்!

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ஏகாதிபத்தியம் என்னும் சொல் இழிச் சொல்லாகக் கருதப்படுகிறது. எந்த அரசும் தன்னை ஒரு ஏகாதிபத்தியம் என்று கூறிக் கொள்ள அஞ்சுகிறது. ஏகாதிபத்தியம் என்பது இழிசொல், அதை நாம் வைத்துக் கொள்ளக் கூடாது என்றுதான் அரசுகள் கருதுகின்றன! அதனால் ஏகாதிபத்தியங்கள் செத்து விடவில்லை. பழைய ஏகாதிபத்தியங்கள் தற்போது புதிய உருவில் நடமாடுகின்றன.

முதன் முதலில் ஏகாதிபத்தியங்கள் ஏன் தோன்றின. பிறகு ஏகாதிபத்தியங்கள் எப்படி மாறின? 10, 50 ஆண்டுகளுக்கு முன்னால், ஏகாதிபத்யங்கள் அதிகாரத்தை விரும்பி ஏற்பட்டன. அதற்கு முன் நூறு ஆண்டுகளுக்கு முன்னால், ஏகாதிபத்தியங்கள் புகழுக்காக ஏற்பட்டன. ஆங்கிலத்திலே கூறுவார்களே. **'Glory'** என்று, அந்தப் புகழ் பெற்றால் மட்டும் போதும் என்று கருதின.

அரசுகள், பிறநாடுகள் மீது போரிட்டு, வெற்றி பெற்று—புகழடைந்தால் போதுமானதென்று கருதின. அதன் பின் அந்த ஏகாதிபத்தியங்கள் வென்ற நாட்டின் சொத்தை தங்கள் நாட்டிற்குப் பயன் படுத்திக் கொள்ள முனைந்தன. பிறநாட்டைச் சுரண்டி தங்கள் நாட்டைச் சுகத்தில் திளைக்க வைத்தனர். புகழுக்காக ஏற்பட்ட புகழின் அடிப்படையில் ஏற்பட்ட ஏகாதிபத்தியங்கள், சுரண்டல் அடிப்படையில் மாறின. இன்றுள்ள ஏகாதியத்தியங்களும் அதே சுரண்டல் தத்துவத்திலே தான் இருக்கின்றன.

ஏகாதிபத்தியங்கள் தங்கள் புகழ் வெறியைக் குறைத்துக் கொண்டன. பிறநாட்டுச் செல்வத்தைத் தங்கள் நாட்டில் கொண்டு சேர்த்தன. தங்கள் நாட்டு உற்பத்திப் பொருள்களை அந்த நாட்டிலே விற்று இலாப வேட்டையாடின.

ஆனால் முன்பு இருந்த-முதலில் தோன்றிய ஏகாதிபத்தியங்கள் இப்படி இல்லை. அவை புகழுக்கு ஆசைப்பட்டன. அருகே இருக்கும் நாடுகளை வெல்லும். ஆனால் அந்த நாட்டைச் சுரண்டுவதில்லை. தோற்ற நாடு வென்ற நாட்டிற்குக் கப்பம் கட்டினால் போதும். அந்தக் கப்பம் கோடி கோடியாகக் கொட்டித்தர வேண்டுமென்பதல்ல! இரண்டு தம்பிடியாகவும் இருக்கலாம். இரண்டு பீங்கான்களாக இருக்கலாம். ஆனால் கப்பம் என்ற பெயரிலே இருக்க வேண்டும். ராஜ தர்பார் கூடும். கூடிய கொலுவிலே; அந்தக் கப்பம் செலுத்தப்பட வேண்டும். அந்தப் புகழைத்தான் அன்றைய ஏகாதிபத்தியங்கள் விரும்பின.

இடைக் காலத்திலே ஏகாதிபத்தியங்களின் நோக்கம் மாற்றப்பட்டது. புகழுக்குப் பதில், லாபம் தேடுவதில் அவை ஈடுபட்டன. ஒன்றை ஒன்று சுரண்ட ஆரம்பித்தன! இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய ஏகாதிபத்தியங்கள் உலகைச் சுரண்டின அதனால் நேரும்



மாநாட்டில் கலைமன்றம் புத்தகக் கடை

# நேருவே! நீவேறு! நான்வேறு! போ, வெளியே!

ஆபத்தை மக்கள் உணர்ந்தனர். ஏகாதிபத்தியங்களின் பிடியிலிருந்து விடுபட்டனர். 'ஏகாதிபத்தியங்கள் ஒழிக!' என்று கூச்சலிட்டனர். பாவம்! ஏகாதிபத்தியங்கள், அந்தப் பெயரைச் சொல்ல — சூட்டிக் கொள்ள நடுங்குகின்றன.

நடுங்குகின்றனவே தவிர தங்கள் கொள்கையை மாற்றிக் கொள்ள வில்லை. ஏகாதிபத்தியம் என்ற பெயரை மட்டும் வீசி யெறிந்துவிட்டு புதிய பெயர்களுடன் அவை நடமாடுகின்றன; பிற நாடுகளில் நுழைகின்றன. அப்படிப்பட்ட ஏகாதிபத்தியங்கள்தான், இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் மத்திய ஆட்சி பீடமாக இருக்கும் டெல்லி முதலியவை.

இன்றைய ஏகாதிபத்தியங்கள் பிற நாடுகளுக்கு 'பாதுகாப்பு' என்ற முக மூடியுடன் நுழைகின்றன. இந்தப் புதிய பெயருடன் தான் ஆப்ரிக்கா, இந்தோனேசியா முதலிய இடங்களில் நுழைகின்றன. அவைகளின் வாய்ப்பேச்சை இனி எவரும் நம்ப மாட்டார்கள். அவர்கள் உண்மை சொரூபத்தை மக்கள் உணர்ந்து கொண்டார்கள்.

நாம் முன் சொன்ன சுரண்டல் அடிப்படையி லெழுந்த ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியிலே சிக்கியிருக்கிறோம். நம் மக்களின் உழைப்பை—ஊதியத்தை சுரண்டிக் கொள்கிறது டெல்லி ஏகாதிபத்தியம். எவ்வளவு நாள்தான் இந்த மக்கள் குனிந்து கொடுத்துக் கொண்டிருப்பார்கள். இந்த இழிந்த நிலைக்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டாமா? இந்த நாட்டிலே கூட இருக்கிறார்கள் சிலர், சுரண்டக் கூடியவர்கள். அவர்கள் அவ்வளவு ஆபத்தானவர்களல்ல, ஆனால் நிச்சயம் பின்னால் நம்மால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

இந்த நிலையிலே வடநாட்டிலே இருந்து ஒரு மனிதன் அடிக்கடி இந்த திராவிடத்திற்குத் திக்விஜயம் செய்து விட்டுப் போகிறான். அந்த ஆசியாவின் ஜோதி நான்குமுறை சென்னைக்கு வந்திருக்கிறார். நான்கு முறையும் நம்மை ஏசிவிட்டுப் போயிருக்கிறார்.

ஏகாதிபத்தியத்திற்கு இலக்கணம் என்ன தெரியுமா? ஏகாதிபத்தியத்தின் முதல் இலக்கணம் ஆணவம்! திமிர்! வடக்கிலிருந்து தெற்கிற்கு வரும் சோம்பேறிகள் திமிரோடு பேசித்திரிகிறார்கள்.

ஆசியாவின் தலைவர் என்று உலகத்திலே விளம்பரப்படுத்தப்பட்ட பண்டித நேரு, நம்மை 'பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குவெளியே எப்படியிருக்கிறார்கள்' என்று கூறிவிட்டு, உயிரோடு திரும்பிப் போயிருக்கிறார். இந்தியத் துணைக்கண்டத்தின் தலைவர் ஏன் இப்படித் துடுக்குத்தனமாகப் பேசிவிட்டுச் செல்கிறார் என்று எண்ணிப் பார்த்தேன். தென்னாட்டிற்கு வரும் போதெல்லாம் திமிர்ப் பேச்சு பிறக்கிறதே ஏன்?

இங்கிலாந்திலிருந்து ஒருவித சீமை நாய் இந்தியாவிற்குக் கொண்டு வரப்படும். அந்தச் சீமை நாய்க்கு இந்தியாவின் வெய்யில் ஒத்துக் கொள்ளாது.

வட நாட்டிலிருந்து வரும் நேருவுக்குத் தென்னாட்டின் வெய்யில் மூளையைக் குழப்புகிறது. அந்தக் குழப்பத்திலே நேரு ஏதேதோ உளறுகிறார்.

நான் இந்தச் சர்க்காருக்கு ஒன்று சொல்லுவேன். நேரு இந்த நாட்டில் பேச 'பிளாட் பாரம்' அமைத்துத் தரும் காமராஜரின் சர்க்காருக்கு ஒரு யோசனைக் கூறுவேன். வட நாட்டிலே இருந்து வரும் பண்டித நேருவுக்கு, இந்தத் தென்னாட்டின் வெய்யில் தாங்க முடியவில்லை. பாவம்! அவரை அழைத்துவரும் போது 'Air Condition' அமைக்கப்பட்ட பாதையிலே அழைத்து வாருங்கள். பேசுவதற்காக அமைக்கும் மேடையும் Air Condition அமையுங்கள். அதன்பின் அவிழ்த்து விடுங்கள்! ஒரு வேளை குளிர்ச்சியிலே, மூளை தெளிவாக இருந்து—நல்லபடி பேசலாம்!



ஈரோட்டுச் சிங்கம்

தென்னாட்டுக்கு வரும்போதெல்லாம் தமிழ் நாட்டாரை மட்டரகமாகத் திட்டுவதற்குக் காரணம், இந்த நாட்டின் வெய்யில் ஏற்படுத்தும் மூளைக் கோளாறு! இந்தச் சர்க்கார் நான் சொன்ன ஏற்பாட்டை இனிச் செய்யும் என்று நம்புகிறேன்.

நம்மை இப்படித் துடுக்குத்தனமாக நேரு பேசுகிறாரே, மறுமுறையும் இதை நாம் அனுமதிக்கத்தான் போகிறோமா? இன்றைய நிலையை நிச்சயம் மாற்றியமைத்துத்தான் தீர வேண்டும்.

விடுதலைப் போராட்டத்தில் விரைவில் இறங்கி நல்லதொரு பாடத்தை இந்தக் கண்யமற்றச் சர்க்காருக்குக் கற்றுத்தான் தரவேண்டும். கொதிக்கும் நாம் குமுறி எழத்தான் வேண்டும்.

இன்றைய சீனாவின் தலைவர் மா-சே-துங்கை இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் யாருக்குத் தெரியும். சீனாவின் விடுதலைப் போராட்டத்தில் மா-சே-துங் இறங்கிய பின் தான்—உலக நாடுகள் அவரைப் பற்றி அறிந்துகொண்டன; பாராட்டின. நாம் ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் போராட்டத் திட்டம் தீட்டிவிட்டோம். இனி விடுதலைக் கொடியை உயர்த்த வேண்டும்.

இன்று ஏகாதிபத்தியங்கள் தோற்றோடுகின்றன. ஏகாதிபத்தியம் இன்று ஏதாவது ஒரு காரணம் கூறுகின்றது. கோல்ட் கோஸ்டை பிடித்துவைத்திருக்கும் ஏகாதிபத்தியம் அந்த நாட்டு மக்களுக்கு ஆள்வதற்குக் கற்றுத் தருவதாகக் கூறுகின்றது. அதைப்போல நேரு சர்க்காருக்கு ஒரு காரணம் கூறமுடிகி

# திராவிட நாட்டுப் பிரிவினையை எதிர்ப்பவர்கள் ஏகாதிபத்திய வெறியர்கள்

றது. "இந்தியா என்றுமே பிரிந்து வாழ்ந்ததில்லை" என்று கூறுகிறார்.

டெல்லி பார்லிமெண்டிலிலே இந்தியை எப்படி பொதுமொழியாகப் புகுத்துவது என்பது பற்றி பலர் பேசுகிறார்கள். உத்திர பிரதேசத்திலிருக்கிற சில இந்தி வெறியர்கள் ஏன் இன்னும் இந்தியைப் பொது மொழியாக்கவில்லை என்று ஆர்ப்பரித்தனர்.

அதற்கு டாக்டர் கட்ஜு பதில் சொல்கிறார்,

"மாளிகையின் அழகு கட்டி முடித்தால்தான் தெரியும். அஸ்திவாரம் போடும்போது தெரியாது. உத்திரப் பிரதேச மக்களே மாளிகைக்கட்டி முடிக்கும்வரை பொறுத்திருங்கள்" என்று.

மாளிகை கட்டி முடித்தப் பின் வசிகரம் தெரியுமாம்! என்ன மாளிகையது? அதுதான் ஏகாதிபத்திய மாளிகை. அதற்கு இப்போது அஸ்திவாரம் போடுகிறார்களாம்.

அடுத்து லீலாவதி முன்ஷி அம்மையார் இன்னும் பத்து ஆண்டுகளில் இந்தி பொது மொழியாகி விடும். அதற்குள் ஒழுங்காகப் படித்துக்கொண்டால், படிக்கட்டும். இல்லாவிட்டால் மத்திய சர்க்காரிலோ, மாகாண சர்க்காரிலோ பதவி வகிக்க முடியாது, வக்கீலாக முடியாது, என்று எச்சரிக்கிறார்; பயமுறுத்துகிறார்.

முன்னாள் உணவு அமைச்சர் முன்ஷி நம்மைப் பருத்திக் கொட்டைத் தின்னச் சொன்னார். அந்த முன்ஷியின் மனைவியார் இந்த ஆணவப் பேச்சைப் பேசியிருக்கிறார்.

கைலாசநாத் கட்ஜு என்பவர், "இன்றே தென்னாட்டார் இந்தி கற்றுக்கொள்வதைப் பாராட்டுகிறேன். அது புத்திசாலித்தனமான சுயநலம் என்று கூறியிருக்கிறார்.


இப்படி வட நாட்டுச் சோற்றுத் துருத்திகள் ஆணவப் பேச்சுகளை அள்ளி வீசிக்கொண்டேயிருந்தால், நாம் எத்தனை நாளைக்குத்தான் பொறுத்துக் கொண்டிருப்பது? வெகு நாட்களுக்கு எந்த மனித இனமும் இதைப் பொறுத்துக் கொண்டிருக்காது.

குனிந்து கொடுக்கிறவனின் முதுகில் ஏறி எத்தனை நாளைக்குச் சவாரி செய்ய முடியும்? மேலும் மேலும் சுமப்பவன் குனிந்து கொடுத்துக் கொண்டேவா இருப்பான். ஒரு நாளைக்கு மேலே ஏறியிருப்பவனைக் கீழே தள்ளி, அவன் தவடையிலே ஒரு குத்துவிட மாட்டானா? திமிர் பிடித்தவர்கள் பேச அனுமதிக்க நாம் சொரணைக் கெட்டவர்களா?

தலைவர் இளம் வழுதி கூறினார், நேரு ஒரு வட்ட மேஜை மாநாடு கூட்டி, திராவிடர்த் தலைவர்களை அழைத்து பேச வேண்டு மென்று. வட்ட மேஜை மாநாடு கூடத்தேவையில்லை. நேருவே! நீ வேறு, நான் வேறு, இது போதும்! போ வெளியே!

நேருகூறினாராம் "இதுஎன்னதிராவிடர் க(ள)ழகமா? என்வாயிலேயே நுழைய வில்லையே" என்று! எப்படி நுழையும்? அது உன் மொழியல்லவே! எங்கள் மொழி! உன் வாயில் நுழையாத மொழியுள்ள இந்த நாட்டை நீ ஆள வேண்டாம்! அதனால்தான் பிரிய வேண்டும் என்கிறோம்.

வாயில் நுழையவில்லையாம்! இந்தப் பெயர் உன் வாய்க்காகத் தயாரிக்கப் பட்டதல்லவே! எங்கள் மொழியைப்பேச யோக்கியதையற்றவனே! உன்னோடு எப்படி நாங்கள் ஒன்றாக வாழ்வோம்? உன் கலாச்சாரம் வேறு, என் கலாச்சாரம் வேறு! உன் பழக்கவழக்கங்கள் வேறு! என் பழக்க வழக்கங்கள் வேறு! உன் மொழி வேறு! என் மொழி வேறு! உன் இனம் வேறு! என் இனம் வேறு. நீ எவனோ? ஏமாந்த நேரத்திலே ஏறி மிதிக்கிறாய்! 'ஒரே நாடு' என்று உபதேசம் செய்கிறாய்.



கோவிந்தசாமி எம். எல். ஏ.

தலைவர் கூறியபடி, பர்மா இருந்தபோதும் இந்த நாட்டுப் பெயர் இந்தியா! பிரிந்த பிறகும் பெயர் இந்தியா! இலங்கை இதனோடிருந்தபோதும் இந்தியா! பிரிந்த பிறகும் இந்தியா! பாகிஸ்தான் சேர்ந்திருந்த போதும் இந்தியா! பிரிந்து சென்ற பின்பும் இந்தியா! இந்த நாட்டிலே புகுந்தவன் எதையோ கண்டு 'இந்தியா' என்றான். வென்றதை யெல்லாம் அந்தப் பெயரோடு இணைத்தான். அதே பெயரைத்தான் 1947-க்குப் பிறகும் இந்தப் புதிய ஏகாதிபத்திய வாதிகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.


இந்தியா என்றால் என்ன? எது இந்தியா? விழித்துக் கொண்டவர் விடுதலை பெற்றுக் கொண்டு போனபின், இளிச்சவாயர்கள் ஏமாந்திருப்பதற்குப் பெயர்தான் இந்தியா.

தென்னாட்டிலே, திராவிடர் மட்டுந்தானா விடுதலை கோருகின்றனர். மலை ஜாதியினர் கேட்கின்றனர், தனி நாடு! அவர்கள் இருபது லட்சமோ, ஐம்பது லட்சமோ அல்ல! மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ளவர்கள். தனி அரசு கோருகின்றனர்.

நாம் வளமாக வாழ, பொருளாதாரத்தில் முன்னேற தனியாகப் பிரிவதைத்தவிர வேறு வழியில்லை.

இன்றைக்கு அதை எதிர்க்கிறார்கள் நேரு போன்ற ஏகாதிபத்திய வெறியர்கள். ஆம்! திராவிட நாட்டுப் பிரிவினையை எதிர்ப்பவர்கள் யாரானாலும் சரி, அவர்கள் ஏகாதிபத்திய வெறியர்கள் என்று கூறுவேன். அவர்கள்யாராக இருந்தாலும் சரி! அவர்கள் கையிலே காரல் மார்க்ஸின் கருத்துக்கள் இருந்தாலும் சரி, லெனின் புத்தகங்களிருந்தாலும் சரி! அவர்கள் ஏகாதிபத்திய வெறியர்கள் தான்!

# கொடுமைக் கோட்டையைத் தகர்க்கத் தயாராகுங்கள்!



மேடையில் தலைவர்கள்

மேற்கு வங்காளத்திலே ஒருவன் சொன்னான், 'இந்திதான் இந்தியாவின் பொது மொழி என்பது ஒத்துக் கொள்ளப் பட்ட உண்மை' என்று! ஒத்துக்கொள்ளப் பட்ட உண்மையாம்! எவன் ஒத்துக்கொண்டான்? எவன் ஏற்றுக் கொண்ட உண்மை?

சமயத்திற் கேற்றவாறு புளுகித் தள்ளுகிறார்களே, நம் கம்யூனிஸ்டு தோழர்கள், அவர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் அஜாய் குமார் கோஷ் என்பவர். நமது சினிமா உலகில் ஒருவர் இருந்தாரே 'ஆயிரம் முகம் ராம் குமார்' என்று, அவரைப் போல ஆயிரம் உருவெடுப்பவர்.

சமீபத்திலே தமிழ் நாட்டுக்குப் பொங்கல் வாழ்த்து அனுப்பியிருக்கிறார்! புதுமையான செய்தி! புதுமையான வழக்கம்! இந்த அஜாய் குமார் கோஷ் ஒரு முறை இந்தத் தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்தார். சென்னை மாம்பலத்திலே ஒரு பார்ப்பனர் அவரிடம் 'இந்தி பொது மொழியாவதைப் பற்றி உங்கள் கருத்தென்ன? என்று கேட்டார். அதற்கு அவர், இதில் கருத்தென்ன வேண்டியதிருக்கிறது? இந்திதான் இந்தியாவின் 'Inter state language' என்று வழக்கம்போல 'காரம்—மணம்—குணம்' குறையாமல் கூறியிருக்கிறார்.

இவர்களும், பிரஜா சோஷலிஸ்டுகளும் மற்றவர்களும் டெல்லி ஏகாதிபத்தியத்தின் கீழே திராவிடம் இருக்கவேண்டும் என்று மாய்மாலம் பேசித் திரியும் ஏகாதிபத்திய வெறியர்கள்.

காங்கிரஸ்காரர்கள் —கம்யூனிஸ்டுகள்—பிரஜா சோஷலிஸ்டுகள் ஆகிய இம் மூவருக்கும் என்னவித்தியாசம். மூவருமே திராவிடம் அடிமை நாடாக இருக்க வேண்டும் என்பதை ஆமோதிக்கிற ஏகாதிபத்தியர்கள்! அவர்களுக்கிருக்கிற கருத்து வேற்றுமை, கொள்கையிலல்ல! தலைமைப் பீடத்தைக் கைப்பற்றுவது யார் என்பதில்தான்!

தலைமைப் பீடத்தில் நேரு இருப்பதா? கிருபாளினி அமர்வதா? அஜாய் குமார் கோஷ் உட்காருவதா?—இதில்தான் அவர்கள் வேறுபடுகிறார்கள்.

நேரு என்ன சோஷலிஸத்தை எதிர்க்கவா செய்கிறார்? 'சுரண்டலை முறியடிக்கப் போகிறேன்! முதலாளிகளைத் தூக்கிலிடப் போகிறேன்' என்று பேசவில்லையா? பின் ஏன் வேறுபடுகிறார்கள் என்றால், எல்லோரும் ஏகாதிபத்தியத்தை கைப்பற்ற விரும்புகிறார்கள்.

இன்றைக்கு நெய்வேலி சுரங்கத்திலே தொழிலாளர்களுக்குக் கூலி தருவதில் கூட எவ்வளவு வித்தியாசம்? வடநாட்டிலிருந்து வரும் தொழிலாளர்களுக்கு மூன்று ரூபாய் வரை கூலி தருகிறார்கள்! ஆனால் இந் நாட்டவர்களுக்கு, 14 அணாத் தான் கூலி! எவனோ அதிக கூலி பெறுகிறான். நம்மவன் குறைந்த கூலி பெறுகிறான். இது அநீதியல்லவா?

ஏகாதிபத்தியத்தை விளக்குவதற்கு பாமரர்களுக்குப் புரியும்படி நம் காங்கிரஸ் தோழர்கள் சிலவற்றைச் சுட்டிக் காட்டினர். இதோ பார்! இந்தச் சென்னைக்குக் கவர்னர் யார் தெரியுமா? வெள்ளைக்காரன்! வெள்ளைக்காரனின் நாட்டிலிருந்து வந்தவன்!' என்று கூறினர்! ஏகாதிபத்தியத்திற்கு ஓர் அருமையான எடுத்துக் காட்டு! ஏற்றுக் கொள்கிறோம்.

வெள்ளைக்காரன் வெளியேறி ஏழாண்டுகள் ஆய்விட்டன. நேருவுக்கு ஷஷ்டியப்திக்கூட பூர்த்தியாகி விட்டது! இன்றைக்குச்சென்னையின் கவர்னர் யார்? யார் இந்த ஸ்ரீ ஸ்ரீபிரகாசா? வடநாட்டான்! வடநாட்டிலிருந்து வந்தவன்! 1935 ல் கவர்னருக்கிருந்த உரிமைகளும் 1954 ல் கவர்னருக்கிருக்கும் உரிமைகளும் ஒன்றுதானே! வேண்டுமென்றால் சிறு திருத்தங்கள் ஏற்பட்டிருக்கலாம்! அடிப்படை உரிமைகள் ஒன்றுதானே! இது ஏகாதிபத்தியத்தின் அறிகுறி யல்லவா? அந்தக் கவர்னரின் துணையிலேதானே ஆச்சாரியார் இத்தனை நாள் முதலமைச்சராக இருந்தார்! அந்த அதிகார அச்சின் உதவியால்தானே! வேறு எதன் உதவியைப் பெற்று ஆண்டார்! ரஜ கஜ துரக பாதாதிகளின் உதவியைப் பெற்றா? அவருக்கிருக்கும் ஒரே ஓர் ஆயுதம் பூணூல்! என்றாலும் கூட ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியின் உதவியால் ஆண்டார்! ஏனோ இது சில கருத்துக் குருடர்களுக்குப் புரியவில்லை.

இங்கிலாந்திலே சர்ச்சில் ஆள்கிறார் என்றால், அவர் கன்சர்வேடிவ்

[33-ம் பக்கம் பார்க்க]

அகநானூற்றுக் காட்சி—1

## இலக்கியப் பகுதி

# பிரிவாற்றாமை

தங்க-நிலாவழகன்

நாடோறும் அருவியோரமும், சோலையிலும், மலைச்சாரலிலும் கைகோத்து இணைந்து ஓடியாடிப்பாடி மகிழ்ந்தனர், தலைவனும், தலைவியும். ஒருநாள் காதலரிருவரும், வண்டுகள்மொய்த்திடுவதால், தாதுடைந்து மலர்ந்த பூக்களாலாக்கப்பட்ட தலைமாலையும், ஒளிப் பொருந்திய வீரக் கழல்களும், குதிரைகளும் கொண்ட வீரரை, தோற்கடித்து ஓட்டிய முருகனைப் போன்ற நல்ல போர் ஆற்றல் மிக்க நெடுவேளாவியின், அறுத்துத் திருத்தப்பட்ட கொம்புகளையுடைய யானைகள் நிறைந்தபொதினி (பழனி) மலையைச் சேர்ந்தனர். அங்குத் தலைவனும், தலைவியும் வழக்கம் போல் மிகவும் குதூகலத்துடன் இணைந்திருந்த போது, “இவன் தன்னை எக்காரணத்தாலேனும் பிரிய நேரிடுமோ” என ஐயுற்றாள். அந்தச் சந்தேகத்தை உணர்ந்த தலைவன், அவளை அழைத்துக் கொண்டு, சாணைக்கல் செய்கின்ற இடத்தை அடைந்தான். அங்கு அரக்கொடு கல்லைச் சேர்த்து சாணைக்கல் செய்யப் படுகின்ற நிலையைக் காட்டி “இப்படி அரக்கொடு சேர்க்கப்பட்ட கல் போன்று இனி நாம் பிரியோம்” என உறுதிமொழி கூறி அவளைத் தேற்றினான்.

நாட்கள் பல ஓடின. “பிரியேன்” என்று வாக்களித்தாலும், பூவுலகில் பிறந்து விட்டதனால், வாழ்க்கைக்குத் தேவையான பொருளைத் தேடிச் செல்ல வேண்டியவனானான், தலைவன். அதன் பொருட்டு அவன் அவளைப் பிரிந்தான். அந்தப் பிரிவைப் பொறுக்க முடியாமல் தலைவி வருந்திக் கொண்டிருந்த போது, அவளது தோழி அங்கு வந்தாள். அவளைப் பார்த்து அந்தத் தலைவி, “தோழி, அரக்கொடு சேர்ந்த கல் போன்று பிரியோம்” என்றவர், தூர நாட்டிலிருந்து பொன், அணி, செல்வம் திரட்டி வர, சிறந்த மூங்கிலையொத்த தோள்கள் மெலியும்படி என்னை விட்டுப் பிரிந்து பூமிபிளந்து போகும்படி, தீயைப்போன்று வெப்பம் மிக்க சூரியனின் கதிர், பசுமைத் தன்மை நீங்க காய்கின்றபடியால், நிழல் குறைந்து உலர்ந்த மரங்களை உடைய; பாறைகள் கொதித்து நீரற்ற பசிய சுனைகளிலும் ஈரம் இல்லாதபடி காய்வதனால், அங்குச் சொரியும் நெல்லும் பொரியும் கொடும் வெப்பத்தை உடைய; கதிரோன் காய்வதால் வழிச் செல்வார் யாவரும் இன்மையால் காட்டு வழிப் பறிக் கொள்ளைக்காரர்கள் வறுமையால் மெலிய, அவ்வழி பொலிவற்ற நிலையினையுடைய; அசையுங் கிளையினையுடைய நார் இல்லாத முருங்கையின் குலைந்த வெள்ளிய பூக்கள், கடுமையான சூறுவளிக் காற்று வீச, ஒலித்து அலைந்து உடைந்த திரையின் துளிகளைப் போலப் பரந்து கிடத்தலின், கடலின், கரையகம் போலத் தோன்றுதலையுடைய; காட்டினைக் கடந்தேகினர்” என்று கூறித் தலைவனின் பிரிவாற்றாது வருந்தி நின்றாள்.

இப்படிப் பிரிவாற்றாது வருந்தி, தலைவி தன் தோழியிடம் மொழிவதனைத்தும் சேர்த்தாக்கப்பட்ட கவிதையை இனிப் படிப்போம்.

‘கலைமன்றம்’

சந்தா விபரம்

ஆண்டு சந்தா ரூ. 12
ஆறுமாதச் சந்தா ரூ. 6
தனிப்பிரதி அணா 4

ஆண், பெண், குழந்தைஆகிய வர்களுக்கு நல்ல செய்திகளையும், கதை, கட்டுரைகளையும் தரும்

ஒரே ஒரு குடும்பப் பத்திரிகை!
உடனே சந்தாதாரர்களாக சேருங்கள்.

179107

வண்டுபடத் ததைந்த
  கண்ணி ஒண்கழல்
உருவக் குதிரை மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவேளாவி
அறுகோட் டியானைப்
  பொதினி யாங்கண்
சிறுகா ரோடன்
  பயினொடு சேர்த்திய
கற்போம் பிரியலம்
  என்ற சொற்றாம்
மறந்தனர் கொல்லோ
  தோழி சிறந்த
வேய்மருள் பணைத்தோள்
  நெகிழச் சேய்நாட்டுப்
பொலங்கல வெறுக்கை
  தருமார் நிலம்பக
அழல்போல் வெங்கதிர்
  பைதறத் தெறுதலின்
நிழல்தேய்ந் துலறிய
  மரத்த அறைக்காய்(பு)
அறுநீர்ப் பைஞ்சுனை
  ஆமறப் புலர்தலின்
உகுநெற் பொரியும்
  வெம்மைய யாவரும்
வழங்குநர் இன்மையின்
  வெளவுநர் மடியச்
சுரம்புல் லென்ற
  ஆற்ற அலங்குசினை
நாரின் முருங்கை
  நவிரல் வான்பூச்
சூரலங் கடுவளி
  எடுப்ப ஆருற்(று)
உடைதிரைப் பிதிர்வில்
  பொங்கி முன்
கடல்போல் தோன்றல்
  காடிறந் தோரே.

(அகநானூறு—1)

[ததைந்த-தாதுடைந்த, கண்ணி-தலைமாலை, மழவர்-வீரர், காரோடன்-சாணைக்கல் செய்வோன், பயினொடு-அரக்கொடு, வேய்-மூங்கில், வெறுக்கை-செல்வம், தருமார்-வேண்டி, நிலம்பக-நிலம் வெடிக்க, தெறுதலின்-காய்தலின், வெளவுநர்-கொள்ளைக்காரர், அலங்குசினை-அசையும் கிளை, நவிரல்-குலைந்த, பிதிர்வில்-துளிகள்]

# பஞ்சம்

மா. கணபதி

“சோறுடைத்தசோழநாட்டிலே—செங்கோல் செலுத்திய தமிழகத்திலே—பொன் விளைந்த திரு நாட்டிலே!” இன்று பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. பஞ்சம் பல வகை உண்டு. உணவுப் பஞ்சம், உடைப் பஞ்சம், மற்றும் நம் தேவைக்கான பொருள்களின் பஞ்சம் எனப் பல வகை உண்டு.

நமது நாட்டில் பண்டைக் காலங்களில் பெருவாரியாக உணவுப் பஞ்சம் அவ்வப்போது ஏற்படுவதுண்டென்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால், இன்று நாம் பார்க்கிறோம். ‘பெரிய கடை வீதிகளிலும், இரயில்வே நிலையங்களிலும், பஸ்கள் நிற்கு மிடங்களிலும் எத்தனையோ மக்கள் கையேந்திப் பிழைப்பதைக் காண்கிறோம்.” எவ்வளவு தூரம் பஞ்சம் பரந்துக் கிடக்கிறது பார்த்தீர்களா?

நாம் உலக விஷயங்களைத் தெரிந்து கொள்ள அன்றாட—தினசரிப் பத்திரிகைகளைப் பார்த்தால் அவற்றிலே “பஞ்சம், தற்கொலை, களவு போன்றவைகள்தான் முதலிலே மிளிரும்!” ஏன் தற்கொலையும், களவும் இப்புனித—சிறந்த—செல்வம் நிறைந்த நன்னாட்டில் ஏற்படுகிறது? எல்லாம் பொருளாதார நெருக்கடியினால்தான்! வறுமையின் காரணங்களினால்தான்! பொருளாதார நெருக்கடி வளருவது ஏன்?

“காலா காலங்களில் மழையின்மையே முக்கியமாக உணவுப் பஞ்சங்களுக்குக் காரணமாகும்—இந்தியா பருவக்காற்றுப் பிரதேசமாகையால், பருவமழை தவறிவிட்டால் பயிர்கள் நாசமாகும்—நல்ல விளைவைக் கொடுக்காது. மேலும் பூச்சிகள் பயிர்களை நாசஞ்செய்து விடுவதாலும், நிலங்களில்—பூசாரம் குறைவதாலும் தானிய விளைவு குறைந்து பஞ்சம்—பட்டினி—வறுமை எல்லாம் உண்டாகிவிடுகிறது” இவ்வியற்கை காரணங்களோடு இந்நாட்டுக் குடியானவர்களின் பரிதாபகரமான ஏழைமைத் தனமும்—கடன் பட்டுத் தவிக்கும் நிலைமையையும்—அதிகமான வரி விதிக்கும் திட்டங்களும் பஞ்சங்களின் கொடுமையை அதிகப்படுத்தி விடுகின்றன.

“இப்பரந்த நன்னாட்டிலே ஒரு சிறு நயவஞ்சகர்கள் வாழ்வதினால் தான் பொருளாதார நெருச்கடி ஏற்படுகிறது. நெற்றி வேர்வையை நிலத்திலே கொட்டும் உழைப்பாளிகளின் வயிற்றிலே அடிக்கும் பணக்காரர்களினால்தான் வறுமை ஏற்படுகிறது. நாள் முழுவதும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு பற்றாத—போதாதக் கூலியைக் கொடுக்கும் படு நயவஞ்சகர்களினாலும், நாட்டிலே பஞ்சம்—பட்டினி—பசி

# எழில் கூறுகின்றாள்!

கலையரசன்

கதிரவனின் இளவொளியில் நீலவானில்
கதிர் மீது நடை பயினற்றென்றற் காற்றில்
எதிர்ப்பட்ட சிறு சேயின் மழலைப் பேச்சில்
ஏந்திழையாள் இளநகையில் மலரில் கானில்
சதிராடும் மயிற்கூட்டத் தோகை தன்னில்
சலசலென ஓலமிடும் மரக்கூட்டத்தில்
நதியாடும் புள்ளினத்தின் நடிப்புதன்னில்
நாடோறும் அழகி எழில் கூறுகின்றாள்!

ஏர்பிடித்தோர் எழுப்புகின்ற இன்கீதத்தில்
இருளருதும் காதாட்டும் தாளம் தன்னில்
பார்மீதில் தண்ணிலவின் ஒளிக் குளித்து
பலமொழிகள் பேசுகின்ற புதர்க்கூட்டத்தில்
தார் புனைந்த விண்ணகத்துப் பாதை தன்னில்
தலையாட்டி கண்சிமிட்டும் மீன் கூட்டத்தில்
நீர் நிறைந்த புவிமாதின் நீலப் போர்வை
நெளிந்தோடும் மேகலையில் கூறுகின்றாள்!

காட்டகத்தி லுயர்ந் தோங்கும் வட்டக் குன்றின்
காணரிய பசும் போர்வைக் காட்சி தன்னில்
வாட்டமுடன் அணைந்ததனைப் பிரிந்து செல்லும்
வல்லியலாள் நதிப் பெண்ணாள் ஓட்டந்தன்னில்
கோட்டத்துச் சிறப்பையெலாம் விஞ்சிக்கானில்
கொம்பகத்துத் தொங்குகின்ற தேனீ வீட்டில்
ஆட்டகத்துப் பெண்களையே மிஞ்சி ஆடும்
ஆல் விழுதில் அழகி எழில் கூறுகின்றாள்!

சோலை வளர் மலர்க் காட்டில் அரும்பர் மீட்டி
சுதிகூட்டும் நல்லிசையில் மொழிப் பெண்ணாளின்
வாலைமிகு இளமையினில் வயல்களூடே
வருத்த மற இசையெழுப்பும் நடவுப்பாட்டில்
மாலை கண்டு கூட்டொளியும் புட்கூட்டத்தில்
மதிகண்டு பொங்கியெழும் வேலை தன்னில்
காலையினில் களங்கமிலா உள்ளங் கண்டால்;
கண்முன்னே நிற்கும்; எழில் கூறுகின்றாள்!

என்று பாமர மக்கள் கதறும்போது, கதவிற்குதாழ்ப்பாளைப் போடும்பண மிருகங்களினாலும் தான் பொருளாதார நெருக்கடி வளருகிறது."

முக்கியமாக வேலையில்லாத் திண்டாட்டங்களினாலும், "முதலாளிகள் என ஒரு தனி வகுப்பார் ஏற்பட்டு தொழிலாளியின் உழைப்பினால் கிடைக்கும் வருமானத்தில் பெரும் பகுதியினைத் தமக்கு எடுத்துக் கொள்வதாலும்," தொழிலாளியின் வருமானம் குறைந்து போதுமான உணவு, உடை வசதிகள் இல்லாமல் தேகசுகம் கெட்டு கஷ்டத்தை அடைகின்றனர். தொழிலாளிகள் அளவு கடந்து-சக்திக்கு மீறி அதிக நேரம் ஓய்வு, ஒழிவு என்பதே இல்லாது உழைப்பதாலும் அவர்களின் உடல் உடைந்து போகிறது." இந்த நிலைமையிலும் நம் அரசாங்கம் தொழில் செய்யும் மக்களின் நன்மையைப் பாதுகாப்பதற்கு முன் வருவார்களா என்றால் அது சந்தேகமே.

ஆகவே இனிமேலாகிலும்-வருங் காலம் சுபிட்சமாக யிருப்பதற்காகிலும்—நம் நாடு செழுமையடைவதற்கு — இழந்த — கெட்டுப்போன புகழை மீண்டும் பெறுவதற்கு, இவ்வரசாங்கத்தார் அதிகமான சிரத்தையை எடுத்துக் கொள்ள வேண்டும்! ஏழை விவசாயிகளுக்கு—மக்களுக்குத் தானியங்களைக் கொடுக்கும் தொழிலாளர்களுக்கு, போதிய நீர்த் தேக்கங்களை அமைத்து அவர்களுக்கு அவசியப்படுங் காலத்தில் தண்ணீரைக் கொடுக்க வேண்டும். ஏழை விவசாயிகளின் மீது சுமத்தப்பட்ட அதிகமான வரி சுமையைக் குறைக்க வேண்டும். இந் நாட்டிற்குப் போதிய—வேண்டிய தொழிற் சாலைகளை ஏற்படுத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டும். அவ்வாறு அரசாங்கத்தார் "குடிமக்களுக்கு—பாமர மக்களுக்கு நன்மை செய்ய இத்திட்டங்களை முயற்சி செய்யின்—கடைப் பிடிப்பின், ஏழை விவசாயிகளின்-தொழிலாளிகளின் பரிதாபகரமான செய்கை நீங்கி, நாடு நலமுறும்!" இந்நாடு புகழுடன் திகழும்! எங்கும் மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும்.

●

# மாவீரன் காலின்ஸ்

பி. ராஜாமணி

"அன்று காலை நகரம் முழுவதுமே திமிலோகப்பட்டது. அந்த பெரிய மைதானத்தில் வரிசை வரிசையாகக் கைதிகள் நிறுத்தி வைக்கப்பட் டிருந்தனர். உண்மையில் அவர்கள் கைதிகளா? இல்லை. இல்லை. அடிமைத் தளையில் சிக்கி அவல வாழ்க்கை நடத்தும் எத்தனை எத்தனையோ மக்களின் சுதந்திரத்துக்காக உயிரையே அர்ப்பணம் செய்ய தயாராயிருந்த தேசத் தொண்டர்கள்.

# ஒரே வழி

(இளங்கோ)

திருவிடத்தின் பெருமக்காள் செய்தி கேளீர்!
தினையளவும் நலன்விளைக்கா ஆட்சி யின்னும்
இருந்திடவே அனுமதித்தால் நச்சுப் பாம்பை
எடுத்தணைத்துக் கொள்ளுவதற் கொப்பாம்—இன்பத்
திருவிடத்தில் புகுந்திருக்கும் நரிகள் கொட்டம்
தீரவில்லை சாதியெனும் கொடுநோய் காசம்
ஒருசிறிதும் ஒழியவில்லை அறிவை மெய்யை
ஒடுக்கும் மதத் தொழுநோயும் தொலையவில்லை

உழைத்துழைத்தே உடல்தேயும் ஏழை கட்கோ
உயிர்வாழ கால்வயிற்றுக் கஞ்சி யில்லை
மழைவெயில் தங்குதற்குக் குடிசை யில்லை
மனங்கலங்கி வாடுகின்றார் பல்லோர் நெஞ்சைக்
குழைக்குமவர் நிலைமையினை நினைக்க வில்லை
கூரையில்லை மானத்தை மறைப்ப தற்கே
உழைப்பதற்கும் நிலையான இடமும் இல்லை
ஒருநாளில் வேலையெனில் மறுநாள் இல்லை

இரக்கமிலாப் பிறநாட்டில் திராவிடத்தார்
எவ்வளவோ துன்பத்தை எய்துகின்றார்
அரசியலார் துணைபெற்ற சில்லோர் மட்டும்
ஆலமரம் போல்தழைத்து வாழுகின்றார்
அரசியலில் சமூகத்தில் பொருளில் இன்றே
ஆழ்கடலின் அடித்தளத்தில் இருக்கின்றோம் நாம்
முரசடித்து கழறுகின்றேன் இவற்றை நீக்கி
முன்னேற ஒரேவழிதான் என்ன வென்றால்

எல்லோரும் ஒன்றாகக் கூடி நின்றே
இரவு பகல் பாராமல் அறப்போர் செய்வோம்
கல்வரினும் சிறைவரினும் உயிர்கு டிக்கக்
கத்திகுண்டு வரினுமனம் கலங்கா தேற்றுப்
பல்வளமும் நிறைந்ததிரா விடத்தை மீட்டுப்
பகுத்தறிவின் துணை கொண்டு திட்டம் தீட்டி
நல்லாட்சி நாம்நடத்தல் வேண்டும் இந்த
நானிலத்தார் யாவருமே வியக்க நன்றே

நகரப்போலீஸ் ஒற்றர்கள் வளைய வளைய வந்து அந்தக் கைதிகளைப் பார்வை யிட்டனர். சிலரைப் பொறுக்கி யெடுத்தனர். எதற்காக? அந்த கைதிகளை விடுதலை செய்யவா? இல்லை; 'பொறுக்கி யெடுப்பது' என்றால் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாக்குவது என்பது ஆங்கிலப் போலீஸ் அகராதியில் உள்ள அர்த்தம். கைதிகளுக்கு மத்தியில் புன்சிரிப்புத் தவழ நின்று கொண்டிருந்த ஓர் வாலிபன் மீது போலீஸாரின் கவனம் சென்றது. அவனை உற்றுப் பார்த்தனர். ஆனால் அவனைப் பொறுக்கி யெடுக்க, அவர்களுக்கு மனம் வர வில்லை.

அந்த வாலிபன் மட்டும் போலீசாரால் பொறுக்கி எடுக்கப் பட்டிருந்தால் "அயர்லாந்தின் சரித்திரமே வேறு விதமாக மாறிப் போயிருக்கும். உரிமைப் போர், சுதந்திர உணர்ச்சி, முதலியவைகளை மக்களிடையே பரப்பி, அயர்லாந்தின் சரித்திரத்துக்கே ஓர் உன்னத எழுச்சியைத் தந்த வீர சிங்கத்தைப்பற்றி நமக்குத் தெரிந்திராது. அன்று போலீசாரால் பொறுக்கப்படாமல் உயிரோடு விடப் பட்டவன்தான் இன்று அகில உலகமும் புகழும் மைக்கேல் காலின்ஸ்.

ஒன்றல்ல, இரண்டல்ல; ஏழு நூற்றாண்டுகளாக அயர்லாந்து தன் சகோதர தேசமாகிய இங்கிலாந்தினால் அடக்கி ஆளப்பட்டு வந்தது. அதனால் எத்தனையோ ராக்ஷச முறைகளைக் கையாண்டும் இங்கிலாந்தினால் அயர்லாந்தை அடியோடு நசுக்கிவிட முடியவில்லை. காரணம், அந்நாடு அடிமைத் தளையில் கட்டுண்டிருந்தாலும், ஒவ்வொரு தலைமுறையிலும் அயர்லாந்து மக்களுக்குள் தேச பக்த வீரர்கள் உதித்து, இடைவிடாமல் அடிமைத் தளையை அறுப்பதில் முனைந்ததுதான். அத்தகைய தேச பக்த வீரர்களுள் மைக்கேல் காலின்ஸ் இணையற்றவனாவான்.

1917 முதல் 1921 வரையில் விடாமல் நடந்த ஐரிஷ் புரட்சி யுத்த காண்டத்தில் அவன் கதாநாயகனாக விளங்கினான். சின்னஞ் சிறு வயதிலிருந்தே அவனுக்குத் தாய் நாட்டுக்காகச் சொல்லொணாக் கஷ்டங்களுக்குள்ளாகிப் பல தியாகங்கள் புரிந்த உல்படோன் எம்மெட், முதலிய தேசபக்த வீரர்களைப் பற்றிய பாடல்களைக் கேட்பதில் அலாதிப் பிரியம். தபால் ஆபீஸில் குமாஸ்தா உத்தியோகத்திலிருந்த அவனுக்கு கேவலம் தபால் முத்திரை குத்தும் 'தப் திப்' என்னும் ஓசையைக் கேட்கப் பிடிக்கவில்லை. அதற்குமாறாக அந்நிய ஆட்சிக்கே முத்திரை குத்த அந்நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்னும் ஆவலால் துடித்தான். கடைசியில் அவன் வேலைபார்த்து வந்த தபால் காரியாலயம்தான், அயர்லாந்தின் சுதந்திரப் போரை பிரகடனம் செய்து நடத்துவதற்குரிய ராணுவ காரியாலயமாயிற்று. கலகத் தீயைப் பற்ற வைத்து விட்டால், ஜெர்மன் ஆயுத உதவியைப் பலமாகக் கொண்டு அந்நிய ஆட்சியின் வேரைக் கெல்லி வெந்நீரை விட்டு விடலாம் என்று தேச பக்தர்கள் எதிர்பார்த்தனர். தியாக புத்தியும், வீரமும், விடுதலையார்வமும், மிகுந்திருந்தாலும், ராஜதந்திரக் குறைவினால், அது அசாத்திய மாகிவிட்டது. பல தொண்டர்களை அரசாங்கம் கொடூரமாகச் சுட்டுத் தள்ளியது. அடக்குமுறையும், ஆதிக்க வெறியும் எங்கும் தாண்டவமாடின. தற்காலிகமாகப் போராட்டம் நிற்கலாயிற்று. இந்த தோல்வி காலின்ஸ் உள்ளத்தில் பெரும் புயலைக் கிளப்பி அவனை தேச விடுதலைப் போரில் இன்னும் ஆர்வம் கொள்ளச் செய்தது. கொந்தளித்துப் பெருகி வந்த சுதந்திரப் பெரு வெள்ளத்தில், நடுநாயகமாய் விளங்கிய காலின்ஸைப் பிடித்துக் கொடுப்பவருக்குப் பதினாயிரம் பவுன் பரிசளிப்பதாக அரசாங்கம் விளம்பரம் செய்தது.

நள்ளிரவில் மைக்கேல் காலின்ஸ் சிறையிலடைக்கப்பட்ட தோழர்களைத் தன் சூழ்ச்சித் திறமையினால் இரவோடு இரவாக வெளியேற்றியிருக்கிறான்.

கொத்து வேலை செய்யும் ஏழைக் குடும்பத்தில் பிறந்த காலின்ஸ் போருக்கும், புயலுக்கும் மத்தியில் ஒரு பெரிய புரட்சிக்குத் தலைமை தாங்கி நடத்தினான். அடிமைத் தளையையும், அந்நிய ஆதிக்கச் சின்னங்களையும் அடியோடு அழித்து அயர்லாந்தின் சுதந்திரக் கோயிலை நிர்மாணித்து பெருமைக்குரியவனானான். உலக சரித்திரத்தில் என்றென்றும் அவனுக்கு ஓர் இடமுண்டு. சுதந்திரப் போரின் பிரதி

## சிரித்து விளையாடுவதேன்?

(ஆரணி - இராசா)

இன்னமுது தான்படைக்க இனிப்பாகத் தானுண்ணும்
என்னருமைத் தமிழுலகே ஏனுனக்கு இக்கேடு
இன்னலுற்ற நற்றமிழா இன்று நீ உற்றமிடி
உன்னன்ன உள்வருத்தம் ஊற்றெனவே ஊறிடுதே!
கன்னியவள் கடைவீச்சில் கட்டிழந்து விட்டாயா?
கன்னலன்னாள் தேனமுதில் கருத்தழியச் செய்தாயோ?
கன்னமிட்டு கொடுமைமிக களவாடப் பட்டாயோ?
கன்னத்துச் செந்நிறத்துக் காரணந்தா னெதுவோசொல்
சின்னதுவாம் வீடதிலே சித்துவிளை யாட்டாமோ
சின்னபுத்தி செயலெனவே செல்லஉரை சொல்லியுமே
சின்னமென சிறுசிலையும் சிங்காரப் பூணணியும்
சின்னபின்ன மாக்காது சிரித்துவிளை யாடுவதேன்?

பலனாக அயர்லாந்து அமைதியிழந்து ஐந்து வருஷ காலம் தத்தளித்தது. ஆங்கில அரசாங்கம் எல்லையற்ற பலாத்காரத்தைக் கையாண்டு வந்தது. ராணுவச் சட்டப்படி கொடூர தண்டனைகளுக்கும் குறைச்சலில்லை. மாபெருந் தலைவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் எத்தனையோ! நசுக்கப்பட்ட பத்திரிகைகளோ எண்ணிலடங்கா!

இந்தப் போராட்டத்துக்குப் பிறகு பிரிட்டிஷ் அரசாங்கம் சில நிபந்தனைகளுக்கு உட்படுத்தி அயர்லாந்துக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து கொடுக்கவேண்டும் என்ற அபிப்ராயத்தை வெளியிட்டது. இங்கிலாந்துடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளாமல் அயர்லாந்து தனிக் குடியரசாகிவிட வேண்டும் என்று பூரண சுயேச்சையை ஆதரிப்பவர்கள் விரும்பினார்கள். உடன்படிக்கையை ஆதரித்த காலின்ஸுக்கும் மற்ற நண்பர்களுக்கும் இடையே வேற்றுமை வளரத் தொடங்கியது. மூன்றரை வருட காலமாகக் காலின்ஸ் தன் சக்திக்கு மீறி மலைபோன்ற வேலைகளைத் தாங்கி வெற்றிகரமாக முடித்திருக்கிறான். ஆனால் அப்போதிருந்த நிலைமை வேறு, முன்பு தேசமே அவன் பக்கம் நின்றது. இப்போதோ அவன் நண்பர்களிடையே பிளவு ஏற்பட்டு விட்டது. இதனால் அவன் தன்னுடன் மாறுபட்ட தோழர்கள் பலருடன் போராட வேண்டி வந்தது. அதற்காக அவன் ஒரு சுற்றுப் பிரயாணம் தொடங்கிக் காரில் ஊரூராகச் சென்றான்.

நண்பர்களுடன் ஒருநாள் காரில் வேகமாகப் போய்கொண்டிருந்தான்; திடீரென்று, அவனுக்கு பின்னால் சென்று கொண்டிருந்த காரிலிருந்து குண்டுகள் பறந்தன. காலின்ஸ் காரிலிருந்து வெளியே குதித்து தானும் போரில் கலந்துகொண்டு பகைவர்களைச் சுட்டான். காலின்ஸ் தோழர் ஜெனரல் டால்டனும், மெய்காப்பாளர்களும் பகைவர்களைப் பன்முறை சுட்டனர். பகைவர் சிதறி ஓடினர். அப்பொழுது "டால்டன்!" என்று ஓர் ஓலக் குரல் கேட்டது. டால்டன் பதறி ஓடி வந்தார். மற்ற தோழர்களும் வந்தனர். காலின்ஸ் பூமியில் விழுந்து கிடந்தான். அவன் தலையின் பின் புறத்தைத் துப்பாக்கிக் குண்டு துளைத்திருந்தது. இரத்தம் ஆறாகப் பெருகியது. காலின்ஸை உயிரினும் மேலாக மதித்த நண்பர்கள் இருதயம் வெடித்து சோகம் தாங்கமாட்டாமல் கதறினர். அவர்கள் பெருக்கிய கண்ணீர் காலின்ஸின் உதிரப் பிரவாகத்தோடு கலந்து ஐக்கிய மாயிற்று. மறுநாள் நாட்டு மக்கள் எல்லாரும் கூடித் தங்கள் நாட்டின் சுதந்திரச் சிற்பிக்கு அஞ்சா நெஞ்சம் படைத்த தேச பக்த வீரனுக்கு இறுதி மரியாதையைச் செலுத்தினர். இருபதாம் நூற்றாண்டில் எந்த ஐரிஷ்காரனுக்கும் அத்தகைய மரியாதையும் அன்பும் செலுத்தப்படவேயில்லை.

வாழ்விலும் வீரனாய், சாவிலும் வீரனாய் விளங்கிய காலின்ஸ் இறந்து விட்டான் என்று சொல்வது தவறு. உயிருடன் இருந்தபோது அயர்லாந்துக்கு மட்டும் அவன் உரியவனாக இருந்தான். மறைந்த பிறகு உலகத்துக்கே உரியவனாகி எல்லாருடைய உள்ளத்திலும் அவன் உறைகிறான்.

"அப்பா என் விருப்பத்திற்கு விரோதமாக எதையும் செய்யமாட்டார்"
—புஷ்பமணி.

"என் அம்மாவும் கூட அப்படித்தான்!"
—ராஜா.

"அப்படியானால் நம் திருமணம் தடையின்றி நடைபெறும். நாம்..." என்று புஷ்பமணியும்—ராஜாவும் எண்ணி மகிழ்ந்தனர்.

ஆனால்... ... ... ... ... ... ... ...

# பிரித்தது என்?

விருதை ந. இராமசாமி

"புஷ்பா என்னுடைய கடிதம் கிடைத்தா?"

"கிடைக்காமலா இங்கு வந்து காத்திருக்கிறேன்!"

"பார்த்தாயா? பேச ஆரம்பித்தவுடனேயே குறும்பு செய்ய ஆரம்பித்து விட்டாய்?"

குறும்பு, குமரிகளின் பருவத்துக்குரிமை! அது இல்லாவிட்டால் இந்த ஆண்களின் உலகம் எங்களை எறிட்டாவது பார்க்குமா?

"புஷ்பா, உன்குறும்பு கரும்பு போல... ... ... ... ..."

சந்தேகமென்ன? குறும்பு ஊடலின் வித்து—ஊடல் கூடலின் சத்து அன்பரே.

"உன் நாவில் தீஞ்சுவைத் தமிழ் விளையாடுகிறது புஷ்பா"

"ராஜா! உயரிய ஓவியக்கலைஞன் ஒப்பற்ற ஓவியம் வரைவதும்,-கடல் கொந்தளிப்பதும்—பொதிய மலைச் சாரலில் தென்றல் வீசுவதும் ஆச்சரியமா? தமிழ் மொழியைத் தாய் மொழியாய்ப் பெற்ற நான் தீந் தமிழில் பேசுவது ஆச்சரியமா?

எது... ... ... ... ... தமிழ்ச் சொற்போரில்... ... ... ... ...

கல்லூரியில் பரிசுபெற்றுள்ளேன்.

புஷ்பா!

நமது மூச்சுள்ளவரை மூலத்தமிழின் மேன்மையைப் பேசிக் கொண்டேயிருக்கலாம்.—இதுகிடக்கட்டும் ராஜா! இப்படியே ஊருக்கு வெளியே கள்ளத்தனமாக சந்தித்து உறவாடுவது எனக்குக் கொஞ்சங் கூட பிடிக்கவில்லை.

எனக்கு மட்டும் பிடிக்கிறதா என்ன? சரி! நமது திருமணத்திற்கு உன் அப்பா மறுக்கமாட்டாரே!

ஹும்! அப்பா என் விருப்பத்திற்கு விரோதமாக எதையும் செய்யமாட்டார். இவரைத்தான் கட்டிக்கொள்வேன் என்று குறிப்பிட்டுச் சொன்னாலே போதும் 'சரி' என்பார். என் சுகவாழ்வுக்காக அப்பா எதுவும் செய்வார்.

என் அம்மாவும் கூட அப்படித்தான்.

அப்படியானால் நாளைக்கே உங்கள் அம்மாவை எங்கள் வீட்டிற்குப் பெண் கேட்க அனுப்புகிறீர்களா?

"ஆஹா! ஆடுங் குமரிக் கடலைக் காணமாட்டேனென்று எவனாவது கண்ணை மூடிக் கொள்வானா? நாளைக்கு என் அம்மாவை உன் வீட்டிற்கு அனுப்புகிறேன் போதுமா?"

.........ராஜா!............ நம் திருமணம் தடையின்றி நடைபெறும். நாம்...... காதல் மணம் கமழ வாழ்வோம்.

மேலே கண்ட உரையாடல் ராஜாவுக்கும் புஷ்பமணிக்கும் ஊருக்கு வெளியே வேலி ஓரத்தில்—ஞாலம் கருத்த நேரத்தில் நடை பெற்றது. ராஜா யூனியனில் புஷ்பா சேர்ந்து விடவேண்டும். அதற்காக வேண்டிய திட்டங்களை நாளைக்கே அமுலுக்குக் கொண்டு வருவது என்று உடன்படிக்கையில் ராஜாவும், புஷ்பமணியும் ஏகமனதாகக் கையெழுத்திட்டனர்.

இருவரும் திருமணம் செய்து கொள்வதற்கு எவ்வித தடையும் இருக்காது என்ற நம்பிக்கையைக் கொடுத்தது அவ்விருவருடைய பெற்றோர்களும் அவர்களுக்கு வழங்கியிருந்த சுயேட்சை உரிமையே தான்.

ராஜா தந்தையை இழந்து தாயாரின் முழு அன்புக்கும் பாத்திரமானவன். ஒரே பிள்ளை. அப்பிள்ளையின் மனம் நோக வைப்பாளா அம்மா?

புஷ்பமணி சிறுவயதிலேயே பெற்ற தாயை இழந்து தகப்பனாரால் சுதந்திரமாய் வளர்ந்து உல்லாசமாய்ப் பறந்து திரியும் வானம்பாடி.

தன் ஒரே மகளின் உன்னத வாழ்க்கையின் சுகத்திற்காக மறுமணமே செய்து கொள்ளாமல் இருந்து வரும் அவர், இத்திருமணத்தை வேண்டாமென்று மறுப்பார்?

0 0 0

ராஜா! இந்நேரம் வரைக்கும் எங்கேப்பா போயிருந்தாய்? இப்படி இரவும் பகலும் சுற்றினால் உடம்பு என்னத்திற்காகும்......... உம்...... சரி........ என் செய்யலாம். அவர் உயிரோடு இருந்திருப்பாரானால் இதற்குள் உனக்குக் கலியாணமே நடந்திருக்கும். இப்படி சுற்றித்திரிய முடியுமா?......... ராஜா!

கலியாணத்திற்கு இப்போது என்ன அம்மா அவசரம்?

இப்படி நான் கேட்கும் போதெல்லாம் சொல்லிக் கொண்டேயிருக்கலாம எப்போத்தான் கலியாணம் நடத்துவது? என் கண்ணுள்ள போதே உனக்குக் கலியாணம் செய்து வைத்துக் கண் குளிரக் காண வேண்டாமா?.............. இல்லாவிடில்......... என்....... மனம்......

"அம்மா! உங்கள் மனம் புண்படும் படியாக நடப்பேனா? உங்கள் விருப்பம்போல் செய்யுங்கள். ஆனால்......

ஆனால் என்கிறாயே! என்ன?

எனக்குப் பெண் நானே பார்த்து விட்டேன்.

'நீயே பார்த்து விட்டாயா? நன்றாயிருக்கிறதே! அது சரி......... அந்தப் பெண் யாரப்பா?

மகரவீதியில் மூன்றாவது சந்து முனையில் ஒரு ஓட்டு வீடு இருக்கிறது அதுதான் அவள் வீடு. அவள் என்னோடுகூட போன வருடம் படித்தாள்.

'அவள் யாரோ என்னவோ ஒன்றுமே தெரியவில்லை. அப்படியிருக்க நீ...............

அம்மா! குலம் கோத்திரம் இந்த விசாரணையெல்லாம் இப்போது பைத்தியக்காரத்தனமாகப் போய் விட்டது.

உன் பிடிவாதத்தை விடமாட்டாட்டாயா?

அம்மா! இந்த விஷயத்தில் என் விருப்பம்போல் செய்வீர்களானால் மகிழ்ச்சியோடு வாழ்வேன் அம்மா!

ஆனால் அவர்கள் பெண் கொடுக்க விடை தர வேண்டுமே.


**விருதை ந. இராமசாமி எழுதியவை**

| | |
|---|---|
| வழுக்கி விழுந்தவள் | 1 0 |
| மலர்புரி ராணி | 1 0 |
| தளபதி | 1 0 |
| தாமஸ் மசாரிக் | 1 0 |
| கருமுகில் | 1 0 |
| புது வாழ்வு | 1 0 |
| இலட்சியப் பெண் | 1 0 |

விபரங்களுக்கு:
கலைமன்றம் - சென்னை-1


தடை செய்ய மாட்டார்கள் அம்மா! அவளுக்கு அப்பா மட்டிலும் தான் இருக்கிறார்.

சரி......... பார்ப்போம். நாளைக் காலையில் சென்று கேட்டுப் பார்க்கிறேன். போ! போய்ச் சாப்பிடு.

அம்மாவின் அன்பொழுகும் அனுமதியைப் பெற்றுவிட்டான் ராஜா! அவன் உள்ளம் உவந்தது. உடல் பூரித்தது. இரவு பூராவும் தனக்கு நடக்கப் போகும் திருமண நிகழ்ச்சி-வரப்போகும் முதல் இரவுக்காட்சி ஆகிய பல எண்ணக் கடலில் மகிழ்ச்சி பெருக மூழ்கிக் கிடந்தான் அவன்.

0 0 0

மறுநாட்காலை. வழக்கத்திற்கு மாறாக அதிகாலையிலேயே எழுந்து வென்னீர் வைத்துக் குளித்துவிட்டு வெளியே சென்றான். எங்கே?

அம்மாவைப் பெண்வீட்டுக்கு அனுப்ப வாடகை வண்டி கொண்டு வரச் சென்றான்.

வண்டியும் கொண்டு வந்து நிறுத்தி "அம்மா வண்டி கொண்டு வந்து விட்டேன்" என்று உரக்கச் சொன்னான். அம்மா வண்டியில் ஏறினாள்.

'அம்மா' வள வளா என்று பேசிக் கொண்டிருக்காதே. சுருக்கமாய்ப் பேசி முடித்துக் கொண்டு சீக்கிரமாய் வா........... என்றான் பிறிட்டுக் கிளம்பும் ஆவலை அடக்க முடியாமல்.

'சல் சல்' என்று வண்டி புறப்பட்டது. வண்டிபோன திசையைப் பார்த்துக் கொண்டே நின்றான்—சிறிது நேரமல்ல-நீண்டநேரம். அதுவும் வண்டி திரும்பி வரும் வரையிலும்!

வண்டியும் வந்து வாசலில் நின்றது. அம்மாவின் வெற்றியைக் குறிக்கும் தேன் மொழியைக் கேட்கத் துடிதுடித்தது அவன் மனம்.

அம்மா முகத்தில் 'களை'யில்லை என்பதைக் கண்டதும் கலங்கினான். வண்டியைவிட்டு இறக்கியதும் கால்கள் பின்ன—விரைந்து சென்று கட்டிலில் குப்புற விழுந்தாள். அவளுடைய அடங்காத ஆறாத்துயரம் அவளை அழச் செய்தது. விம்மி விம்மி அழுதாள். ராஜாவுக்கு ஒன்றுமே புரிய வில்லை.

ஒரு வேளை புஷ்பமணியின் அப்பா எனக்குப் பெண்ணைக் கொடுக்க மறுத்து விட்டாரா? என்று ஒரு விநாடி நினைத்தான். மறுவிநாடி அவன் மனம் சிதறிக் கலைந்தது. காற்றுச் சுழலால் கலைந்து செல்லும் முகிற் கூட்டம் போல 'அம்மா! அங்கே என்ன சொன்னார்கள்' என்று மெதுவாகக் கேட்டான். எரிமலைக் குழம்புபோல வெளிக்கிளம்பும் அழுகையை நிறுத்த முடியாத அம்மா, "அந்தப் பெண் உனக்கு வேண்டாம்! ஏன் எதற்கு என்று கேட்காதே."

ராஜாவின் நெஞ்சம் துணுக்குற்றது. நள்ளிருள் சூழ்ந்த நடுகாட்டில் மரத்தில் மோதியது போன்ற ஓர் பெரும் அதிர்ச்சி அவனுடைய ஹிருதயத்தைச் சுக்கு சுக்கலாக்கிற்று. அப்படியே மௌனமாய் நாற்காலியில் அமர்ந்தான்.

மலேயா செல்லும் கப்பல் துறை முகத்தை விட்டுக் கிளம்பியது, நீரைக் கிழித்துப் பேரிரைச்சலோடு.

கப்பல் தட்டில் நின்று கொண்டு கண்ணீர் உகுத்தவாறு நின்றாள் புஷ்பமணி. வடித்த கண்ணீர் துளிகள் கப்பல் தட்டில் விழுந்து சிதறி கடல் நீரோடு கலந்தன. அவளுடைய அப்பா அவள் பின்புறமாக வந்து நின்றார்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள், அவளை அறியாமலேயே துக்கம் கிளம்ப 'அப்பா! என்று வாய் விட்டு அலறி, அப்பாவை அணைத்துக் கொண்டாள் புஷ்பமணி!

'புஷ்பா! அழாதே, இதுவரையிலும் நீ கேட்டதை என்றைக்காவது மறுத்ததுண்டா? ஆனால்……… அந்த மாப்பிள்ளை உனக்கு வேண்டாம். ஏன்? என்று மாத்திரம் கேட்காதே. துயரத்தினுள் துயரமிருக்கிறது. புஷ்பா! உண்மையை அப்படியே சொன்னால் ஏற்கனவே அடித்துக் கொண்டிருக்கும் உன் மனம் வெடித்தே விடும். வேண்டாம். என்றார், அவள் அப்பா சோகக்குரலில்.

பிரிவு— தூரம் இவ்விரண்டும் இளமை உள்ளங்களை விரைவில் மாற்றிவிடும் எனக் கருதி புஷ்பமணியையும் ராஜாவையும் பிரிகக மலேயாவுக்குக் கூட்டிச் செல்லுகிறார் அந்த அப்பா! குழந்தைகளின் விருப்பத்தை மறுக்காத இவ்விரு பெற்றோர்களும் புஷ்பாவையும்—ராஜாவையும் ஏன் பிரித்தனர்! ஜாதி, சமயம், உயர்வு, தாழ்வு வேறு எதுவுமே வழக்கமாய் இவர்களைப் பிரிக்கவில்லை. ஆனால் ஏதோ காரணத்தை வைத்து சமுதாயம் இளமை உள்ளங்களை "பிரிந்தது ஏன்?"

0 0 0

குறிப்பு:- பிரித்தது! ஏன்? என்ற இந்தக் கேள்விக்குக் கிடைக்கும் விடையைக் கொண்டு ஒரு சிறுகதை எழுதி யனுப்புங்கள். ஏன்? என்ற காரணத்தை சரிவர விளக்கி சிறந்த முறையில் எழுதி அனுப்புவோருடைய கதை பிரசுரிக்கப்படும். விருதை ந. இராமசாமி. C/o கலைமன்றம், சென்னை—1.

# சாகத் துணிந்த காரணம் இதோ…

கலைமன்ற இதழில் நான் எழுதிய 'சாகத்துணிந்த காரணம்' என்னும் சிறுகதையின் உள்ளே மறைந்து கிடக்கும் மர்மத்தை உடைத்தெறிந்து விடை அனுப்பினர் ஏராளமான வாசகர்கள். சிந்தனைக்கு வேலைதரும் இம்மாதிரியான சிறுகதைகளை நான் எழுதிவரும் புதுமுறையை பாராட்டி மடல் வரைந்தோருக்கும் விடை எழுதும் பணியில் கலந்துகொண்டோருக்கும் என் இதயங் கனிந்த நன்றி.

கீழ்க் கண்ட விடையை தேர்ந்தெடுத்துப் பிரசுரம் செய்திருப்பதோடு இவ்விடைக்கு ஏற்றவாறு எழுதியவர்களின் பட்டியலையும் தந்திருக்கிறேன்.

**விடை:**

1. ஏமாற்றத்திற்கு ஆளான இரு பெண்கள்.
2. தற்கொலையைத்தவிர வேறு வழியே தெரியாத கட்டம்.
3. மரணமே வாவென்ற முடிவுக்கு வந்த மர்மம்.
4. "அதனுள்ளே மறைந்துள்ள மர்மத்தை என் வாயால் கூற மாட்டேன்" என்று கோமளா கூறுகிறாள்.
5. அவளைக்காணோம்: ஆனால் ஒரு பாதி சிகரெட் எரிந்து கொண்டிருந்தது. 6. வாசற் கதவு உட்பக்கம் பூட்டிய படியே (பூட்டினது பூட்டிய படியே) இருந்தது.
7. அவனைக் கண்டேன். எங்கே?
8. என் உயிர் போகும் வரை சொல்ல மாட்டேன் அதை.
9. இனியும் அவனோடு வாழ்வு நடத்தவா?
10. 'உடன்வாழத்தகுதியற்றவன்' என்கிறது என் பகுத்தறிவு மனம்.
11. தலை குனிய வைத்த அந்தச் செய்தியை நான் சொல்லக் கூடாது.

குறிப்பு: 'சாகத் துணிந்த காரணம்' எது என்பதற்கு சரியான விடை அனுப்பிய மேற்கண்ட அனைவருக்கும் ஒரு ரூபாய் மதிப்புள்ள நூல் ஒவ்வொன்று அனுப்பப்பட்டது.

மேற்கண்ட பதினொரு வாக்கியங்களின் நிகழ்ச்சிகளையும், பெண்மையின் அறிவு—ஆற்றலை—இவற்றையும் அலசிஆராய்ந்தால் இதோ கீழ்க் கண்ட மனிதத் தன்மையற்ற நிகழ்ச்சியே எஞ்சி நிற்கிறது.

கோமளாவின் தாய்—விதவை. அவளுடைய படுக்கை—அங்கே கோமளாவின் தகப்பனார் நிலையில் தினகரன் இருந்தான்.

மாமியார் மருமகனாக வரப்போகிறவனுக்கு கணவன் உரிமையை பரிபூரணமாய் வழங்கி இருக்கிறாள்.

கோமளாவின் பார்வையில் இந்த விரசமான காட்சி பட்டு விட்டது. அதன் பின் சாகத்துணியாமல், வேறு என்ன தோன்றும் அந்த அப்பாவிப் பெண்ணின் இதயத்திற்கு?

உடுமலைப்பேட்டை, வே. மலையரசி.
9—4—54

இதே விடையை எழுதியவர்களின் விபரம்: 1. எம். எஸ். பிரகலாதன், தவுலாதாபாத். 2. த. கா. தாசன், வியாசர்பாடி, சென்னை-12. 3. கு. விசுவநாதன், கூடலூர். 4. கு. சி. பழனிச்சாமி, கும்மம்பட்டி. 5. அ. மாரியப்பன், பட்டவாய்த்தலை. 6. செ. கி. யதிராஜன், சென்னை-1. 7. டி. அப்துல் அஜீஸ், வாணியம்பாடி. 8. மா. தமிழ்ச் செல்வன் நானுஓயா, இலங்கை. 9. இரா. சவுந்திர பாண்டியன், தூத்துக்குடி. 10. சு. சேசயன், திருப்பூர். 11. பாரிதாசன், பிள்ளையார் பட்டி. 12. கே. என்மதராசலம், கிணத்துக்கடவு.

சிறுவர் பகுதி தொடர் கதை



# கலைக்கோயில்

பூ. குருசாமி

## 9. இவர் யார்?

மாமல்ல புரத்தின் ஒவ்வொரு சிறு கற்களைப் பற்றிய கதைகளைக் கூறுவதில் அங்கே இருந்தவர்களை முத்து மிஞ்சி விட்டான். மாமல்ல புரத்தில் வருவோர், போவோர்களுக்கெல்லாம் அவன்தான் வழி காட்டி! அவர்களிடமிருந்து காசை பறிப்பதே அவன் தொழில்!

அன்று விடிந்ததிலிருந்து சுற்றிச் சுற்றிப் பார்த்தான். அங்கே புதிய முகம் ஒன்றைக் கூட காண வில்லை. அங்கே—மலைச்சரிவில்-இருந்த ஒரு கல்லின் மீது அமர்ந்தான். தூண்டில் மீன் காரன், தூண்டிலின் மேல் கண்ணோட்டத்தைச் செலுத்துவதைப் போல, 'யாராவது வருவார்களா?' என்று எதிர் பார்த்தான், முத்து.

'டிங்....டாங்' என்ற மணியோசை கேட்டது. திரும்பிப் பார்த்தான், முத்து. பசு ஒன்று தன் கழுத்தில் கட்டிய மணி ஓசை ஒலிக்க, புல் மேய்ந்து கொண்டிருந்தது! அதன் அருகே இளங் கன்று ஒன்று துள்ளி விளையாடியது!

முத்துவின் எண்ணத்தில் அன்னையின் நினைவு தோன்றியது.

"நான் அம்மாவிற்கு இது வரை இரண்டு கடிதங்கள் போட்டேனே! ... பதில் இல்லையே!..." —முத்துவின் எண்ணத்தில் தோன்றியவை இவை!

முத்து சென்னையை விட்டு ஓடி வந்து விட்ட அன்றே, சித்தப்பாவின் தந்தியைக் கண்ட அம்மா சென்னைக்குச் சென்று விட்டாள்—என்பதை முத்து கண்டானா?... என்ன!

'முத்து அம்மாவிற்கு போட்ட இரண்டு கடிதங்களும், அவனது கிராமத்தில் பூட்டி கிடக்கும் வீட்டில் உறங்கிக் கொண்டிருக்கின்றன' வென்று, அவனுக்கு எங்கே தெரியப் போகிறது?

"அம்மா கடிதத்தைக் கண்டவுடன், புறப்பட்டு வந்து கொண்டிருப்பாள். இங்கேவந்து ஏண்டா! முத்து, சென்னையைவிட்டு இங்கே ஏன் வந்தாய்? என்று கேட்பாள்"—அவன் சிந்தனை தொடர்ந்தது.

அம்மா வரும் இன்ப நாளை சிந்தனை மூலம் எண்ணிக் கொண்டிருந்தான் முத்து.

"டேய்! தம்பி" என்ற குரல் கேட்டது. அவனது சிந்தனை கலைந்தது. 'இன்று இந்த மனிதரிடமிருந்து எப்படியாவதுநான் கணவாவதுபறித்து விட வேண்டும்' என்று கருதினான். உடனே அவரிடம் போக எழுந்தான்.

அவன் அவரிடம் போகும் அளவிற்கும், அவ்வளவு சிரமத்தை



அவர் அளிக்க விரும்பவில்லை போலிருக்கிறது!... அந்த மனிதரே அவனை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

"இவருக்கு முதலில் கடற்கரைக் கோயிலைக் காண்பிக்க வேண்டும்... பிறகு மற்ற இடங்களைக் காண்பிக்கலாம்" என்று எண்ணி அந்த மனிதரை நோக்கினான் முத்து.

அந்த மனிதரை எப்பொழுதோ, எங்கேயோ பார்த்த ஞாபகமாய் இருந்தது. "இவர் யார்?"...நன்றாக யோசித்தான். மூளை வேலை செய்த தன் பயனாக அவரை அறிந்து கொண்டான், முத்து.

சென்னையில் அவனை மிரட்டினரே, அதே போலீஸ் காரர்தான் அவர். ஆனால் இப்பொழுது அவர் போலீஸ் உடையில் இல்லை, சாதாரண உடையில் இருந்தார்.

அவர் போலீஸ்காரர்—அவனை சென்னையில் மிரட்டியவர் - என்று அறிந்த முத்து, அவரிடம் செல்ல அவனுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது?...

எதிரே வலை இருக்கிறதென்று அறிந்த மான் அதை வரவேற்றா போகும்?...வேறு எங்கேயாவது ஓடி பிழைக்கத்தானே போகும்!

அதைப்போல முத்து வேறு—திக்கைநோக்கி ஓட ஆரம்பித்தான்.

அகவத் தெரியாத மயில்; கூவத் தெரியாத குயில்; கொக்கரிக்கத் தெரியாத சேவல்—எங்கேயாவது உண்டா? முத்து என்ன ஓடத்தெரியாத குழந்தையா? பள்ளிக்கூடத்தில் நடக்கும் ஓட்டப் பந்தயங்களில் அவன்தானே முதற்பரிசைத் தட்டிச் செல்வான்!

முத்துவேகமாகஓடினான், காற்று வேகத்தில் பறந்தான்.

தாத்தாவிடம், போலீஸ்காரர்வருவதைப் பற்றி கூறிவிடலாமா?... அப்படிக்கூறினால், அவர்—தவறாக நினைத்துக் கொண்டு, 'இந்தத் திருட்டு பயலுக்கா உதவி செய்தேன்?... திருடுவதே மிகவும் கொடியது... அதனினும் கொடியது, திருடுகிறவனுக்கு உதவி செய்வது!... "என்று தாத்தா நம்மீதே கோபப் பட்டால், என்ன செய்வது?..."

அவன் காற்று வேகத்தில் பறக்கும் போதும், அவனது சிந்தனை சிறகடித்து பறந்தது!

"நான் அந்த அன்பு தாத்தாவின் உள்ளத்தை பாழ்படுத்த வேண்டாம்... என்னை அவர் நல்லவனாகவே கருதிக் கொண்டிருக்கட்டும்..."

முத்துவின் சிந்தனையிலிருந்து பறந்த எண்ணம் இப்படி கூறியது!

முத்து ஓடுவதைக்கண்டபோலீஸ் காரரும் அவனை விடாமல், விரட்டினார்; முத்துவும், முன்பைவிட வேகமாக ஓடினான்.

எலியை விரட்டும் பூனையைப் போல போலீஸ்காரர் முத்துவை விரட்டினார். புலியைக் கண்டு ஓடும் மானைப் போல் முத்து ஓடினான்.

"எதிரே மரம் இருக்கிறதா?.... இல்லை பாறை இருக்கிறதா?..." என்று கூடமுத்துகவனிக்கவில்லை. போலீஸ்காரரை அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டேஓடினான்.

முத்துவின் ஓட்டத்தை அவரால் பிடிக்க முடியவில்லை; அதற்காக அவர் நின்று விடவில்லை... ஓடிக் கொண்டுதான் இருந்தார்... முத்து சிறிது தூரத்தில் வேகமாக ஓடிக் கொண்டிருந்தான்! அவனது ஓட்டத்தை நிறுத்த அவரால் முடியவில்லை.

அடிக்கடித் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே, வேகமாக ஓடிய முத்து எதன் மீதோ மோதிக்கொண்டு, கீழேவிழுந்தான்.

அவன் மோதிக்கொண்டது மரத்தின் மீதா?... மரமா இருந்தால் மண்டைபிளந்திருக்குமே!... இல்லை, பாறையா?... பாறையாயிருந்தால், அவன் உடம்பு பாதிக்கப் பட்டிருக்குமே!

பின் அவன் மோதிக்கொண்டது யார் மீது?

ஒரு மனிதரின் மீது!... உடலுக்கும், உயிருக்கும், ஆபத்தான காயங்கள் ஒன்றும் ஏற்படாததால் அவன் மோதியது ஒரு மனிதரின் மீது என்றுமுத்துவுக்கு பிறகுதான் தெரிந்தது!

"நான்தான் திரும்பி பார்த்துக் கொண்டே ஓடிவருகிறேனே!... இந்த மனிதர் ஏன் குறுக்கே வர வேண்டும்?... நான் ஓடிவரும்போது, இவர் சிறிது விலகியிருந்தால், எட்டாத முனைக்குட் பறந்திருப்பேனே!... இன்று இந்த போலீஸ் காரரிடம் நான் அகப்படுவதற்கு இவர் தான் காரணம்!... எனக்கு இடஞ்சலாக இங்கே வந்த இவர் யார்?..."

கீழே விழுந்து கிடந்த முத்து நிமிர்ந்து பார்த்தான். எதிரே......!

(தொடரும்)

# சம்பத் முழக்கம்

[24-ம் பக்கத் தொடர்ச்சி]

கட்சியிலே நின்று வோட்டு பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அட்லி ஆண்டாரென்றால் லேபர் கட்சியிலே நின்று வெற்றி பெற்றார். ஆனால் இந்த நாட்டிலே நடப்பது என்ன? தேர்தல் நடக்கும்போது, ஒதுங்கி குற்றாலத்திலிருந்து விட்டு, பின் கொல்லை வழியிலே புகுந்து கவர்னர் தயவால் ஆட்சி செய்தார் ஆச்சாரியார்! எது தடுத்தது அவரை?

பக்தவத்சலம் தேர்தலில் நின்று, மக்களிடம் "இரண்டு மாடு ஒரு நுகத்தடி! மறந்து விடாமல் அந்தப் பெட்டியில் போடுங்கள்" என்று கேட்டார்.

மக்கள் வெகு ஜாக்கிரதையாக அந்தப் பெட்டியில் போடாமல் வேறு பெட்டியில் போட்டனர். பக்தவத்சலம் தோற்றார். ஆனாலும் விவசாய மந்திரியாகிவிட்டார். விவசாயிகளிடம்போய் "மாடுகட்டுங்கள்! நிலத்தை உழுங்கள்! விதை போடுங்கள்; நடவு நடுங்கள்! கதிர் அறுங்கள்! அறுத்ததை அடியுங்கள்" என்று கூறுகிறார்!

குமாரசாமிராஜா, ராஜபாளைய சீமான். அவர் முதன் மந்திரியாக இருக்கும்போதே 'மக்களே என்னை ஒரு **M. L. A.** வாக்குங்கள்' என்று கேட்டார். மக்கள் முடியாது என்றனர். தோற்றார். ஆனால் இன்று அவர் ஒரிஸாவின் கவர்னர்! அந்த மாகாணத்தின் இளிச்ச வாய்த்தனத்திற்கு ஏற்றபடி 6 லட்சமோ, 7 லட்சமோ சம்பளம் பெறுகிறார்.

சந்தானம் அய்யங்கார் மத்திய பார்லிமெண்டுக்கு, தஞ்சாவூரிலே நின்றார். தோற்றார்! தோற்ற ஒரு வாரத்திற்குள் நேரு "உன்னை தேர்ந்தெடுக்கவில்லையா, தஞ்சாவூர் மக்கள்! ஓடி வாடா மகனே! விந்திய பிரதேசத்திற்கு நீ இன்று முதல் லெப்டினென் கவர்னர் ஜெனரல்" என்றார்.

தவறிப்போய் ஜெயித்தவர்கள் கூட தோற்றிருந்தால் கவர்னராகியிருக்கலாமே என்று வருத்தப்படுகிறார்கள். இதுவா ஜனநாயகம்?

ஏகாதிபத்தியம் ஒரு சுரண்டல் யந்திரம். இந்திய ஏகாதிபத்தியம் ஐந்தாண்டு திட்டத்திற்கு 2060 கோடி ரூபாய் ஒதுக்கியது! அதனால் தென்னாட்டிற்கு திராவிட நாட்டிற்கு என்ன லாபம்? 2060 கோடியின் ஒவ்வொரு தம்பிடியும் வடநாட்டானின் வாழ்வை உயர்த்தப் பயன்பட்டது! அடுத்து ஒரு ஐந்தாண்டு திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள் இந்த அகிம்சா மூர்த்திகள்.

சென்னைக்கு ஒரு 'வரி ஆய்வுக் குழு' வந்திருக்கிறது. இன்னும் இந்த நாட்டிலே என்னென்ன வரி போடலாம் என்று ஆராய்வதற்காக வந்திருக்கிறது, ஆட்டு மந்தையுள் புகுந்து கொழுத்த ஆட்டை விலைப் பேச வரும் கசாப்புக்காரனைப் போல.

இதுவரையில் நடந்தவைகளைவிட வரும் ஆண்டுகளில் வரப்போகிற இழப்புக்கள் மிகவும் அதிகமாக இருக்கும்.

வெள்ளைக்காரன் ஆக்கிவைத்த அடக்குமுறைகளைப் பழக்கமில்லாததால் எப்படியோ பயன்படுத்திவிட்டனர். ஏழாண்டுகள் பழகியாகிவிட்டது. இனி இந்தச் சர்க்கார் புதிய திருடனல்ல! பழக்கப்பட்ட பக்காத் திருடன்! மளமளவென்று திருட ஆரம்பிப்பான்!

ஒரு நாட்டின் விடுதலை வேட்கையைக் குறைக்க—மறக்கச் செய்ய ஏகாதிபத்தியங்கள் வெளிநாட்டைப் பற்றி நிறைய பேசும்! வெளி நாட்டிலே இந்த நாட்டிற்கிருக்கும் மதிப்பு பாரீர் என்று காட்டும்! அதைப்போலத்தான் இன்றைய டெல்லி ஏகாதிபத்தியமும் செய்கிறது! கொரிய பிரச்னை சமாதானத்தைப் பற்றி பேசுகிறது! அமெரிக்க நாட்டிலே ஐக்கிய நாடுகள் சபையிலே தலைவராக இந்தியப் பெண்மணியைக் காணீர் என்கிறது. இதோ பாருங்கள் 6000 பேர்கள் டெல்லியை விட்டுப் புறப்படுகிறார்கள்! சென்னையிலே ஆச்சாரியார் ஆசீர்வதித்து அனுப்புகிறார்! கொரியாவிலே கடமையைச் செய்துமுடிக்காமல் கண்ணீர் வடிய இடிப்பொடிந்து திரும்புகிறது மீண்டும் ஆச்சாரியார் வரவேற்கின்றனர், என்று விளம்பரப்படுத்துகிறது. இது ஏகாதிபத்தியங்கள் கையாளும் வழக்கமான தந்திரங்கள்.

கங்கையும், யமுனையும் சரஸ்வதியும் கலக்கிற விடத்திலே குளித்தால், பாட்டனுக்குப் பாட்டன் செய்த பாவம், பேரனுக்குப் பேரன் செய்த பாவம் நீங்கும் என்று நம்பும் கடைந்தெடுத்த வடிகட்டின முட்டாள்தனத்துப் பெயர் கும்பமேளா!

அங்கு வரும் நிர்வாணச் சாமியார்களைக் காண முப்பது லட்சம் மக்கள்!



சேலம் மாநாட்டில் போட்டோக்களை பிடித்துத் தந்துதவிய நண்பர் திரு ந. பிச்சமுத்து அவர்கள்

இந்த விழாவிலே நேரு இருந்திருக்கிறார்! பிரசாத் இருந்திருக்கிறார்! கட்ஜூ இருந்திருக்கிறார். மூவரும் குளித்திருக்கிறார்கள், பாவம் போவதற்காக!

நிர்வாணமாக வந்த ஆண்—பெண்களைக் காண மக்கள் நெருங்க—சாமியார்கள் சூலாயுதத்தால்—ஈட்டியால் குத்த இதனால் ஏற்பட்ட நெரிசலால் நூற்றுக்கணக்கானவர்கள் இறந்தார்கள். இந்தக் காட்டுமிராண்டி செய்கையைக் கண்டிக்கும் 'காமன்சென்ஸ்' இல்லாத நேரு நம்மைப் பைத்தியக் காரர்கள் என்கிறார். அவரோடா நாம் வாழ்வது?

இன்று பிரஞ்சிந்தியாவிலே ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தி விட்டனர், மக்கள். அவர்களை என்ன செய்ய முடிந்தது!

இப்படித்தான் ஏகாதிபத்தியங்கள் பயந்து வாழும் வரை கொடுமை புரியும். கொதித்தெழுந்தால் கீழே சாயும்.

இன்று அரசியலில் நாணயக் குறைவு அதிகமாகி விட்டது! ராமசாமி படையாச்சி பல்லை இளித்தவுடன், காமராஜர் போட்ட மந்திரிப் பிச்சையை ஏற்றுக் கொண்டார். அவர் வந்தால் இந்தக் காமராஜர் எப்படி ஏற்றுக் கொள்ளலாம்! காங்கிரசை எதிர்த்து வெற்றி பெற்றவர் தானே ராம சாமி!

ராமசாமி இன்று செல்லுமிடங்களிலெல்லாம் தி. மு. க. வைத் திட்டிக் கொண்டு வருகிறார். இந்த இழி செயல்களுக்கு நிச்சயம் ஒரு முடிவு கட்டியாக வேண்டும்.

அரசியலை நமதாக்கிக் கொள்ள வேண்டும். அது சீமான்களின் பொழுது போக்கு மண்டபமாக இருக்க விடக் கூடாது. ஆணவம் பிடித்த நேரு சர்க்காரும், அதற்கு வால் பிடிக்கும் விபீஷணர்களும் திராவிட நாட்டுப் பிரிவினையைப் பற்றி ஒருசமரச உடன் பாட்டுக் குத்தங்களைத்தயாராக்கிக்கொள்ள வேண்டும். இல்லையென்றால், அண்ணாவின் தலைமையிலே புரட்சி நடத்த வேண்டிய அவசியம் நேரும். இனியும் நாம் காலத்தை ஓட்டக் கூடாது! விடுதலைப் போராட்டத்தில் விரைவில் இறங்க வேண்டும். அது எப்போது? தேதி சொல்ல முடியாது! திடீரென்று அந்த நாள் வரும். அன்று கொடுமைக் கோட்டையைத் தகர்த்தெறிய தயாராக இருக்க வேண்டும், என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

## வெற்றி பெறுவோம்

திராவிடத்தின் வளத்தை ஒரு முறை சிந்தித்துப் பார்த்து, சம்பத் கூறியபடி டெல்லிஏகாதிபத்தியத்தின் கீழ்இருக்கிறோம் என்பதை ஒரு முறை நினைத்துப் பார்த்தால், இந்த நாடு எழுச்சி பெற்று விடுதலை பெற வேண்டாமா? என்ற முடிவுக்கு வருகிறோம்.

இன்றைய தினம் அரசியல் விழிப்புக்குக் காரணம்- நமது தாய்மொழி தமிழ் மொழி மீது ஏற்பட்டப் பற்றுதான்!

700 ஆண்டுகளாக உரிமைக்குப் போராடிய அயர்லாந்து மக்கள், தோல்வி யடைத்தனர். அந்த நேரத்திலே தான் 'கேல்' மொழியின் தூசிகளைத்துடைத்து, மாசுகளை அகற்றி, சிம்மாதனத்திலே ஏற்றினர். கேல் மொழியில் பலப்பல இலக்கியம் தோன்றின தாய்மொழிக்கு மரியாதை செலுத்திய பின் தான் விடுதலை போராட்டம் தொடங்கியது. ஆர்தர் கிரீப் அந்த நேரத்திலே தோன்றினான். வெற்றியை வாங்கித் தந்தான்.

அங்கே ஆர்தர் கிரீப் என்றால், இங்கே அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

—சேலம் மாநாட்டில் மு. கருணாநிதி

# அரசியல் மாநாட்டில் தோழர்கள் முழக்கம்

**மதியழகன்**

வானம்பாடிகளும், வல்லூருகளும் ஒன்றெனக் கூறுவது எவ்வளவு தவறோ, புலிகளும், புள்ளிமான்களும் ஒன்றெனக் கூறுவது எவ்வளவு தவறோ, அவ்வளவு தவறானது, இந்தியச் சட்டம், ·பிராமணர்களும் மேல் ஜாதிக்காரர்களும், பிராமணரல்லாதாரும் கீழ்ஜாதிக்காரர்களும் ஒன்றுதான் என்று கூறுவது.

அகில உலகத்திலே எந்த நாட்டிலும் இல்லாமல், இந்த நாட்டிலே மட்டும்தான் இருக்கிறது, 'தடுப்புக் காவல் சட்டம்' இந்தச் சட்டத்தை உலக நாடுகள், யுத்த காலங்களில் மட்டும்—அவசியமான நேரங்களில் மட்டும் கொண்டு வருவார்கள். இந்த நாடுதான் அந்தத் தடுப்புக் காவல் சட்டத்தை மெதுவாக அரசியல் சட்டத்தில் நுழைத் திருக்கிறது. இதைவிட வெட்கக் கேடான சேதி வேறொன்று மில்லை. இதுதான் ஜனநாயகத்தை கேலிக் குரியதாக ஆக்கி விட்டது.

இந்த அரசியல் சட்டம், பணக்காரர்களுக்காக மடாதிபதிகளுக்காக பிராமணர்களுக்காக ஏற்பட்டதே தவிர, பாமரர்களுக்காக அல்ல! மக்களுக்காக அல்ல!

**நெடுஞ்செழியன்**

வளமார் திராவிட நாட்டைத் திருப்பிப் பெறத்தான் பாடுபடுகிறோம். இலக்கிய வளத்தைக் காட்டிக் கேட்கிறோம். அறிவு வளத்தைக் காட்டிக் கேட்கிறோம். எங்கள் நாட்டை எங்களுக்கே கொடு என்று கேட்கிறோம்.

24,000 மைல் சுற்றளவு உள்ள உலகம், பண்டித நேருவின் கீழேயோ, ஐசன்ஹோவரின் கீழேயோ, மலங்கோவின் கீழேயோ இல்லை.

போப்பாண்டவரின் வேட்டிகன் நகரம் தனிநாடு. அதன் மொத்த ஜனத்தொகை ஆயிரம் பேர், மிகப் பெரிய நாடு சீனா. அதன் ஜனத்தொகை 45 கோடி நாம் கோரும் திராவிடத்தின் ஜனத்தொகை 7¾ கோடி! தெலுங்கு, தமிழ், கன்னடம், கேரளம் அத்தனைப் பேரும் சேர்ந்து, இனவழி ஒன்றுபட்டு, தபால் தந்தி வழி ஒன்றுபட்டு, ரெயில் வழி ஒன்றுபட்டு, சுதந்திர சோஷிலிச, சமதர்ம திராவிட குடியரசு அமைக்க வேண்டும் என்கிறோம்.

போப்பின் வேட்டிகன் நகரம் சேலத்தைவிட சின்ன நாடு, அதை நேரு சர்க்கார் தனி நாடாக மதித்து பிரதிநிதிகளை அனுப்புகிறது. நாம் ஏன் தனித்து வாழ முடியாது ?

உலகில் நாடுகளின் வரிசையில் திராவிடம் எட்டாவது இடம் பெறுகிறது. அதற்குக் கீழே 87, 88 நாடுகள் உள்ளன. நம்மைவிடச் சிறியதுதான் பிரிட்டன், நம் நாட்டை விடச் சிறியதுதான் பிரான்ஸ், நம்நாட்டைவிடச் சிறியதுதான், காலடியில் கிடக்கும் இலங்கை. நம் நாட்டைவிடச் சிறியதுதான் மூன்று லட்சம் ஜனத்தொகையுள்ள சுண்டக்காய் நாடு லக்ஸம்பர்க். காங்கிரஸ்காரர்களே, கம்யூனிஸ்டுகளே அவற்றை விடப் பெரியது - 7¾ கோடி ஜனத்தொகையுடையது நம் நாடு! அது பிரிந்தால் வாழும்! வளத்தோடு வாழும்!

எ. எம். ஹரால் கூறுகிறார் : வள முழுவதும் திராவிடத்தில்தான் இருக்கிறது. அவர் நிறைய படித்தவர்—நிலவளத்தை அறிந்தவர். அவர் கூறுகிறார்: நம் நாட்டில்தான் வளம் நிறைந்திருக்கிறது என்று. இப்பொழுது கூறுங்கள், திராவிடம் பிரிந்தால் நஷ்டம் நமக்கா, வட நாட்டிற்கா என்று! வட நாட்டிற்கு நஷ்டம்! அது இதுவரையில் நம் நாட்டின் வளத்தில் வாழ்கிறது.


சென்னைத் துறைமுகத்திலே மட்டும் 19-கோடி ரூபாய் கிடைக்கிறது. கொச்சியில் மட்டும் 9-கோடி ரூபாய் கிடைக்கிறது. திராவிடத்திலுள்ள மொத்த துறைமுகங்களின் வருமானம் மட்டும் 40-கோடி ரூபாய்.

பீஹார் தராது; உத்திரப் பிரதேசம் தராது. நாம் கேட்கிற திராவிட நாடு பிரிந்தால், 40-கோடி ரூபாய் சென்னையிலுள்ள சுப்ரமணியத்தின் கஜானாவிற்குப் போகுமே தவிர, சிந்தாமணி தேஷ்முக்கின் கஜானாவிற்குப் போகாது! 40-கோடியும் இங்கே தங்கும்.

நம்முடைய நாட்டிலே எல்லா வளங்களும் உள்ளன. பிற நாட்டில் இல்லாதவைகள் உண்டு. கனிப் பொருள்கள் உண்டு. நெய்வேலியே இரண்டாயிரம் ஆண்டுகள் வரை எடுத்துக்கொண் டிருக்க பழுப்பு நிலக்கரி உண்டு. மற்றும் பல உண்டு! ஆனால் இந்த வளத்தை, வடநாடு பயன்படுத்திக்கொள்கிறது. திராவிட நாடு பிரிந்தால் இந்த வளத்துடன் வாழலாம். இந்த வளங்களை எல்லாம்விட மிகப் பெரிய


கலைமன்றம்
விற்பனையாளர்கள்
M. H. M. அபுபக்கர்
பிறையாறு
(தஞ்சை ஜில்லா)

A. இளமாறன்
10, இராமசாமி கோயில் மேல வீதி
கும்பகோணம்.

நெடுஞ்செழியன்

வளமான அண்ணா அவர்களைப் பெற்றிருக்கிறோம். இவ்வளவு வளம் பொருந்திய நாடு வாழ முடியும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியபடி 'வளமார் எமது திராவிட நாடு வாழ்க வாழ்க!' எனக் கூறி முடிக்கிறேன்.

## ஏ. வி. பி. ஆசைத்தம்பி

தலைவரவர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, வணக்கம்.

நேரு நம்மை ஏசினார் அதனால் எனக்கு ஆத்திரமில்லை. நான் சென்ஸ் என்றபோது ஆத்திரப்பட்டேன், மற்ற நண்பர்களைப் போல. ஆனால் முடிவில் பைத்தியக்கார விடுதிக்கு வெளியில் இருப்பவர்கள் என்று சொல்லும்போது ஆத்திரப்படவில்லை பரிதாபப்பட்டேன்.

முதலில் 'நான்சென்ஸ்' என்றபோது அண்ணா அவர்கள் கூறியதைப்போல மறந்தோம், மன்னித்தும், பின்பு மேலும் 'காட்டுமிராண்டி' என்றார். நாம் ரயிலை நிறுத்தி, சக்தியை காட்டினோம். ஆனாலும் புத்தி வரவில்லை. மீண்டும் இப்போது கூறுகிறார் என்றால், உண்மையிலேயே நேருவுக்கே மூளை நல்ல நிலையிலில்லை என்பதுதான் காரணம். அவர் ஓர் [Half crack] அரைப் பைத்தியம்!

சிதம்பரத்தில் நடராஜரைப் பார்த்துவிட்டு வெளியே வரும்போது:உண்மையிலேயே கொஞ்சம் அவர் மூளை நல்ல நிலையிலிருந்திருந்தால், நாட்டிலே கஞ்சிக்கில்லாதவர் ஏராளம். வைரமாலைகளை ஆண்டவனுக்கு அணிவித்திருக்கிறார்களே, அட பைத்தியக்காரர்களே" என்று கூறவில்லை. அதைப் பொது உடமையாக்கி மக்களுக்குப் பயன் படுத்த வழி செய்யவேண்டும் என்னும் நம்மைப் பார்த்துப் பைத்தியக்காரர்கள் என்கிறார்.

நேருவின் தங்கைப் புதல்விகள், இலங்கையில் கொத்தலவாலாவையும், மற்றவர்களையும் கட்டி அணைத்துக்கொண்டு நடனமாடினார்கள் அவர்களைப் பைத்தியக்காரர்கள் என்று சொல்ல நேருவுக்கு வாய் வரவில்லை. நம்மைப் பார்த்து பைத்தியக்காரர்கள் என்கிறார்.

சிதம்பரம் ஜெயராமன் பாடுவார் 'எது வேண்டும, இதா? அதா?' என்று. அதைப் போல "காமராஜரே உனக்கு எது வேண்டும், முதலமைச்சர் பதவியா? காங்கிரஸ் தலைமைப் பதவியா? என்று கேட்டது வடக்கு! காமராஜர் முதலமைச்சர் பதவியே போதும் என்று கூறிவிட்டார். அது வடக்கிற்கு மேலும் மேலும் பணிவதைக் காட்டுகிறது. நேரு மட்டும் அந்த இரு பதவிகளை வகிக்கும்போது நான் ஏன் வகிக்க கூடாது என்று கேட்கவில்லை காமராஜர்.

காமராஜர், புதிய கல்வித்திட்டத்தை இன்னும் வாபஸ் பெறவில்லை. ஆராய்வதாகக் கூறுகிறார். 'காமராஜரே, நீர் அதை வாபஸ் பெறாவிட்டால், ஆச்சாரியார் வீட்டை முற்றுகை யிட்டதைப் போல உன் வீட்டையும் தி. மு. க. தோழர்கள் முற்றுகையிட வேண்டி நேரும். அந்த நிலைக்கு தி. மு. க. வரத்தான் வேண்டும்.

## சத்தியவாணி முத்து

உரிமை என்றால் இருவகைப்படும். ஒன்று சமுதாயத்தில் உரிமை. மற்றொன்று அரசியலில் உரிமை பெண்களுக்கு உரிமைத் தேவை என்பது சமுதாயத்திலே மட்டுமல்ல அரசியலிலும் உரிமைத் தேவை!

பெண்கள் அரசியலிலே சேவை செய்துள்ளார். நாட்டுச் சேவைக்காக பெண்கள் செய்துள்ள சேவைகளை வரலாறு தெரிவிக்கிறது.

சீனத்திலே, எகிப்திலே, ரஷ்யாவிலே பெண்கள் மாபெரும் காரியங்களை சாதித்துள்ளனர். நாட்டை நன்கு ஆண்டிருக்கின்றனர் பெண்கள். விக்டோரிய மகாராணி எலிஜபெத் மகாராணி, மேரி, முதலிய அரசிகள் பலரை வரலாற்றிலே காணலாம்.

பெண்களுக்கு சமுதாயத்திலே அளிப்பதைப் போலவே அரசியலிலும் உரிமை யளிக்கவேண்டும், அந்த பொறுப்பு ஆண்களிடம் தான் இருக்கிறது.

## கி. மனோகரன்

ஒரு மனிதனுக்குப் பைத்தியம் வருவதற்கு மூன்று கட்டங்கள் உள்ளன. முதலில் பைத்தியம் கொண்டவன் மௌனமாக இருப்பான். இரண்டாவது கட்டத்திலே வாய்க்கு வந்ததைப் பேசுவான். தெருவில் போவோர்வருவோரைத் தூற்றுவான். மூன்றாவது கட்டத்தில், கற்களையும், கழிகளையும் மற்றவர்கள் மீது வீசியெறிவான். வெருண்ட மற்றவர்கள் தரும் தண்டனையும் பெறுவான்.

இதில் பண்டித நேரு தற்போது இரண்டாவது கட்டத்திலே இருக்கிறார்.

டெல்லியிலிருந்து வீசும் எதேச்சாதிகார புயலைத் திராவிடத்தின் கண்ணியத் தென்றல் எதிர்க்கிறது இடையிலேதான் நேரு உளறுகிறார்.

## சி. பி. சிற்றரசு

"நாம் பைத்தியக்காரர்களாக மாறிவிட்டால் போலீஸ்காரர்களின் துப்பாக்கி நம்மிடம் இருக்கும். நீதிமன்றத்தில் நாம் இருப்போம்."

"ஏன் இவர்கள் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு வெளியே இருக்கிறார்கள்." என்று கேட்கிறார் நேரு. நாம் வெளியே இருக்கிறோம் அவர் உள்ளேயிருந்து நம்மை அழைக்கிறார். நாம் ஏன் வெளியே இருக்கிறோம் என்றால், நமக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை. இது கூடவா தெரியவில்லை.

உலக வரலாற்றிலே உள்ள விடுதலை வீரர்களின் வரலாறுகளைப் படித்துப் பார்த்து-அவர்கள் கூறியவைகளை உணர்ந்து—சிந்தித்துத் தெரிந்த பிறகுதான் நாம் விடுதலைப் போராட்டத்தில் இறங்கியிருக்கிறோம். நம் முயற்சியில் வெற்றியும் பெற்றே தீருவோம். உள்ளபடியே திராவிட நாடு பிரியுமா? பிரியாதா என்று யாரும் சந்தேகப் படவேண்டாம். ஜின்னா பாகிஸ்தான் கேட்ட போது, காங்கிரஸ் காரர்கள் என்ன பதில் சொன்னார்கள்?

நேருவையே ஜின்னா (He is a School boy) 'அவன் ஒரு பள்ளிப் பையன்' என்று கூறினர். ஜின்னா கோரிய நாட்டைப் பெற்றார். அதுபோலவே நாமும் பெறுவோம்.

விடுதலை வீரர்களைத் தூற்றாத மக்களில்லை. தூற்றினார்கள்; அவர்கள் பொறுத்துக்கொண்டார்கள். நம்மையும் பலர் தூற்றுகிறார்கள் என்றாலும் நம் பணியைச் செய்வோம். தூற்றுவதினால் நம் விடுதலை வேட்கை தீர்ந்துபோகாது.

# பைத்தியங்களுக்கு வைத்தியர்கள் நாம்!

## சேலத்தில் அண்ணாவின் அறிவுரை

அன்புள்ள தலைவரவர்களே!
தோழர்களே !!

இரண்டு நாட்களாக சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு விமரிசையாக நடந்து, சில கருத்துக்களை நான் சொல்லுகின்ற இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளது. இரவு நடைபெறப் போகும் நாடகத்துடன் மாநாடு முடிகிறது. இங்கு வந்த எல்லோரும் நல்ல உணர்ச்சி பெற்று, இல்லம் திரும்ப இருக்கிறார்கள்.

இந்த மாநாட்டிற்காகத் தோழர்கள் இரவு பகலுமாக உழைத்திருக்கிறார்கள் சுற்றுப் புறங்களில் சென்று கிளைக் கழகங்களின் பேராதரவைத் திரட்டி யிருக்கிறார்கள். மாநாட்டு அலங்காரங்கள், அமைப்பு முதலியன, மற்றவர்களும் நம்மைப்பார்த்துக்கற்றுக்கொள்ளக் கூடியஅளவில் அமைந்திருக்கின்றன. வந்தவர்களை, முகத்தைச் செந்தாமரையாக்கி வரவேற்றிருக்கின்றனர்.


நம்முடைய அமைப்புகளை நல்ல முறைகளைக் கண்டு, இவ்வளவு பெரிய மாநாட்டை எப்படி சிறந்த முறையில் முடிக்கின்றனர் என்று மற்றவர்கள் எண்ணுவார்கள்! மாநாட்டிற்காக இந்த மைதானத்தைக் கேட்கும்போது — பந்தலுக்காக ஓலைகள் வந்திறங்கும போது —பந்தல் போட்டு கீற்றுக்கள் வேய்ந்தபோது—எந்த தைரியத்தில் இப்படி செய்கிறார்கள் என்று எண்ணுவர், மாற்றார்.

இவர்களிடம் மிட்டா; மிராசுக்கள் ஏது? செல்வந்தர்கள் இல்லையே! என்ன பலத்தை நம்பி செய்கிறார்கள்? இதைத்தான் மற்றவர்கள் அறிய விரும்புவார்கள். இவ்வளவையும் நமக்கு மக்களிடம்இருக்கும் செல்வாக்கை வைத்துத்தான் செய்கிறோம். தோழர்கள் கட்டணமாகத் தரும் காசைக்கொண்டுதான் நிறைவேற்றுகிறோம். ஆங்காங்கு நம் தோழர்கள் வசூலித்த சிறு நிதியைக் கொண்டுதான் நிறைவேற்றுகிறோம்.

நமக்கு வேறு வசதிகளில்லை. ஒரு நல்ல தினசரிகூட கிடையாது. 'நம் நாடு' உண்டு என்றாலும், அதுவும் முழுப் பொலிவுடன் இல்லை! சாதாரணமான ஒரு தினசரி, சில வார இதழ்கள் — இவற்றைக் கொண்டே நாம் சிறப்பாகச்செய்து முடிக்கிறோம்.

மாநாட்டு கணக்கிலே இந்த மிட்டா 500 ரூபாய் கொடுத்தார்; அந்த ஜமீன்தார் 1000 ரூபாய் கொடுத்தார் என்றிருக்காது. நீங்களாகத் தேடி வந்து கொடுக்கும் கட்டணம்—சிறு உதவி நிதி—இவற்றைக் கொண்டே பெரிய மாநாடு கூட்டுகிறோம்! வெற்றிகரமாக நடத்தி முடிக்கிறோம்.

நம்மிடையே இருப்பவர்கள யாரும் பெரியவர்களல்ல! பண்டிதர்களல்ல! சிலர் பட்டம் பெற்றிருக்கிறார்கள்! 'பரீட்சையில் தேறாதவர்கள்கூட—நம்மிடை உண்டு! இவர்களைத் தவிர மாய வித்தை தெரிந்தவர்கள் யாருமில்லை. மந்திரக்காரர்களில்லை. ஆனால் கொள்கை வீரர்கள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு மக்கள் இயக்கம். இதை யாரும் மறந்துவிடக்கூடாது.



அறிஞர் அண்ணா

நாம் கேட்கும் திராவிடத்தைப் பற்றித் தோழர்கள் விளக்கம் தந்தார்கள். நெடுஞ்செழியன் விளக்கமாக நாட்டு வளத்தைக் கூறினார். நிலத்திலே கனிப் பொருள்கள். மலையிலே அகில்; கடலிலே முத்து; சுற்றிலும் வயல்கள்; அதன் மத்தியிலே உழைப்போர்; அவர்களிடம் வேதனை; வேதனையால் கண்ணீர்; உழைப்பால் வியர்வை; இவ்வளவையும் காட்டி, வளங்களைக் கூறி நாட்டைக் கேட்கிறோம்.

நான் சென்ஸ் என்று நம்மை இகழ்ந்த நேரு, சிதம்பரத்திற்கு வந்த போது வாய்த் துடுக்காக 'பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட வேண்டியவர்கள்' என்று கூறினார். ஆம்! பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட வேண்டியவர்கள்தான். அங்கே, இந்த ஆட்சியிலே சித்தம் கலங்கி யிருப்பவர்களுக்கு வைத்தியம் செய்ய நம்மை அனுப்பத்தான் வேண்டும்! நாம் சிகிச்சை செய்யும் டாக்டர்கள்! இங்கே வெளியே இருக்கும் சித்தம் தெளிவில்லாதவர்களுக்கு வைத்தியம் செய்து கொண்டிருக்கிறோம். தைரியமிருந்தால் எங்களை உள்ளே அனுப்பு!

எங்களை சிறைக்குள் அனுப்பினாய்' சிறையிலிருந்து வெளிவரும் கைதிகளெல்லாம், திராவிட முன்னேற்

றக் கழகத்தில் சேரட்டுமா? சேரட்டுமா? என்று கேட்கிறார்கள்! அவர்கள் கை கால்களை உடைக்கத் தயங்காதவர்கள்; கொலைக் கஞ்சாதவர்கள்—அதை சாதாரணமாகக் கருதுபவர்கள்! இதை நினைவிலிருத்துங்கள். ஆனால் தி. மு. க. கண்யம் நிறைந்த ஸ்தாபனம்!

நம்மை பித்தர் என்று தூற்றினால் தோழர்கள் ஆத்திரப்படத் தேவையில்லை. ஆனால் இவரைப் பற்றி உலகிலிருப்பவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை கவனியுங்கள். நேருவாவது நம்மை—சிதம்பரத்தில், கட்டிடத்திற்குள் பாதுகாப்பாக போலீஸ் மத்தியிலிருந்து கொண்டு பைத்தியக்காரர்கள் என்றார். சொல்லி இரண்டு நாளைக்குள், பாகிஸ்தானிலுள்ள அப்துல் ராத் நிஸ்டார் நேருவை 'மண்டைக் கர்வம் பிடித்த 'கப்சா' விட்டுத்திரிபவன்' என்று கூறிவிட்டார்.

ஆசியாவின் முடி சூடா மன்னரை 'கப்சா' விட்டுத் திரிபவன் என்று நிஸ்டார் கூறிவிட்டார். ஏன் சொல்ல மாட்டார்? ஒரு அரசியல் தலைவன் கண்யமாக நடக்கத் தவறினால் உலகத் தலைவர்கள் ஏன் அவரைத் தூற்றமாட்டார்கள். 'தன் வினை தன்னைச் சுடும், என்னும் மொழி உண்மையாகிறது. நேரு ஆணவத்தோடு பேசி முடிப்பதற்குள் நிஸ்டார் அவரைக் கண்டித்து விட்டார். பாகிஸ்தானுக்கும் நமக்கும் ஏதாவது இரகசிய ஒப்பந்தம் இருக்குமோ என்று பேசிக் கொள்கிறார்கள். ஆனால் நல்லவேளையாக அப்படி ஓர் ஒப்பந்தம் இதுவரையில் ஏற்பட வில்லை. எதிர் காலத்திலே 'திராவிடர் இயக்கம் கேட்பதை இவர் ஏன் மறுக்கிறார்' என்று நிஸ்டார் கேட்கக் கூடும்.

பண்டித நேருவுக்கு இனி வளர்ச்சி,கிடையாது. சக்தியிலும்சரி ஆயுளிலும்சரி! ஒரு மனிதன் வளர, வேண்டிய அளவு வளர்ந்து விட்டார்; நேரு மலைபுச்சியில் நிற்கிறார் இனிமேலே ஏற இடமில்லை.

அரசியல் அதிகாரம் ஒரு மணல் மேடு. அதில் சிறிது ஜாக்ரதையோடு ஏறவேண்டும். சிகரத்திலே நின்று பார்த்தால் வானம் கைக்கு எட்டுவதைப் போல தெரியும். பூமியைப் பார்த்தால், பாதாளத்தில் இருப்பதைப் போல் தோன்றும். ஆனால் கொஞ்சம்சறுக்கிவிட்டால்போதும்; கீழே வர வெகு நேரம் பிடிக்காது.

சியாங் கே ஷேக் எப்படி யிருந்தார்! அமெரிக்காவிலிருந்து அவருக்காகத் தனி விமானம் பறந்து வந்தது! சியாங்கின் மனைவியின் புன் சிரிப்புத் தவழும் போட்டோவை அமெரிக்கப் பத்திரிகைகள் மூன்று கலரில் வெளியிட்டு மகிழ்ந்தன. ஆனால் இன்று அவர் எங்கே? அவருடைய கோமிண்டாங் கட்சி எங்கே? அந்தோ பரிதாபம்! சியாங் பார்மோசா தீவிலே இருந்து கொண்டு வானத்தை அண்ணாந்து பார்க்கிறார், மேலே விமானம் வருகிறதா என்று! கடற்கரையைக் கவலையோடு கவனிக்கிறார், கலம் வருகிறதா என்று! அதுவும் நைந்து போன உடைகளோடு, துருப்பிடித்த துப்பாக்கிகளோடு!

சியாங்கை விட சிறந்தவரா இந்த ஆசியாவின் ஜோதி?

நேரு ஆடம்பரமாக பிறந்தார். தங்கத் தொட்டிலில் தாலாட்டப்பட்டார். வெள்ளி வட்டிலில் பாலூட்டப்பட்டார். மோதிலாலின் பணத்தால் ஆங்கில தாதிகளால் வளர்க்கப்பட்டார். சீமையிலே சிறந்த கல்லூரியிலே படித்தார். மோதிலாலின் குமாரர் என்ற செல்வாக்கோடு அரசியலில் அடியெடுத்து வைத்தார். காங்கிரசிலே, காந்தியாரின் செல்லப்பிள்ளையாக — வாரிசாக இருந்தார்; உயர்ந்தார்!

அப்படியா நாம்? நம் குலம் அப்படிப்பட்ட தல்லவே! நம் குடும்பம் அவ்வளவு செல்வாக்குள்ள தல்லவே! நம் தலைவரே நம்மை வெறுத்தார்! நாம் யாருக்கு வாரிசு? வாரிசாக வேண்டிய நானே வெளியேற்றப்பட்டேன்; தூற்றலுக்கிடையே வளர்ந்தோம்! ஓநாய்கள் நம்மைப் பார்த்து ஊளையிட்டன! இன்று கூடத்தான் சிலபல்லுடைந்த நரிகள் கத்துகின்றன!

என்றாலும் நாம் வளர்கிறோம். பிரிந்துவந்த தந்தையை மறக்கவில்லை. அங்கே யிருப்பவர்கள் 'எப்போது ஒன்று சேர்ந்து விடுவார்களோ' என்று ஆயாசப்படுகின்றனர்.

தலைமையுரையிலே இளம் வழுதி குறிப்பிட்டார் இனியும் நம் கட்சி துரோகிகளுக்குத் துணை போகக் கூடாது என்று! அடுத்த தேர்தலில் நாம் கலந்து கொள்ளவேண்டும் என்றார்.

நான் எண்ணினேன் "எவ்வளவு அருமையான வாசகம்! ஆனால் எவ்வளவு ஆபத்தான வாசகம்" என்று!

ஆபத்து என்று நான் குறிப்பிடுவது தேர்தலிலே வெற்றி அடைய முடியாது என்பதற்காக அல்ல! மக்கள் நமக்கு ஓட்டுப்போடமாட்டார்கள் என்பதற்காகவும் அல்ல! ஆனால் ஒரே ஒரு தடை! தந்தை பெரியார் இதற்குத் தடை சொல்லாமலிருக்க வேண்டுமே? அதுவல்லவோ நம் கவலை. 'இவர்கள் பிரிந்து போனார்களே அது இதற்குத் தான்' என்று அவர் பேசாமலிருக்க வேண்டுமே!

பெரியார் மட்டும் "இவர்கள் தேர்தலிலே நிற்கட்டும்! வெற்றி பெறுகிறார்களா பார்ப்போம்" என்று கூறட்டும். அனுமதி மட்டும் தந்துவிடட்டும். தி. மு. கழகத்தை அரசோச்ச செய்கிறேன்! அடுத்த மந்திரி சபையை நம் சபையாக்குகிறேன்.

சட்டசபையுள் நுழைந்தால், திராவிட நாட்டைப் பெற முடியுமா? என்று கேட்கிறார்கள். ஏன் முடியாது? நம் மந்திரி சபையின் முதல் தீர்மானமே நம்மைச் சிறையில் தள்ளுவதாக இருக்கும்.

வரிகள் எல்லாம் இங்கேயே செலுத்தப்படவேண்டும், மத்திய சர்க்காருக்குப் போகக் கூடாது என்று ஒரு சட்டம் நிறைவேற்றியதும், மத்திய அரசாங்கத்திலிருந்து ஒரு தாக்கீது வரும். நீ எப்படி இந்தச் சட்டத்தைக் கொண்டுவரலாம் என்று கேட்கும். மக்கள் வாங்


## C. N. அண்ணாதுரை
### எழுதியவை

| | | |
|---|---|---|
| வெற்றி முரசு | 1 | 0 |
| மகா கவி பாரதியார் | 0 | 8 |
| தீ பரவட்டும் | 1 | 0 |
| தேன் துளிகள் | 1 | 0 |
| புராண மதங்கள் | 1 | 0 |
| மறு மலர்ச்சி | 1 | 0 |
| குமாஸ்தாவின் பெண் | 1 | 0 |
| தேவ லீலைகள் | 0 | 8 |
| நமது முழக்கம் | 0 | 8 |
| அண்ணாவின் உவமைகள் | 0 | 8 |

குகிற வரிகள் இந்த நாட்டிலேயே தங்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆகையால் அப்படி ஒரு சட்டம் செய்தோம் என நாம் விளக்கம் தருவோம். அதற்குப் பதில் ஒரு தந்தி வரும். நமக்கல்ல! 'கவர்னருக்கு! கவர்னரே இந்த மந்திரி சபையைக் கலைத்துவிட்டு வேறு சபை அமை' என்று.

மீண்டும் நாம் தேர்தலில் நிற்போம்! வெற்றி பெறுவோம்! சட்ட சபைக்கு வருவோம்! ஒருமுறை மந்திரி சபையைக் கலைக்கலாம்! இரண்டு முறை கலைக்கலாம்! மூன்றுமுறை கலைக்கலாம்! எத்தனை முறைதான் மந்திரி சபையைக் கலைத்துக்கொண்டிருக்க முடியும்? வேண்டுமானால் சட்டசபையைக் கலைத்து விட்டு நாட்டைக் கவர்னர் ஆட்சி செய்யலாம். அப்போது திராவிடத்திலே வரி கொடா இயக்கம் நடத்துவோம் "ஆளுவது கவர்னர்! அவருக்கு நாங்கள் வரி கொடுக்க மாட்டோம்" என்று மக்கள் கூறுவார்கள். எதற்கும் வளைந்து கொடுக்காத சர்க்கார் வரி கொடா இயக்கத்திற்கு வளைந்து கொடுத்தே தீரவேண்டும்.

பெரியார் ராமசாமி மட்டும் நம் சந்தேகத்தைத் துடைக்கட்டும். அவர் நம்மைத் தூற்றினால், பதிலுக்கு நாம் தூற்றக் கூடாது. பதில் கூறக் கூடாது. நம் உள்ளத்தை அவர்கள் சந்தேகிக்கலாம். நல்லதை நயவஞ்சகம் என்னலாம், நம் துடிப்பைநடிப்பு என்று கருதலாம். ஆனாலும் நம்மீது சுமத்தப் பட்டிருக்கும் மாசு துடைக்கப் படவேண்டு மென்பதற்காகத் தான் இத்தனையும் செய்கிறோம். சந்தேகம் நீங்கும்—நீக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

ஆகையால் தலைவர் கூறிய அந்த யோசனையை பெரியார் ராமசாமிக்குச் சமர்ப்பிக்கிறேன், அவர் யோசித்துப் பார்த்து பதிலளிக்கட்டும்.

இன்று திராவிட நாட்டை வெறுப்பவர்களை நினைத்தால்—சிலவற்றை விட்டுக்கொடுத்து நம்மை ஆதரிக்கச் செய்யலாம். 'திராவிட நாடு திராவிடருக்கே! சென்னை ஆந்திரர்க்கே' இப்படி கூறினால் பிரகாசம் பேசமாட்டாரா திராவிட நாடு வேண்டும் என்று.

'திராவிட நாடு திராவிடர்க்கே நாஞ்சில் நாடு கேரளர்களுக்கே' இப்படிச் சொன்னால் பட்டம் தாணுப் பிள்ளைகள் திராவிட நாட்டுப் பிரிவினை நிச்சயம் ஏற்பார்கள்.

'திராவிடநாடு திராவிடர்க்கே! லாபம் முதலாளிகளுக்கே!' என்றால் கோயமுத்தூர் முதலாளிகள் நாளைக்கே 'இந்து'வைத் தோற்கடிக்கும்படி ஒரு பத்திரிகை ஆரம்பிக்க மாட்டார்களா?

இவ்வளவும் தெரியும்? ஆனாலும் நாம் நம் இலட்சியங்களை விட்டுக் கொடுக்க மாட்டோம்.

'எத்தனை நாளைக்கு இப்படி பேசிக்கொண் டிருப்பது? விடுதலைக் கொடியை உயர்த்த வேண்டாமா?' என்றார் சம்பத்!

விடுதலை கொடியை உயர்த்தத் தான் வேண்டும். அதற்கு முன் நம் திட்டங்கள் மக்களுக்குத் தெளிவாக்கப் படவேண்டும் திட்டங்கள் தெளிவாக்கப் படாததினால்தான் காங்கிரஸ் இன்று இந்நிலையி லிருக்கிறது.

நாம் திராவிடத்தில் ஆதிக்கக் காரர்கள் வாழ விட மாட்டோம். வாங்குகிற திராவிடத்தை அழகப்பச் செட்டியார்களிடம் விட்டுவிட மாட்டோம். திராவிட நாட்டில் மக்களுக்கு உணவு—உடை—உறைவிடம் வசதி செய்து தரப்படும். இல்லத்திலே மகிழ்ச்சி — வாழ்விலே தெம்பு—இவை நிச்சயம் திராவிட நாட்டிலே இருக்கும்.

நாம் கேட்பது திராவிட சமதர்ம சோஷலிச குடியரசு! அங்குகுருட்டு நம்பிக்கை விரட்டி யடிக்கப்படும். இருட்டு மறைந்து அறிவொளி யிருக்கும். நம் கொள்கைகளைப் புரிந்து கொள்ளாதவர்களுக்குப் புரிய வைத்து — பக்குவப் படுத்தி திராவிட நாட்டைத் தனி நாடாக்க வேண்டும்.

நண்பர்கள் ராமசாமி படையாச்சியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். வருகிற தேர்தலிலே அதே கடலூர் தொகுதியிலே தோழர் கோவிந்தசாமியை நிற்க வைத்து ராமசாமி படையாச்சியைத் தோற்கடிக்கப் போகிறேன்! நீங்கள் வேண்டுமானால் பாருங்கள்! நான் எதையும் சொல்லமாட்டேன். சொன்னால் செய்து காட்டுவேன்.

இன்னும் வட ஆற்காடு, திருநெல்வேலி, நாஞ்சில் நாடு முதலிய இடங்களில் மாநாடுகள் நடைபெற விருக்கின்றன. இப்போதிருக்கும் திட்டப்படி சென்னை மாநில மாநாட்டை அடுத்த ஜனவரியில் திருச்சியில் நடத்தலாம் என்றிருக்கிறேன்.

இதற்கிடையில் புதிய மந்திரி சபையைப் பற்றிக் கூறவில்லையே என்று கேட்கலாம். வந்திருக்கிற மந்திரி சபை ஆணா, பெண்ணா, அலியா—இன்னும் தெரியவில்லை. 5-ந் தேதி தான் அது கல்வி திட்டத்தைப்பற்றி முடிவு செய்யப் போகிறது.

புதிய மந்திரி சபை அதை வாபஸ் வாங்கினால் பாராட்டுவோம். துள்ளிக் குதித்தால் தலையில் தட்டி அடக்குவோம். வேடிக்கை செய்தால் பக்கத்தில் நின்று பார்ப்போம். மகான் ஆச்சாரியரை அடக்கிய நமக்கு மனிதர் காமராஜர் என்ன பிரமாதமா?

புதிய நாடகக் கம்பெனியின் திரை விலக வில்லை, நடிகர்கள் சிலர் தெரிகிறார்கள், அதுவும் நிழலுருவிலே! திரை விலகட்டும்! பிறகு பார்ப்போம்.

தீர்மானங்களை மக்களுக்கு விளக்குங்கள், துண்டு வெளியீடு மூலம் பரப்புங்கள்.


சிறுவர் சிறுகதைகள்

பூவண்ணன் எழுதியவை

☆

| | |
|---|---|
| பச்சைப் பாவாடை | 0—8 |
| பொம்மை வண்டி | 0—8 |
| சேரநாட்டு வீரன் | 0—8 |
| பாபு சர்க்கஸ் | 0—8 |
| திருக்குறள் கதைகள் I | 0—8 |
| திருக்குறள் கதைகள் II | 0—8 |
| திருக்குறள் கதைகள் III | 0—8 |
| திருக்குறள் கதைகள் IV | 0—8 |
| வேடிக்கைக் கதைகள் I | 0—8 |
| வேடிக்கைக்கதைகள் II | 0—8 |

ஸ்ரீமகள் கம்பெனி

சென்னை-1.

## இளம் எழுத்தாளர்களுக்கு!

# இலக்கணப் பகுதி ஆரம்பமாகிறது

பண்டைக் காலம்போலல்லாது கல்வி ஆர்வமும், கலை ஆர்வமும் மக்கள்பால் தலைதூக்கி நிற்கும் இக்காலம் மகிழ்ச்சிக்குரிய காலமேயாம்.

புகழுணர்ச்சியால் உந்தப்பட்டுப் பொங்கி வழியும் ஆர்வ மிகுதியினல் கதையும், கட்டுரையும், கவிதையும் சின்னஞ்சிறு எழுத்தாளர்கள் எழுதத் துவங்கி விட்டனர். இஃது பெருமைப்படக் கூடிய காரியமே.

ஆயினும்,

மொழியின் தரம் குறையாமலும், முன்னோர் வகித்துள்ள இலக்கணம் என்னும் ஒரு வரம்புக்கு மீருமலும் இருக்குமாறு கவனித்து எழுதப்படல் வேண்டும். "செய்வன திருந்தச் செய்" என்னும் மூதுரைக் கிணங்க, எழுதுபவற்றைப் பிழையறச் செவ்வனே எழுத வேண்டும். இதை ஆண், பெண் இருபால் எழுத்தாளர்களும் நன்குணர்ந்து நடைமுறையிற் கொண்டு வரப் பழகிக் கொள்வார்களே யானல், பிழை யென்னும் தொத்து நோய், மொழி என்னும் உடலிற் பரவாமல் தடுத்து, நூல் என்னும் நாட்டைத் தூய்மைப் படுத்தியவர்களாவார்கள்.

இதனல் எழுத்தாளராகிய ஒவ்வொருவரும் ஓரளவுக்காவது இலக்கணம் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

அநேகமாக, கட்டுரை, கதை எழுதுபவர்கள் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றிலக்கணங்கள் தெரிந்திருந்தாலே போதுமானது.

ஆனல்,

கவிதை எழுதுபவர்களோ, அம்மூன்ருேடு யாப்பு, அணி என்னும் இரண்டையும் சேர்த்து ஐந்திலக்கணங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். இக்குறையை நீக்க 'கலைமன்ற'த்தில் 'இலக்கணப் பகுதி' ஒன்று அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரப் போகிறது. பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் உபயோகப் படக்கூடிய முறையில் அமைந்திருக்கும். அன்பர்கள் படித்துப் பயன் பெறுவீர்களாக.

பாவலர் - வேலாயுதசாமி.

கலையுலகில் புதுப் புரட்சி

# கலை அரங்கம்

கலை முன்னேற்ற மாத இதழ்

ஆசிரியர்: கலைச்செல்வன்

விலை 8 அணா

மே மாதம் முதல் வெளிவருகிறது.

- கலைமன்றம் அளவு 48-பக்கங்கள் கிளேஸ் தாள், உள்ளே நிறைய படங்கள் இவைகளுடன் வெளிவருகிறது.
- கலையுலகில் நிலையான ஒரு இடத்தை தேடிப்பிடிக்க வெளிவருகிறது.
- கன்னித் தமிழுக்கு நல்லதொரு பணிபுரிய மே மாதம் முதல் வெளிவருகிறது.
- கலை சம்பந்தமான எல்லா விஷயங்களும் இதில் இடம் பெறுகிறது.
- கலை அரங்கம் உலகைக் காட்டும்; கலை அறிவை ஊட்டி வளர்க்கும் கன்னித் தமிழேடு.
- உடனே வாங்குங்கள்! சந்தாதாரராகுங்கள்! ஏஜெண்டு தோழர்களே முன் பணத்துடன் எழுதுங்கள்! நல்ல சமயம்! பொன்னான வாய்ப்பு! நழுவ விடாதீர்கள்!

கலை வளர்க! கலை வாழ்க!!

விபரங்களுக்கு:

## கலை அரங்கம்

122, வரதாமுத்தியப்பன் தெரு,

P. B. No. 275 :: சென்னை-1


Printed and Published by S. Francis, at Srimagal Press, 122, Varadamuthiappan Street, Madras-1. Editor:- Palvannan.